உ

சிவமயம்

யாழ்ப்பாணம் — திருநெல்வேலி

# ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்

# சரித்திரம்

★
★★

வெளியீடு :
திருநெல்வேலி,
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபை,
யாழ்ப்பாணம்.

1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

யாழ்ப்பாணம் — திருநெல்வேலி

# ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் சரித்திரம்

ஆக்கியோன் :

பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம்

அவர்கள்

வெளியீடு :

திருநெல்வேலி

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் ஞாபகார்த்தச் சபை,

யாழ்ப்பாணம்

1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : யாழ்ப்பாணம் - திருநெல்வேலி
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் சரித்திரம்

பிரதி : 500

வெளியீடு : திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர்
ஞாபகார்த்தச்சபை - 1997

பதிப்புரிமை : திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர்
ஞாபகார்த்தச் சபைக்குரியது

ஆக்கியோன் : பல்கலைப் புலவர்
க. சி. குலரத்தினம் அவர்கள்

விலை : ரூபா 100-00

அச்சுப் பதிவு : திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வெளியீட்டுரை

ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியில் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் அவர்கள் அவதரித்தார்கள்.

வசனநடை கைவந்த வல்லாளர், சைவசமய மகோத்தாரணர் என்றெல்லாம் பாராட்டப்பட்டவரான யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீஞானப்பிரகாச முனிவர் அவர்களின் வழிவந்தவரேயாவர்.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் அவர்களையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களையும் சைவத்தமிழ் உலகின் ஞானக்கண்கள் என்று சான்றோர்கள் பாராட்டுவதுண்டு.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தெற்கு வீதியில் மணிமண்டபம் அமைத்து அம்மண்டபத்தில் நாவலர் பெருமானின் சிலையை நிறுவியும் நினைவு முத்திரையை வெளியிடு செய்தும் பிறந்ததின, நினைவுதின விழாக்களைக் கொண்டாடியும் விசேட மலர்களை வெளியீடு செய்தும் நாவலர் பெருமான் அவர்களை இந்த நாடே பாராட்டியது; பாராட்டுகின்றது.

நாவலர் பெருமான் அவர்களைப் போல அவர்களது முன்னோர்களில் ஒருவராகவும் சிறந்த கல்விமானாகவும் விளங்கிய திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் அவர்களையும் கௌரவிக்கவேண்டும் என்றசிந்தனை பலரது உள்ளங்களிலும் முளை கொண்டது. அதன் விளைவாகவே திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபை தோற்றுவிக்கப்பெற்றது. இச்சபை ஆரம்பித்த காலத்திலிருந்து முனிவரவர்களின் குருபூசை வருடந்தோறும் சிறப்பாக நடந்து வருகிறது. அவர் பற்றிய உரைகளும் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரவர்களது சேவையைச் சைவ உலகம் அறியும் முகமாக அவர்களது சரித்திரத்தை நூல் வடிவில் வெளியிட வேண்டுமென்ற தீர்மானத்தைக் குறித்த ஞாபகார்த்தச்சபை எடுத்தது. சபையின் செயலாளராக அப்பொழுது பணியாற்றிய ஆசிரியர், திருமுறை இசைமணி திரு. வே. தம்பிஐயா அவர்கள் நூல்வெளியீடு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளோ எண்ணிறந்தன.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் அவர்களின் குருபூசைத் தினங்களில் பிரசங்கித்தவர்களில் பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள் முக்கிய இடத்தைப் பெறுவார்கள். ஞானப்பிரகாச முனிவரவர்களின் சரித்திரத்தை எழுதி உதவ முன்வந்தார்கள். அவர்களது கருத்துக்கள் அப்படியே நூல் வடிவம் பெற்று வெளி வருகின்ற இச்சந்தர்ப்பத்தில், அவர்கள் தேவருலகில் இருந்தவாறே ஆசிகூறி எம்மை மேலும் நல்வழிப்படுத்துவார் என்பதே எங்கள் நம்பிக்கை. அன்னவரது சேவையை உலகம் என்றும் பாராட்டிக் கொண்டே இருக்கும்.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரம் என்னுந் தலைப்பைத் தாங்கி இந்நூல் வெளிவருவதற்குக் குறித்த ஞாபகார்த்தச் சபையினரும் நலன் விரும்பிகளும் பெரிதும் உதவியாக இருந்தார்கள். அழகாக அச்சிட்டு உதவியவர்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர். அனைவருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபை தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றது.

**ஆ. மகாலிங்கம்**
**தலைவர்.**

**திருநெல்வேலி, ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்**
**ஞாபகார்த்தச் சபை,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**
**10 - 03 - 1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# எம்துரை

சிவபூமி என்னும் ஈழநாட்டின் வடபாலமைந்த வீணா கானபுரம் என்னும் யாழ்ப்பாணத்தில் சாலிவாடிபுரம் என்னும் திருநெல்வேலிப் பதியில் பழைய காலத்தில் குடியேறிய பாண்டிமழவர் குலத்திலே வந்த காராள பிள்ளை ஞானப்பிரகாசர் என்பார், பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலே வரலாறு படைத்த பழஞ் சைவத் தமிழ்ப்பெருமகனாராவர்.

சைவசமயத்தைத் தவிரப் பிறநாட்டுச் சமயத்தை யறியாத தமிழருக்கு 1621ஆம் ஆண்டு முதல் 1658ஆம் ஆண்டுவரை ஒரு சோதனைக் காலமாயிருந்த போது, இக்கால எல்லையில் எமது எல்லையுள் வலோற்கார மாகப் புகுந்து வன்மைகாட்டி, எம்வாழ்வையும் வளப் பையும் நாட்டு வளத்தையும் கெடுத்த போத்துக்கேயர் என்னும் பறங்கியரின் கெடுபிடிகள் எம்மை வெகுவாகச் சீர்குலைத்தன.

போத்துக்கேயரின் உணவுக்காகப் பகாசுரன் வழியில் வீடுகள் தோறும் பசுக்கள் கொடுக்க வேண்டிய நியதியில் ஞானப்பிரகாசர் தமதுநாளில் அது கொடாது தலைமறைவாகித் தமிழ் நாடேகி முனிவராய்ப் பணி செய்த வரலாறே இதுவாகும்.

ஞானப்பிரகாசரைப் பற்றி எம்மவர் பலர் முன்னர் நன்றாக அறிந்து அவரை வெகுவாகப்போற்றி வந்தனர். அவர்பரம்பரையில் வந்தவரே திருநெல்வேலி வேத வனத்தார் என்பர். வேதவனத்தாரின் மகள் சிவகாமி பெற்றெடுத்த செல்வமே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்றால் இது எமக்குப் பெறலரும் பரிசுமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசரைப் பற்றித் திருமயிலை ஐம்பு லிங்கம்பிள்ளை, மேலைப்புலோலி சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை முதலானோர் சிறுசுவடிகளாக எழுதிப்போற்றினார்கள். அன்றுநிலவிய அகில இலங்கைச் சைவமகாநாட்டின் செயலாளராயிருந்த சைவப்பெரியார் மு. மயில்வாகனம் அவர்கள், ஞானப்பிரகாசருக்குத் திருநெல்வேலியிலே அவர் வாழ்ந்த வளவிலே சிலை வைப்பதற்கு முயற்சி எடுத்ததும் உண்டு.

இவையாவும் இவ்வாறாக, நாம் எங்கள் நாட்டில் செந்தமிழ் வளர்த்த செம்மல்களையும், சைவம் வளர்த்த சான்றோர்களையும் எழுதிவரும் வேளையில், திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் பெயரால் நிலவும் சபையினர் பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலில் ஞானப்பிரகாசரைப் பற்றிப்பலமுறை எம்மைப்பேசுமாறு பணித்தார்கள். அவர்கள் பணிப்பைச் சிவப்பணியாக ஏற்றுப் பேசிய வேளைகளில் தயாரித்த தகவல்கள் யாவும் சேர ஒரு நூலாக வேண்டும் எனச்சபையார் கருத்துத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தே கருவாகி வளர்ந்து இந்த நூல் இவ்வாறு உருவாகியுள்ளது. இதில் பிழைகள் யாவும் என்னுடைய பிள்ளைகள். முத்துக்கள், மணிகள் இருந்தால் அவை யாவும் எம் முந்தையோரின் தேட்டங்கள். ஏதோ ஒரு வகையில் இந்நூல் சைவத் தமிழருக்குப் பயன்படலாம் என்பது எமது தாழ்மையான கருத்து.

கந்தமடம். **க. சி. குலரத்தினம்**
01 - 10 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதிப்புரை

''பசுக்கொலைக்கஞ்சிப் பரதேசம் போனவர் ஞானப்பிரகாசர். இலங்கையைப் பறங்கியர் ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பறங்கித் தலைவனும் பரிவாரமும் விழுங்குவதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொரு பசு முறைதவறாது கொடுக்க வேண்டுமென்பது தலைவிதி. இக்கொடுங்கோன்மைக்குத்தீர்வு காணப் பரதேசஞ் சென்றவர் யாழ் - திருநெல்வேலி ஞானப்பிரகாசர்.

ஞானப்பிரகாசர் சென்றடைந்த பரதேசம் தேசஸ்மிக்க அம்பரதேசம்; சிதம்பரம்.

சிதம்பரத்திலே தேவிசந்நிதியில் நாற்பது நாள் உபவாசம் இருந்து கடுந்தவம் புரிந்தார் ஞானப்பிரகாசர். தேவியின் அநுக்கிரகம் கிடைத்தது. அநுக்கிரகித்தவாறு கௌடதேசம் போய் வேதாகம சமஸ்த சாத்திர பாரங்கதராயினார் ஞானப்பிரகாசர். அதன் மேல் திருவண்ணாமலை ஆதீனத்திற் காஷாயம் பெற்று முற்றுந்துறந்த முனிவர் ஆயினார்''

''ஞானப்பிரகாசர்'' என்ற கட்டுரையில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை உபாத்தியாயரவர்கள் நாவலர் பெருமானால் தாபிக்கப்பெற்ற சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக இருந்தவர். ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவர்கள் சிதம்பரத்தில் மேற்கொண்ட தொண்டுகளை நன்கு அறிந்தவர். உபாத்தியாயரவர்கள் தாமியற்றிய ஈழமண்டல சதகத்தில் ஞானப்பிரகாச முனிவரின் கல்விச் சிறப்பினை விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

'' ......... சிதம்பரத் திறையிறைவி தாள்புக்கொ
 ரேழேழு நாளுபவசித்
தூர்மேவு கௌடத்தெ முமையம்மை யருளுந்த
 வுற்றாரியக் கடல்கடந்
தும்பர்குரு வின்மகா பண்டிதனு மாய்ச்சனன
 முற்றபய னுறவுமையருட்
சார்மேவு சைவத் தனித்துறவி யாயினான் .........''

என்று பாடுகின்றார் ம. க. வேற்பிள்ளைப் புலவர் அவர்கள்.

யாழ் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசர் பற்றிய ஒரு கட்டுரையைத் தமிழ்நாடு திரு. செ. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களும் எழுதியுள்ளார்கள்.

திரு. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் தமது கட்டுரையிற் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். '' நமது முனிவர்,

''எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தென்நாளோ''

என்னும் தாயுமானவர் பாடலுக்கு உதாரணமாக விளங்கியவரென்று கூறலாம். இத்தகை பெரியோர்களின் அருஞ்செயல்களைப் போற்றுவதோடமையாது, அவற்றை யாம் பின்பற்றி எமது வாழ்நாளைப் புனிதப்படுத்துவோமாக. அவருடைய குருபூசையையும் நடத்த வேண்டிய ஏற்பாடு செய்தல் உசிதம். சிதம்பரத்திலும் திருநெல்வேலியிலும் நடத்தலாம்.''

வடமராட்சியில் அல்வாயைச் சேர்ந்த திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய ஈழமண்டல சதகத்தில் ''புண்ணியவானென்ற ஞானப்பிரகாசர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாவலர் பெருமானாலே துதிக்கப்பட்டவரும் பூரண சிவாநுபூதிமான் என்று சங்கரபண்டிதராலே கணிக்கப் பட்டவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரது திருச் சரித்திரத்தைச் சைவமக்களாகிய நாம் அறிதல் இன்றிய மையாதது'' என்று குறிப்பிட்டிருக்கின்றார் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிற் பிறந்து பாரத தேசம் புகுந்து சைவசித்தாந்த ஞானதீபமாக விளங்கி யவரான ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரைப் பெற்றெ டுத்த காராளபிள்ளை தம்பதியினர் தவஞ்செய்தவர்கள். பதினாறாம் வயசிலேயே தமது நாயகர் தம்மைவிட்டுப் பிரிய நேரிட்டபோதிலும் பதிவிரதையாக வாழ்ந்தவ ரான வள்ளியம்மையார் சிறந்த புண்ணியவதியாவர்.

பலநூல்களை எழுதி வெளியிட்டவரும் சிறந்த சரித்திர ஆய்வாளருமான சைவப்புலவர் க. சி. குலரத் தினம் (பல்கலைப் புலவர்) அவர்கள் சைவ மக்களின் அபிலாசையைத் தீர்க்க முன்வந்தார். ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாச முனிவர் அவர்களைப் பற்றியும் முனிவர் அவர் களுடன் தொடர்புடைய விஷயங்கள்குறித்தும் தொகுத்து இருபத்தாறு கட்டுரைகளாக எழுதி உதவினார்கள் பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள். இம்முயற்சி சைவமக்களால் என்றென்றும் நினைவு கூரத்தக்க அரும்பெரும் பணியாகும். அருமருந்தன்ன கட்டுரைகளை அவர்களிடம் இருந்து பெற்ற உடனேயே ஸ்ரீலஸ்ரீஞானப்பிரகாசமுனிவர் ஞாபகார்த்தச்சபையினர் அச்சிடும்பணியையும் ஆரம்பித்தார்கள். அச்சகவேலைகள் நடந்து கொண்டு இருந்தபொழுது, ஜீவந்தராக இருந்த பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள் பதிப்புமுயற்சிகளுக்கு வழிகாட்டியாயும் இருந்தார்கள். பெரியார் குலரத்தினம் அவர்களது எதிர்பாராத திடீர் மறைவு துரதிஷ்டவசமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு முயற்சி தொடர்ந்தது. பல்வேறு வழிகளில் உதவியவர் ஏழாலையூர் பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் எழுதி உதவிய பிரார்த்தனை உரை இந்நூலை அணி செய்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகஇந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர், கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்களது அணிந்துரை இந்நூலின் அருமைபெருமைகளை விளக்குவதாக அமைந்துள்ளது.

சரவைத் தாள்களை மூலப்பிரதியுடன் ஒப்புநோக்கி ஒழுங்குசெய்வதில் திரு. சி. சதாசிவம் அவர்கள் மிகவும் உதவியாக இருந்தார். ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபையின் முன்னைநாள் செயலாளரான ஆசிரியர் வே. தம்பியையா அவர்கள் இந்நூலை விரைவில் வெளியிட வேண்டுமென்று மிகவும் அன்பான முறையில் வேண்டுகோள் விடுத்துக் கொண்டே இருந்தார்.

குறித்த நூல் மிகவும் அழகாக வெளிவர வேண்டும் என்பதில் பெரிதும் கருத்தாக இருந்தார்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபையினர் தமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றனர்.

உரும்பிராய்.
01 - 10 - 1997

**ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை உரை

[ பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள் ]

இற்றை வரையிலான சைவசித்தாந்த அறிவியல் விளக்கவிருத்தியிற் பதிந்துள்ள யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள் அபூர்வமானவை; அழுத்தந் திருத்தமானவை. திருநெல்வேலி தந்த திருஞானி எனும் ஞானப்பிரகாச முனிவர் சார்பிலானவை அவற்றுள் விசேட முக்கியத்துவம் பெறும். சைவசித்தாந்தப் பொருளுணர்வின் நேர்மைக்கும் கூர்மைக்கும் இன்றியமையாத காரணிகள் இரண்டு அவர் சார்பில் இருந்தமையை அவர் வரலாறு தெளியக்காட்டும். அவற்றுள் ஒன்று, தீக்ஷண்யமான அவரது சம்ஸ்கிருதப் புலமை; மற்றையது, சுவாரஸ்மான சிவயோக அநுபவ அழுத்தம்.

அவருடைய ஆக்கங்களிற் பத்து நூல்கள் சம்ஸ்கிருத மொழியில் இயன்றவை. அவற்றுள் பிராசாததீபிகை, சிவயோகசாரம், சிவயோகரத்தினம் என்ற மூன்றுஞ் சிவயோகமே பொருளாகக் கொண்டமைந்தவை. அவர் தம் வடமொழிச் சிவஞானபோத விருத்தியிலும் சிவ ஞான சித்தியார்த் தமிழ் விருத்தியுரை யிலுங் கூட, சிவ யோக நோக்கே உண்ணின்றொளிர்தல் கண்கூடு.

மூவகையாருயிர் வர்க்கம், முக்தான்மாவின்நிலை 'தாசோஹம்' பாவனை, 'சிவோஹம்' பாவனைக்கு முரணாதல் முதலிய கருத்தம்சங்களை இவர் சிவாகமக் கருத்துகள் சார்பாகத் தற்றுணிபு கொண்டு நிலை நாட்டுந் திறம் இவர்தம் சுயமான சிவயோகாநுபவ விசேடத்தையே தெரிப்பதாகும். இஃதிருக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில், சைவசித்தாந்த ஞான துரந்தரராகவும் அதன் பிரமாணிக்ய புருஷராகவும் சைவசித்தாந்தக் கண்டனப் பிரதி கண்டன சண்ட மாருதமாகவும் திகழ்ந்த ஒருவர் திருவாவடுதுறைச் சிவஞான முனிவர். ஞானப் பிரகாச முனிவர் சம்பந்தப்பட்டமட்டில் அவர் செய்தி யொன்றை இங்குக் கருதுதல் தகும்.

முக்தான்மாக்கள் சிவத்தின் எண்குண விளக்கங் களும் பெற்றுச் சிவனோ டநந்நியமாய் உள்ளோ ராதலின், சிவனுக்கியல்பான பஞ்சகிருத்திய ஆற்றல் தமக்குமுள்ளவராயிருத்தல் தவிர்க்க முடியாத ஒன்றா கும். அதனால் சுயமாகவே பஞ்சகிருத்தியஞ் செய்தற்கு அருகதையற்றவர்களான அவர்களும், சிவனாணை அங்ஙனம் செய்விக்க வேண்டும் போது அது செய்யா திருக்க வல்லுநரல்லர். பெயரளவில் ஒன்றாயினும் இருவரது பஞ்சகிருத்தியமுந் தன்மையால் வேறு. சிவன் புரிவது 'கிருபா சம்சித்த பஞ்சகிருத்தியம். இவர்கள் புரிவது அவர்சனீய சம்சித்த பஞ்சகிருத்தியம். இதுவும் அதன் ஆணை வியாபகத்துள் அடங்குவதாகலின், 'சிவ சமத்துவம்' என்ற பேச்சுக்கு இங்கே இடமில்லை. எனவே, இப்படிச் சொல்கிறேனென்பதற்காக நான் சிவ சமவாதியாவேனல்லேன் —என ஞானப்பிரகாச முனிவர் ஏதுவும் பொருளும் இயைபுங் காட்டித் தமது சித்தியா ருரையிற் படைக்குப் படை அழுத்தி உரைத்திருக்கக் கண்டுங் கண்டும்,

சிவஞான முனிவர் அவர்மேற் சிவசமவாததோஷ மேற்றிப் பரந்த அளவிற் பெருங்கண்டனம் வரைந்துள் ளார். எவ்வளவுக்குத் தான் ஆர்ப்பரித்து அடித்து முழக் கிப் பார்த்துங்கூட, ஞானப்பிரகாசர் காட்டும் ஆதாரக் கருத்துக்களைத் தருக்க நேர்மையோடு அணுகமுடியாத நிலை முனிவருக்கேற்பட்டிருப்பது அவர் கண்டனத்தைக் கருத்தூன்றி நோக்குவார் உணர்வுக்கு நல்விருந்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் அப்பெருமுனிவர் விவேகமும் நேரில் அணுகுதற்கரிய ஒருவகை உயர் ஞானவிவேகம் ஞானப் பிரகாச முனிவர் விவேகமாதல் பெறப்படும்.

இத்தகைய ஞானமஹா மேதையாகிய ஞானப்பிர காசரை, உரிய சுவருபத்தில், யதார்த்த நோக்கில், அறிவுலகக் கண்முன் நிறுத்தும் அரும் பெரும் முயற்சி யில் தேர்ச்சி பெற்றிருக்கின்றது இந் நூல்.

ஞானப்பிரகாச முனிவர் மகிமையை மையமாக வைத்து அவர் பெருஞான விளைவுக்குப் பின்னணியா யிருந்த யாழ்ப்பாணக் கலாசார மகிமையை முன்னும், அவர் ஞானக் கதிர்வீச்சுக்கள் அறிஞருலகில் விளைத்த தாக்க விபரங்களைப் பின்னும் ஆதார பூர்வமாகப் பொருந்துமாறியைத்துக் காட்டும் இந்நூற் புணர்ப்பின் அருமை அறியத்தகும்.

ஆயுட்காலம் முழுவதும் அறிவாசார ஆய்வியல் நேயராயிருந்து மறைந்த இந்நூலாசிரியர், பல்கலைப் புலவர், திரு. க. சி. குலரத்தினத்தின் அறிவாசாரப் பெருமைக்கும் ஆய்வியல் நோன்மைக்கும் அளவு கருவி யாக இந்நூலும் நின்று நிலவப் பிரார்த்திக்கின்றோம்.

**மு. கந்தையா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரை

[ பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். ]

ஈழத்துச் சைவசமய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தை வகுத்துக் கொண்ட பெருமைக்குரியவர் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர். சைவசமய மரபுகளைப் பேணுவதில் ஏனையோருக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கியவர். சைவசமயத்தில் மிக உறுதியான பற்றுக்கொண்டு எச்சந்தர்ப்பத்திலும் தாம் சார்ந்த சமயத்தின் கொள்கைகளை விட்டுக்கொடுக்காத நல்லறிஞராக விளங்கியவர். ஞானப்பிரகாச முனிவர் தமது வாழ்வைச் சைவசமய மேன்மைக்காகவும் சைவசித்தாந்த வளர்ச்சிக்காகவும் அர்ப்பணித்த பெருந்தகை. மேலை நாட்டவரினால் எமது பண்பாட்டு விழுமியங்களுக்குப் பாதகம் ஏற்பட்ட போது அதற்காக மனம் வெதும்பியவர். பறங்கித் தலைவனுக்கு உணவுக்காகப் பசுவைக் கொடாமல் இரவோடு இரவாக நாட்டை விட்டு வெளியேறி, தமிழகம் சென்று, அரிய பல சாதனைகள் படைத்தவர் ஞானப்பிரகாச முனிவர். தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்றதன் காரணமாய் அவர் அரிய பல நூல்களைப் படைத்தார். திருவண்ணாமலை ஆதீனத் தொடர்பால் ஒரு ஞானியாக வாழ்ந்து தம்பிரான் சுவாமிகள் என்ற பட்டமும் பெற்றவர். திருநெல்வேலியை வாழ்விடமாகக் கொண்டதனால் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் என்றும், திருவண்ணாமலையில் தீட்சையும் உபதேசமும் பெற்றபடியால் திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் என்றும், சிதம்பரத்தில் தங்கியிருந்து சமயப்பணி செய்தவராகலின் சிதம்பரம் ஞானப்பிரகாசர் என்றும் சிறப்புப் பெயர்களைப் பெற்

றவர். இப்பெயர்களிலிருந்து அவரது சமயப்பற்றையும் பணிகளையும் நாம் ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். இவ்வகையில் திருக்கைலாச பரம்பரையைச் சார்ந்த பெருமைக்குரியவராகின்றார். இவர் தமது தூய்மையான பணிகளின் மூலம் சைவமறுமலர்ச்சியினை ஏற்படுத்தினார். சிவஞான சித்தியாருக்கு உரை எழுதிய அறுவருள் இவரும் ஒருவராக விளங்கினார்.

இத்தகைய சிறப்புகள் பல வாய்க்கப்பெற்ற சான்றோனாகிய ஞானப்பிரகாச முனிவர் பற்றி, பல்கலைப் புலவர் அமரர் க. சி. குலரத்தினம் அவர்கள் எழுதியதே இந்நூல். க. சி. குலரத்தினம் அவர்கள் எம்மிடையே நன்கு அறிமுகமான பெரியார். பரந்த அறிவும் அனுபவமும் உடையவர். தாம் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சமய சமூக பண்பாட்டு இலக்கிய வளர்ச்சிக்காகவும் எதிர்காலத் தலைமுறையினரின் நலனுக்காகவும் எழுதும் ஓர் இலட்சிய எழுத்தாளர். சமயத் துறையிலும் இலக்கியத்துறையிலும் தமக்கென ஒருவழி வகுத்துப் படைப்புகள் பலவற்றை வெளியிட்டவர். பல்வேறு துறைகளில் பணிபுரிந்த காரணத்தினால் இவர் பெற்ற அனுபவம் இவரது படைப்புகளுக்கு அடிப்படையாக அமைந்தது. எமது பிரதேசத்தில் வாழ்ந்த பெரியாராகிய ஞானப்பிரகாச முனிவர் பற்றிய இந்நூலினை எழுத இத்தகைய அனுபவம் பெற்ற க. சி. குலரத்தினம் மிகப்பொருத்தமானவர். தமிழ் தந்த தாதாக்கள் ( 1987 ) செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் ( 1989 ) ஆகிய தலைப்புகளில் இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் ஈழத்துச் சான்றோர்களை இளந்தலைமுறையினர்க்கு அறிமுகம் செய்கின்றன. பல அறிஞர்களையும் புலவர்களையும் பற்றி, தமது இவ்விரு நூல்களில் எடுத்துக்கூறிய பல்கலைப்புலவர், சிறப்புக்கருதி ஞானப்பிரகாச முனிவரின் வரலாறு, பணிகள் பற்றி இந்நூலில் விரிவாக எடுத்துக்கூறி எதிர்கால ஆய்வாளர்களுக்குத் தேவையான விடயங்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் ஞானப்பிரகாச முனிவரைச் சைவ உலகுக்கு அறிமுகப்படுத்துகின்றது. புலவர்களை அறிமுகம் செய்து வைப்பதில் இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கண பதிப்பிள்ளை சிறப்பிடம் பெறுபவர். தமது குருநாதரின் வழியை அடியொற்றி, பல்கலைப்புலவர் அவர்களும் தாம் அறிந்தவற்றை ஏனையோரும் அறிய வைத்தல் வேண்டும் என்ற நோக்கில் இந்நூலினை எழுதியுள்ளார் எனில் மிகையில்லை.

இந்நூலில் ஆசிரியர் சைவத்தின் மேன்மை, திருநெல்வேலி ஊர்ப்பெருமை, பசுவின் பெருமை, ஞானப்பிரகாசரது வாழ்க்கை வரலாறு, அவரதுபுலமை, நூலாக்கப் பணிகள், சமயத் தொண்டு, திருப்பணிகள், சைவ சித்தாந்தத்தில் அவர் கொண்ட ஈடுபாடு, இந்தியாவில் அவர் வாழ்ந்த இடங்களில் மேற்கொண்ட பணிகள், தலயாத்திரை, முனிவரைப் பாராட்டிய பெரியார்கள் ஆகிய அம்சங்களை எடுத்துக் கூறியுள்ளார். இந்நூல் முனிவர் பற்றிய அறிமுக நூலாக அமைகின்றது.

பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் அமரராகி விட்ட போதும் இந்நூலின் வழியே அவர் எம்மத்தியில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் எனில் மிகையன்று. இந்நூலைப் படிப்பவர்கள் பல்கலைப் புலவர் எம்மத்தியில் மேடையில் நின்று பேசுவது போன்ற அநுபவத்தைப் பெறுவர். அவரது ஆற்றலை நாம் நினைவு கூர்வதற்கும் இந்நூல் துணை செய்கின்றது. எளிய இனிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் சைவப் பெருமக்களின் இல்லந்தோறும் இருக்க வேண்டிய தொன்றாகும். ஞானப்பிரகாச முனிவரின் நூல்கள் பற்றிய ஆய்வுகள் இன்னும் சரிவர மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அத்தகைய முயற்சி கைகூட இந்நூல் ஒரு முன்னோடியாக அமைகின்றது எனலாம். இப்பணியைச் செய்த பல்கலைப் புலவருக்குச் சைவ உலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபையினர் இந்நூலை வெளியிடுவதற் கான முயற்சியினை மேற்கொண்டுள்ளனர். அவர் களது இம்முயற்சி பாராட்டிற்குரியது. இந் நூலினை வெளியிடுவதன் மூலம் ஞானப்பிரகாச முனிவரையும் பல்கலைப் புலவர் அமரர் க. சி. குலரத்தினம் அவர் களையும் சபையினர் தகுந்த முறையில் போற்றிக் கௌரவித்துள்ளனர். இச்சபையினரால் வெளியிடப் படும் இந்நூல் சைவ உலகுக்குச் சிறந்ததொரு வரப் பிரசாதமாகும். சபையினரின் இத்தகைய நல்ல பணிகள் மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக !*

**25 - 04 - 1997** **ப. கோபாலகிருஷ்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்

1. வெளியீட்டுரை ... ... ... iii
2. எமதுரை ... ... ... v
3. பதிப்புரை ... ... ... vii
4. பிரார்த்தனை உரை ... ... xi
5. அணிந்துரை ... ... ... xiv
6. பொருளடக்கம் ... ... ... xviii
7. சமர்ப்பணம் ... ... ... xx
8. இலங்கை சைவத் தமிழ்நாடு ... 1
9. யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி ... 4
10. தமிழர் கண்ட சமயம் ... ... 6
11. பசுவின் பெருமை ... ... 8
12. பாழ் செய்ய வந்த பறங்கியர் ஆட்சி ... 12
13. திருநெல்வேலி ஞானப்பிரகாசர் ... 15
14. ஞானப்பிரகாசர் என்னும் திருநாமம் ... 19
15. ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் செய்த வடமொழி நூல்கள் ... 20
16. சிதம்பரமும் யாழ்ப்பாணத்தாரும் ... 21
17. சைவ சித்தாந்த சாத்திரங்கள் ... 23
18. சிவஞான சித்தியார் பரபக்க உரைகள் ... 25
19. சிவஞானசித்தியாரும் அறுவர்உரைகளும் ... 26
20. ஞானப்பிரகாச முனிவரின் சிவஞான சித்தியார் உரை ... ... 33
21. ஞானப்பிரகாச முனிவர் தமதுரையில் மேற் கோள் காட்டிய நூல்கள் ... 41
22. ஞானப்பிரகாச முனிவரின் உரைச்சிறப்பை நயந்தவர்கள் ... 42
23. வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளின் பாராட்டு ... ... 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. புலவர்கள் போற்றிய பெரியார் .. 46

25. ஞானப்பிரகாசமுனிவர்
சிவசமவாதம் சொன்னவர்தாமோ ? . . 49

26. ஞானப்பிரகாசமுனிவரின் தொண்டுகள் ... 53

27. பிரான்ஸ்நாட்டுப் பேராசிரியர் பாராட்டு ... 55

28. சித்தாந்தப்பெரியார் தூத்துக்குடி
சிவகுருநாதன் அவர்களின் மதிப்பு ... 56

29. மும்மொழிப் பேராசிரியர்
மு. அருணாசலம் அவர்களின் பாராட்டு ... 58

30. அறுவகைச் சமயம் ... ... 61

31. ஞானப்பிரகாச முனிவரின் சிவப்பேறு ... 63

32. ஞானப்பிரகாசரின் காலம் ... ... 64

33. ஞானப்பிரகாசமுனிவரின் சீடர்பரம்பரை ... 66

34. யாழ்ப்பாணம் திருநெல்வேலி
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச
முனிவர் ஞாபகார்த்தச் சபை ... 68


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரம்
என்கின்ற இந்நூலினை,
முனிவர் அவர்களின் திருவடிகளிற்
சமர்ப்பிக்கின்றோம்.

திருநெல்வேலி
**ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர்**
**ஞாபகார்த்தச் சபையினர்**

*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சைவத் தமிழ்நாடு

சிவபூமி என்று திருமூலநாயனார் போற்றப்பெற்ற இலங்கை, முன்னரே சிவலிங்கங்களாலும், சிவாலயங்களாலும் நிறைந்திருந்தது. தென்கைலாயம் எனப் பெயர் பெற்ற இடங்களுள் இலங்கையும் ஒன்று. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டதாய இதிகாச காலத்தில் இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாச புருடர்கள் இங்கே யாத்திரை செய்து தீர்த்தமாடிச் சிவனருள் பெற்றதும் உண்டு. பழம்பெரும் முனிவராகிய அகத்தியர் தம் பெயர் நின்று நிலவுமாறு சிவலிங்கத்தாபனஞ் செய்ததும் உண்டு. இராவணனின் தாயார் தினந்தோறும் அரிசி மாவினால் சிவலிங்கங்கள் செய்து சிவபூசை செய்து உய்தி பெற்றதும், இராவணன் பாடி உய்ந்ததும், அவன் மனைவி மண்டோதரி அருள்பெற்றதும் உண்டு. தேவார முதலிகளாய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும் சுந்தரமூர்த்திநாயனாரும் இங்குள்ள திருப்பதிகளுக்குத் திருமுறைகள் பாடியருளியதும், திருநாவுக்கரசு நாயனார் இலங்கையைக் குறிப்பிட்டுப் பாடியருளியதும், இங்ஙனமே மாணிக்கவாசக சுவாமிகளும் பாடியருளியதும் உண்டு. பின்வந்த அருணகிரிநாத சுவாமிகளும் இங்குள்ள முருகனாலயங்களைப் பாடியருளியுள்ளதும் உண்டு. திருக்கைலாயமுள்ள இமயம் பிங்கலை நாடியாமாறு ஈழம் என்னும் இலங்கை இடை நாடியாயிற்று. இலங்கையில் திருக்கோணமலையில் இரகசியம் மெத்தவுண்டு. அவை புறக்கண்ணுக்குத் தோன்றா என்பர்.

## ஈழமண்டல நாடு எங்கள் நாடே

இவ்வாறாகப் பழம்பெருமை வாய்ந்த செந்தமிழ் நாட்டில் சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு, தொண்டைநாடு என மாநிலங்கள் நிலவிய வகையில் இலங்கையும் ஈழநாடு என விளங்கியதாகும். ஔவையார் சேரநாடு ஆனை வளமுள்ளது, சோழநாடு நெல் வளமுள்ளது, பாண்டி நாடு முத்து வளமுள்ளது, தொண்டை நாடு சான்றோராய மக்கள் வளமுள்ளது என்று பாடுவர். இந்த வகையில் எங்கள் ஈழநாடு பொன்வளமுள்ளதால் பொன்னைக் குறித்துப் பெயர் வழங்குவதாயிற்று. ஈழம் உணவுவளமுள்ளதுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஈழநாட்டைத் தமிழ்நாட்டரசர்கள் காலந் தோறும் கைப்பற்றி அரசாண்டு வந்ததும் உண்டு. பிற்காலச் சோழமன்னர்களுள் இராசராசனும், அவன் மைந்தன் இராசேந் திரனும் பேரரசர்களாய்ப் பெருவலிபடைத்தவர்களாய், இலங்கையை ஆண்டு சிவாலயங்கள் தாபித்துச் சைவப் பண் பாட்டைப் பரப்பியதும் உண்டு. இராசராசன் காலத்திலும் இராசேந்திரன் காலத்திலும், பின்வந்த சுந்தர பாண்டியன் காலத் திலும், பின்வந்தவர்களே யாழ்ப்பாணத்தைத் தலைநகராக்கி ஆண்ட ஆரிய சக்கரவர்த்திகள் எனப் பெயர் பெற்ற பேரரச ராவர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்தில் நிலை யான அரசு நிறுவப் பெற்றது என்பர். சோழரும் பாண்டியர் களும் போரிட்ட காலத்தில் தனிநின்றுவென்ற பெருமாள் என்று பேர்படைத் தளபதி ஒருவனிடம் அரசலட்சணங்கள் இருந்தமை கண்ட யாழ்ப்பாணத்தார், அவனை அழைத்து வந்து முறையாக முடிசூட்டி ஆளவைத்தனர் என்பர். அவன் சக்கரவர்த்தி என் னும் பெயர் பெற்றவன் என்றும், இராமேஸ்வரத்து அந்தணர் களால் 'ஆரிய' எனக் கௌரவிக்கப் பெற்றவன் என்றும் அறி யக் கிடக்கிறது. எனவே அவன் பெயர் ஆரிய சக்கரவர்த்தி எனவே வழங்கியதாகும். அவன் பின் வந்தவர்கள் ஆரியசக்கர வர்த்தி என்னும் பெயரைப் பட்டப்பெயராகக் கொண்ட சம்பிர தாயத்தில், தங்கள் சொந்தப் பெயரையும் இணைத்து வழங்கி வந்தனர். அவர்களுடைய ஆட்சியில் இராமேஸ்வரமும் அடங்கி யிருந்தது.

அக்காலத்திலேதான் நெடுந்தீவு, பசுக்களால் நிறைந்திருந் தது. நயினாதீவு அந்தணர்தம் குடியிருப்பாயிருந்தது. தினந் தோறும் பூசைக்கு வேண்டிய பால் நெடுந்தீவிலிருந்தே எடுக்கப் பெற்றது. ஆரிய சக்கரவர்த்திகள் வடக்கில் செல்வாக்குற்றிருந்த வகையில், தெற்கிலும் ஆளுமை பெற்றிருந்தனர் என்பது வர லாறு. தென்னிலங்கை மன்னர்கள் ஆரிய சக்கரவர்த்திகளுக்குத் திறை கொடுத்தாண்டதும் உண்டு. அவர்கள் அநுராதபுரம், பொலநறுவை முதலிய வளமார்ந்த பெருநகரங்களைக் கைவிட் டுத் தென்றிசை சென்றேறிப் பலப்படுத்தி வந்ததும் வரலாறு. யாழ்ப்பாணத்தரசன் புகழேந்திப் புலவர் புகழ்ந்த புரவலனா யிருந்ததும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக யாழ்ப்பாணம் சீரும் சிறப்பும் பெற்று நாடா வளத்ததாக வளர்ந்த காலத்திலே தமிழ்நாட்டிலிருந்து பலர் இங்கே குடியேறி வாழ்ந்ததும் உண்டு. அதிகாரிகள் இங்கே தக்கவர்கள் குடியேறுதல் வேண்டும் என்று தகுதி பார்த்துக் குடியேற்றியதும் உண்டு. இந்தவகையில் பாண்டி மழவன் என்பானையும் அவன் தம்பியாரையும், மைத்துனன் செண்பகமழவனையும் அவன் தம்பியையும் திருநெல்வேலியிற் குடியேற்றிய செய்தி முத்துராச கவிராயர் செய்த கைலாயமாலை என்னும் நூலில் உள்ளது.

''செண்பகப் பேர் வாய்ந்த திறன்மழவனோடும்
அவன் நண்புபெறு தம்பியையும் நாநிலத்தில்
பண்புசெறி தக்கபலவளமும் சார்ந்து
கல்வி நாகரிகம் மிக்க திருநெல்வேலி
மேவுவித்து — தக்கவர்கள் எல்லாரும் ஏத்தும்
இரவிகுல மன்னவனார்''

இவ்வாறாகத் தென்னிலங்கையைச் சேர்ந்த வரலாற்றாசிரியர்கள், மத்திய காலத்தில் இலங்கைக்கு வந்து குடியேறிய தமிழர் வரலாறு ஒன்றையே மையமாகக் கொண்டு தமிழரை வந்தேறு குடியினர் என வாய்கூசாது பேசியும் கை நடுங்காமல் எழுதியும் உள்ளனர். இங்ஙனமாக எழுதியவர்கள் தமிழரின் பழைய வரலாற்றை இருட்டடிப்புச் செய்தும், பெரியவர்கள் நடுநின்ற நன்நெஞ்சோடு எழுதியவற்றை ஒதுக்கித் தள்ளியதும் உண்டு. நடேசபிள்ளை எழுதிய வரலாற்றை விளங்கிக்கொள்ள முடியாமல் சுழித்து விட்டார்கள்.

இலங்கையைப் பொன்னாடு என்னும் கருத்தில் ஈழம் என்றும் வழங்குவர். ஈழத்திருநாட்டைப் பற்றிப் புலவர்கள் பலவாறாகப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். அண்மையில் ஈழமண்டல சதகம் பாடிய அல்வாய் கணபதிப்பிள்ளை அவர்கள் பாடிய சிறப்புப் பாடல்களிலொன்று படித்தின்புறத்தக்கது. இவர் சீரேறு புகழீழ மண்டலஞ்சேர் சிறப்பதனைச் சதகமதாய்க் கவிதை செய்த பெருமைக்குரியவர்,

''அண்டரிற் போகி நதியிற் கங்காநதி யாமலரிற்
புண்டரி கந்நற் றபோதன ரிற்றேர் பொதியமுனி
வண்டமிழ்ப் பாவில்வெண் பாப்போல வுத்தரம்வாய்ந்த வெல்லா
மண்டலந் தம்மினு மிக்கதொன் றீழநன் மண்டலமே''

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி

ஈழம் என்றும் இலங்கை என்றும் மணித்திருநாடு என்றும் புகழ்பெற்ற எங்கள் நாட்டின் வடபாலமைந்த பிரதேசம் ஒரு காலத்தில் வீணாகானபுரம் எனவும் பெயர் பெற்றது. இசைத் தமிழால் பெயர் பெற்ற எங்கள் பிரதேசம் யாழ்ப்பாணம் என வரலாற்றுக் காலத்தில் வழங்கியது.

உலகப் பெரு நாடுகளுள் அமெரிக்கா, ரசியா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா முதலாய நாடுகள் திருத்தமடைவதற்கு முன்னரே எங்கள் பிரதேசம் புகழ்பெற்று நிலவியது. இங்கிலாந்தில் ரியூடர் வம்சத்தவர் 1485ஆம் ஆண்டில் நிலையான அரச பரம்பரையை நிறுவுவதற்கு முன்னரே 1268ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்து அரசு இலங்கையின் பெரும் பகுதியைப் பரிபாலனஞ் செய்தது.

யாழ்ப்பாணத்திலே சீரும் சிறப்பும் பெற்றுக் கல்விப் பெருமையும் செல்வச் செழிப்பும் பெற்ற ஊர்களில் சாலிவாடிபுரம் எனவும் வழங்கிய திருநெல்வேலியும் ஒன்று. இதன் சிறப்பு நோக்கி இதனைத் திருநல்வேலி என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்குவர். திருநெல்வேலியின் செம்பாட்டு மண் வளத்தின் சிறப்பைக் கருதிய ஆங்கிலேய அரசாங்கம் இங்கே மிகப் பெரிய விவசாய விரிவாக்கப் பண்ணையும் பயிற்சிக் கல்லூரியும் அமைத்தது. இங்ஙனமாகவே யாழ்ப்பாணத்து மாநகர சபையாரும் திருநெல்வேலியின் நீரின் அருமை கண்டு, இங்கே பாரிய ஆழ்கிணறு தோண்டி நகரத்தார் உண்ணற் பொருட்டு ஊருணி யாக்கியது.

இலங்கை அரசியல் துறையில் ஐம்பதாண்டுகள் அயராதுழைத்த சேர். பொன். இராமநாதன் அவர்கள் இளைஞர்களின் உயர்கல்வியின் பொருட்டுப் பாரிய பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவினார். இது இன்று விசாலமாகி வியாபகமாகப் பல்கலைக் கழக வளாகமாகி மலர்ந்துள்ளது.

இன்னும் இலங்கையில் சைவ வித்தியாவிருத்திக்காக சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆரம்பித்த சைவவித்தியா விருத்திச் சங்கப் பணியைத் தொடர்ந்து செவ்வனே நடத்தத் தோள் கொடுத்த சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள், நாட்டில் இருநூற்றுக்கும் மேலான சைவப் பாடசாலைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவவும், அவற்றுக்கு வேண்டிய சைவாசிரியர்களை உருவாக்கும் ஆசிரிய கலாசாலையை நிறுவுவதற்கும் திருநெல்வேலியை மத்திய கேந்திரமாக்கினார்.

இன்னும் சந்திரபுரம் என்னும் மட்டுவில் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், திருநெல்வேலியையே புகலிடமாகக் கொண்டு இங்கே வாழ்ந்து ஐம்பதாண்டுகளுக்கு மேலாகச் சைவத்தமிழ்ப் பணி புரிந்து இயற்கை எய்தினார்.

இங்கே ஊரவர்களுக்கெல்லாம் உண்ணும் நீர் உதவிய பழங்கிணறு வரலாற்றுப் புகழ்பெற்றது. அதனருகில் கோயில் கொண்டருளிய பிள்ளையார் ஊரவர் வாழ்வை மலர்த்தி வந்துள்ளார். சித்தவைத்தியத்துறையில் மெத்தப் பிரகாசித்த வைத்தியர்கள் இங்கே பரம்பரையாக நோய் நீக்கஞ் செய்து வந்துள்ளார்கள். திருவண்ணாமலையாதீனத்துக் கனகசபாபதி யோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள், ஒரு காலத்தில் வண்ணைச் சிவன் கோயிலடியில் வாழ்ந்த பின் தம் ஒடுக்க காலத்தில் திருநெல்வேலியில் வாழ்ந்து சமாதியாயினார்.

---

## கடவுள் வழிபாடு

கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன, அவரை மனசினாலே தியானித்தலும் வாக்கினாலே துதித்தலும், கைகளினாலே பூசித்தலும் கால்களினாலே வலம்வருதலும், தலையினாலே வணங்குதலும் செவிகளினாலே அவருடைய புகழைக் கேட்டலும், கண்களினாலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கண்ட சமயம்

தமிழர் கண்ட சமயம் மக்களை ஒன்றோடு சேர்ப்பதற்கு வழியாயமைந்தது. அந்த ஒன்றென்றது ஒன்றேயாம். அதுசிவம். அது சிவம் என்னும் செம்பொருள். சிவம் என்னும் செம்பொருளை அடைவதற்கு வாய்த்த வழி சைவநெறி எனப் பெயர் பெற்றது. சிவத்தை அடையும் துறை மிகுசைவத்துறை எனப் போற்றப் பெற்றது.

சிவமாய இறைவன் ஈஸ்வரன். அவர் பரமேஸ்வரர். அவர் தென்னாடுடைய சிவன், அவர் எந்நாட்டுக்கும் இறைவன். இறைவன் எங்கும் உள்ளவர். என்றும் உள்ளவர். எல்லாம் அறிந்தவர். எல்லாம் வல்லவர். நித்தமணாளர். நிரம்ப அழகியர். அவர் அடியவர்களின் சித்தத்து இருப்பவர். அவர் எல்லாப் பொருள்களையும் படைத்தவர். அவற்றைக் காப்பவர். அவற்றை ஏவுபவர். அவற்றை அழிப்பவர். அவர் நற்குணக்கடல், கிருபா சமுத்திரம், அசையாமலை.

இத்தகைய இறைவனை எம்மவர் இயற்கைப் பிரமாணம், சுவானுபூதிப் பிரமாணம், அறநெறிப் பிரமாணம், குறிக்கோள் வகைப் பிரமாணம், தொழிற்படு முறைப் பிரமாணம், புறத்தோற்றவுண்மைப் பிரமாணம், நம்பிக்கையுரிமைப் பிரமாணம் முதலியவற்றால் நிரூபித்துள்ளார்கள். கடவுள் ஒருவர் இருக்கிறார்,

நிரூபிக்கப் பெற்ற இறைவனை அடைவதே எங்கள் குறிக்கோள். ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்''. எங்கள் எல்லோருக்கும் முத்தி நிச்சயம் என்பதே பெரியவர்கள் கண்ட முடிபுமாம். அருவமாயுள்ள இறைவனை நாம் வணங்குவதற்குப் புறத்தே காணக்கூடிய குறிகளையும் அடையாளங்களையும் கொண்டது சைவநெறி.

ஒரு நாட்டின் கொடி பட்டொளி வீசிப் பறக்கும் போது, அந் நாட்டவர் அதனைத் தாழ்ந்து பணிந்து வணங்குகிறார்கள். அந்தக் கொடிக்குள் என்ன என்னவோ எல்லாம் மறைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் நிலப்பரப்பு, அங்குள்ள மலைகள், ஆறுகள், வனப்புகள், கட்டடங்கள், கலைகள், வரலாறு, மொழி, சமயம் என்பனவும் இன்னும் பலவும் கொடியைக் கண்டவுடன் நினைவுக்கு வருகின்றன.

இங்ஙனமே எம்மவர் ஆலயத்தை அரன் எனத் தொழுவர். திருக்கோயில் உள்ளிருக்கும் திருவுருவந்தன்னைச் சிவன் எனவே நினைந்தவர்க்குச் சிவன் உறைவன் அங்கே, என்றெல்லாம் மெய்கண்ட சாத்திரங்கள் கூறுகின்றன.

இவ்வாறாக ஆலயந் தொழுவது சாலவு நன்று என்று கண்டவர்கள் இறைவனைப் போற்றுவதற்கு ஏதும் இல்லாத போது, எல்லோருக்கும் இயலுமான வகையில் ஒரு பச்சிலையை இட்டு வணங்கினாற் போதும் என்று அருளிய திருமூலர், பசுவின் மேன்மை கருதி அதற்கு ஒரு தரம் வாயிற் கொள்ளுமளவுக்கான புல் அல்லது இலை தழை கொடுத்தல் நல்லறம் என்பர்.

**'' யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே ''**

இத்தகைய பசுக்களின் பெருமையைப் பாடவந்த சேக்கிழார் சுவாமிகள், பசுக்களின் அங்கங்கள் யாவும் தெய்வாம்சம் பொருந்தியவை எனப் போற்றுவர்.

**'' தங்கும் அகில யோனிகட்கும்**
**மேலாம் பெருமைத் தகைமையன**
**பொங்கு புனித தீர்த்தங்கள்**
**எல்லாம் என்றும் பொருந்துவன**
**துங்க அமரர் திருமுனிவர்**
**கணங்கள் சூழ்ந்து பிரியாத**
**அங்க மனைத்தும் தாமுடைய**
**அல்லவோ நல்ஆனி னங்கள் ''**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவின் பெருமை

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பசுக்கள் வாழ்க என்று பாடியருளியவர். பசு சாதுவான பிராணி. அது பால் சுரந்து எம்மை வளர்ப்பது. பெற்ற தாய் பால் ஊட்டியபின், பசுவே பால் சுரந்து ஊட்டுவதால் அது கோமாதா. சைவர் பசுவைத் தெய்வமாகப் பூசிப்பர். தமிழ் வீரர் பசுவுக்குத் தீமை உண்டாகாமற் போர் செய்வர். பசுக்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொடுப்பதிற் பகை அரசரும் உடன்பாடு தெரிவிப்பர்.

பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், சலம் என்னும் ஐந்தும் பஞ்ச கௌவியம் இவை அபிடேகத்துக்குரிய புனிதமான திரவியங்கள். பசுக் காத்தல் பெரிய அறம். பசு இனத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாகக் கொடுத்தல் கோதானம் எனப் பெருமைபெற்றது.

பசுவின் உயர்வு கருதியே சைவசித்தாந்தம் ஆன்மாக்களைப் பசு எனக் கூறுகிறது. பசுக்களுக்குத் தலைவர் என்ற முறையில் சிவபெருமான் பசுபதி எனத் திருநாமம் பெற்றவர் சைவ சமயத்தின் முதல் நூலாய வேதத்துக்கும் பசு என்னும் பெயரும் உண்டு.

பசுக்களுக்குத் துன்பம் வராமற் காத்தவருள் விசாரசருமர் என்னும் சண்டேசுர நாயனார், ஆனாய நாயனார், திருமூல நாயனார் முதலானோர் மிகப் பெரியவர்கள். சைவ நெறியில் விதிக்கப்பெற்ற எண்வகையான ஸ்நானங்களுள் மாருதஸ்நானம் என்பதும் ஒன்று. அது பசுவின் காலில் பட்ட தூசி நம் உடம்பில் படுதலாம். பசுவின் கால் தூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப் பூசுதல் ஆக்கிநேயஸ்நானம் எனப் பெறும். திருக்கோயிலில் கிடைக்கும் பெரும் பிரசாதமாய திருநீறு பூசுதல் பார்த்திபஸ்நானம் என்பதாகும்.

பசுவை மாடு என்றும், ஆ என்றும், கோ என்றும், தேனு என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப் பெயர்களிட்டு அழைத்து மகிழ்வர். கறுப்பி, சிவப்பி, வெள்ளைச்சி, மறைச்சி, நரைச்சி என்பனவெல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி இல்லையாம் என்றும், பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்கமாட்டாள் என்றும், பசு இல்லாத நாடு காட்டுக்குச் சமமாகும் என்றும் பாடுவர்.

" ஆவிலா மனையகம் அழகு குன்றுமே
ஆவிலா மனையகம் ஆக்கம் இல்லையாம்
ஆவிலா மனையகம் அமலை நீங்குவாள்
ஆவிலா நாடெலாம் அடவி யாகுமே"

இச் செய்திகளை யெல்லாம் ஈழத்துச் சிதம்பர புராணமுடையார் நவாலியூர் சோ. இளமுருகனார் அண்மையில் அழகாகக் கூறியுள்ளார்.

" ஆவினைப் பிள்ளைபோல் அருத்திப் பேணுவார்
ஆவினைப் பெயர்குறித் தழைப்ப ராத்தரு
சேவினைச் சிறப்புற வளர்ப்பர் செய்களில்
மேவிய பணியெலாம் விரும்பிச் செய்யவே"

பசுவின் உறுப்புக்களெங்கும் தேவர்கள் முதலான பெரியவர்கள் வதிகின்றார்கள் என்பதால் பசு புண்ணியப் பிறவி என்பதோடு, புனிதமானதும் வழிபாட்டுக்குரியதுமாம் என்னும் கருத்தையும் அழகுறப் பாடுவார்.

" ஆக்களி னுறுப்பெலாம் அமரர் வைகுவார்
ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்
ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற்(று)
ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்"

பசுவின் தலையுச்சியிற் சிவனும், நெற்றியிற் சத்தியும், மூக்கு நுனியில் முருகனும், கொம்புகளிற் பிரமாவும் விஷ்ணுவும், கண்களிற் சூரியனும் சந்திரனும் இன்னும் இதர உறுப்புக்களில் ஏனைய தெய்வ மூர்த்தங்களும் இருப்பர் என்ப.

இங்ஙனமாக எங்கள் வாழ்வில் பசுமைப் புரட்சிக்கான வழியில் உதவியாக நிலவிவரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்குமுகமாகத் தைப்பொங்கல் இடுபவராய நாம், அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் புரிந்து, வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகின்றோம்.

இன்னும் சைவசமயத்தின் பிரமாண நூல்களுள் ஒன்றாய வேதத்தில் முதற் பகுதியாயுள்ள இருக்கு வேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர் அதற்கு எவரும் தீங்கு செய்தலாகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், அது உருத்திரனின் அன்னை, வசுக்களின் பிள்ளை, அமுதத்தின் மையம், ஆதித்தியனின் சகோதரி, அனைவருக்கும் அதிதி, பாவம் அறியாத பிராணி என்றெல்லாம் அறியத்தருவர்.

இனி சாம வேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன. ''நீவிர் புண்ணியமானவர்கள். நீங்கள் நன்றாக வாழுங்கள், நன்றாகப் பாலைப் பொழியுங்கள், காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கேயுள்ள புல்வெளி உமக்குப் போதுமானதாகுக. இங்கேயுள்ள நீர்நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகுக. நீவிர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக! வளம் பெருக்குவீராக.''

பசுக்களுக்கு நாம் செய்யும் வழிபாடே பட்டிப் பொங்கல்.

''இன்புடைத் தைம்மதிப் பிறப்பி லேழ்பரி
வன்புடைத் தேரவற் போற்றி மற்றைநாட்
பொன்பெறு புதல்வரிற் புரியு மாக்களுக்(கு)
அன்பினாற் பொங்கலும் அமையச் செய்வரால்.''

இனிப் பசுவினைக் கொன்று தின்னும் பரதேசிப் பழக்கம் வெளிநாட்டு வனாந்தர வாசிகளாலும், பறங்கியராலும் இங்கே ஒரு காலத்தில் வந்ததென்றும், அது புனிதமான சைவநெறிக்கு ஒவ்வாத செயல் என்றும், அதனை உண்ணல் பாவிகளின் பழக்கமாகுமென்றும், அதனை உண்ணாதவர் தேவராவர் என்றும் பாடுவார்.

''ஆவினைக் கொல்லுதல் அவ்வூண் உண்ணுதல்
பாவிகள் தொழிலவை சைவப் பண்பல
மேவிய நிரயத்து வீழ்த்தி மாய்க்குமத்
தீவினை யொழித்தவர் தேவ ராவரே''.

மத்தியகாலச் சிங்கள மக்கள் வரலாற்றில் பசுமாடு பெருமதிப்புப் பெற்றிருந்தது. ஜெயவர்த்தனபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு வீற்றிருந்த மாமன்னன் ஆறாம் பராக்கிரமபாகு என்பானின் காலத்தில் அரண்மனை வாசலில் காலை வேளைகளில் சாணித் தண்ணீர் தெளிக்கும் தமிழ்க் கலாசாரம் நிலவியது. பசுமாடு புனிதமான பிராணியாகக் கருதப்பெற்று வந்தது. அதனை எவரும் துன்புறுத்தலாகாது என்னும் எழுதாவிதி நிலவியது. அன்றி, பசுமாடு நோய்வாய்ப்பட்டு இறந்தால் அதைப் பக்தியுடன் நிலத்தில் புதைக்கும் வழக்கம் நிலவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்கள் என்றாயினும் மாட்டிறைச்சி உண்டதில்லை என்று மஹுவன் (Mahuan) என்பார் 1413ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். பிற்காலத்தில் பறங்கியர் இலங்கைக் கரைநாடுகளில் செல்வாக்குற்று மாட்டிறைச்சி உண்டுவந்ததைக் கண்ட சிங்கள மக்கள், அப்பறங்கியரை "அடிமைப் பறங்கியர்" என அழைத்தார்கள் என்று ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் எழுதியுள்ளார்கள்.

## கோவதைக்குப் பிராயச்சித்தம்:

சைவசமயத்தவர் தெரிந்தோ தெரியாமலோ கோவதை செய்தாலோ, வதைக்கு உடந்தையாக இருந்தாலோ பெரும் பாவமாகும். அந்தப் பாவவிமோசனத்துக்கு விதிக்கப்பட்ட பிராயச்சித்தம் வருமாறு.

"கோவதை செய்தான் சிகையோடு முண்டனஞ் செய்து, கோசலத்தில் முழுகித் தான் கொன்ற கோவின் தோலைப் போர்த்து உப்பின்றி ஒருபொழுதுண்டு, பசுக்கட்கு நோயாலும், பசியாலும், பிற உயிர்களாலும் துன்பம் வராமல் பாதுகாத்து இதஞ்செய்து, ஆறுமாத காலம் கோமந்தையில் வசித்திருத்தல்"

---

### ஆசாரியர் பிதா மாதா

கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பயனையும், உனக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால், அவரை ஒரு காலமும் மறவாதே,

ஈசுரபத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதாமாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழ் செய்ய வந்த பறங்கியர் ஆட்சி

எண்சாண் உடம்புக்குச் சென்னி பிரதானம் என்றே இசைப்பார்கள். இலங்கையின் வடபாலமைந்த யாழ்ப்பாணம் தலை போலவே நிலவுகிறது. யாழ்ப்பாணத்தில் தலையாய மக்கள் வாழ்ந்ததும் உண்டு. பலதுறைகளிலும் முன்னோடிகளானோர் இங்கே வாழ்ந்து வழிகாட்டியதும் உண்டு.

யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு மத்தியகாலத்தில் அரசாண்ட ஆரிய சக்கரவர்த்திகள் என்னும் தமிழரசர்கள் **1268** முதல் **1621** வரை பரம்பரையாக ஆண்டுவந்தார்கள். இலங்கையின் மேற்குக்கரையில் புத்தளம் வரையில் அவர்கள் செல்வாக்கிருந்தது. இங்ஙனமாகவே கிழக்கிலும் பொத்துவில் வரை அவர்கள் செல்வாக்கு நிலவியது.

இவ்வாறாக ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகளில் ஒன்றாய போர்த்துக்கல் தேசத்தவர் **1505** ஆம் ஆண்டில் தென் இலங்கையில் கால்வைத்துச் சிறிது சிறிதாக இலங்கைக் கரைநாடுகளில் செல்வாக்குப் பெற்றுவந்தார்கள். அவர்கள் **1558** ஆம் ஆண்டளவில் வடக்கில் வலுப்பெறவிரும்பிப் பின்வாங்கியதும் உண்டு.

பின்னர் **1619** ஆம் ஆண்டளவில் ஆரியசக்கரவர்த்திகள் குடும்பத்தைச் சேர்ந்த சங்கிலியன் என்பான், யாழ்ப்பாணத்தை ஆண்டகாலத்தில் போர்த்துக்கேயர் குடாநாட்டின் பாகங்களைத் தமதாக்கி, **1620** ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, ஒலிவேறா என்னும் தலைவனைப் பொறுப்பதிகாரியாக்கினர். ஒலிவேறா தலைமையில் பரிபாலிக்கப்பட்ட வடபகுதி யாழ்ப்பாண இராச்சியம் எனவே பெயர் பெற்று நிலவியது.

பறங்கியர் காலடிவைத்து நிலையாக இருப்புக் கொண்டகாலம் முதலாக இங்கே கொடியபஞ்சமும் நோயும் பரவத் தலைப்பட்டன. பின்னர் **1627** ஆம் ஆண்டு அளவில் பெரும் புயல் உண்டாகிப் பேரழிவு செய்தது, பறங்கியர் செய்த அழிவிலும் பார்க்கப் புயல் செய்த அழிவு பாரதூரமானது என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பால் பறங்கியர் தாங்கள் வந்தகாரியத்தைச் செய்யத் தலைப்பட்டனர். அவர்கள் தங்கள் சமயத்தை இங்கே பரப்புதலே முதல் நோக்கமாகக் கொண்டவராகவே தான் சைவக் கோயில்களை இடித்தழிக்கத் தொடங்கினர். பின்னர் அவர்களின் குருமார் சட்டையிட்டுத் தொப்பியிட்டுச் சப்பாத்தணிந்து உப தேசஞ் செய்ய முயன்றனர். நூற்றுக்கணக்கான சைவாலயங்கள் தரைமட்டமான பின் குருமார் உபதேசத்தோடு வாசகப்பா நாடகம் முதலியனவும் நடித்துச் சமயப் பிரசாரஞ் செய்தனர். கொச்சியில் அச்சிடப்பட்ட தமிழ்நூல்கள் இங்கேவந்து குவிந்தன. குடாநாடு முப்பத்திரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் கோயிற்பற்று என்றே பெயரிடப்பட்டது. எண் நான்கு கோயிற்பற்றுக்களுள் தெல்லிப்பழை முன்னணியில் பணிபுரிந்தது. அங்கே பீற்றர் என்று பெயர்வாங்கிய தமிழன் பேதுருப்பிள்ளை எனவழங்கி, தன்பெரும்புலமை காரணமாகப் பாடல்கள் பாடவாரம்பித்தார். போர்த்துக்கல் நாட்டை பிடித்துக்கல்நாடு என்று பெயரிட்டு இலக்கியங்கள் செய்த காலத்தில் சந்தியோகுமையோர் அந்தாதியும் எழுந்தது.

போர்த்துக்கேயப் பாதிரிமார் மக்கள் இலக்கியங்களின் மதிப்பையறிந்து ஞானப்பள்ளு என்னும் நூலையும் இயற்றுவித்தார்கள். அன்றி 1650 ஆம் ஆண்டில் பெரியதொரு சேர்ச்சையும் (தேவாலயத்தையும்) கட்டினார்கள். இலங்கைக்கரையோர நாடுகள் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. அதிகாரம் மிக்க போர்த்துக்கேயரின் செல்வாக்கு ஆளுமை பெற்றுநிலவியது. அவர்களுடைய பழக்க வழக்கங்கள், அவர்களுடைய மொழிப் பதங்கள் நாட்டில் பேச்சுவழக்கில் பரவியிருந்தன. அவர்களை எம்மவர் பறங்கியர் எனவும் வழங்கி வந்தார்கள்.

பறங்கியர் மற்சமாமிசம் உண்டு மதுபானம் பருகுவதில் பழகியவர்கள். அவர்கள் மாட்டிறைச்சி உண்பதில் விருப்பமதிகம் உள்ளவர்கள். அவர்களின் உணவுக்காக அவர்கள் கோடிக்கரையில் இருந்து ஆயிரக்கணக்கான மாடுகள் இறக்குமதி செய்து உண்டபின் பசுத்தீவு என வழங்கிய நெடுந்தீவிலிருந்தும் களவாக மாடுகளைக் கொண்டுவந்து கொன்று உண்டனர்.

இப்படியாக அவர்களுக்கு இறைச்சிப்பஞ்சம் உண்டானபோது அவர்கள் கூசாது கொடுங்கோல் செலுத்தத் துணிந்தார்கள். முன்னர் பகாசுரன் விதித்தவகையில் தினமும் ஒவ்வொரு வீட்டுக்

காரரும் போர்த்துக்கேய அதிகாரிக்கு ஒரு பசுவாயினும் கொடுத்தல் வேண்டும் எனப் பறைஅறைந்தார்கள். அதைக்கேட்ட நல்லவர் ஒருவர் பறங்கியரின் போக்கைப் பரிகாசமாகப் பாடியதும் உண்டு.

"மாட்டிறைச்சியாம் பறங்கிக்கு
மானும் இணங்காதாம்
சுட்டகருவாடாம் பறங்கிக்குச்
சோறும் இணங்காதாம்."

ஒவ்வொரு வீட்டாரும் தவறாமல் பறங்கி அதிகாரிக்குப் பசு கொடுத்தல் வேண்டும் என்பது அரச கட்டளை யானமை கேட்டு மக்கள் பதைத்தார்கள். அன்று நாட்டில் புறச்சமயப் போக்கு, பிறநாட்டு நாகரிகம் புகாத காலம். எல்லோரும் சுத்த சைவராய் இருந்தகாலம். அவர்களுக்குப் பசுக் கொலை என்பது பாரதூரமான பாபமாயிருந்தகாலம்.

எந்த உயிரையும் கொல்லலாகாது, கொன்றதைத் தின்னலாகாது என்று சைவக் கோட்பாடுகள் வலியுறுத்தும் வகையை நினைந்துருகினார்கள். கொலைமறுத்தல், புலால் மறுத்தல் பற்றியபழைய நீதிப்பாடல்களை நினைந்து அழுதார்கள்.

"கொன்றவன், குறைத்தவன்
கொணர்ந்து விற்றவன்
துன்றிய பொருள் கொடுத்து
வந்து கொண்டவன்
அன்றது மடையன்
நாவிற் பெய்தவன்
என்றிவர் அறுவரும்
நரகில் எய்துவர்."

# திருநெல்வேலி ஞானப்பிரகாசர்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொடுங்கோல் செலுத்திய பறங்கியர் தலைவனின் உணவுக்காக எம்மவர் நாள் தோறும் பசுமாடு கொடுத்துவந்த காலத்தில், திருநெல்வேலியில் வாழ்ந்த பழங்குடி மரபினராய காராளபிள்ளை என்பாரின் மைந்தன் ஞானப்பிரகாசர் என்னும் பெரியவரின் முறை வந்தது.

அடுத்தநாட்காலை பசுவைக் கொடாமல் தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று இரவெல்லாம் சிந்தித்த பெரியார், நாட்டைவிட்டு வெளியேறுவதே சாலச்சிறந்த வழியெனக்கருதி, எவருமறியாமல் இராப்பொழுதிலேயே நடந்துசென்று வடகரையில் தோணியேறி, வேதாரணியத்தை அடைந்தார்.

திருமறைக்காடு என்னும் பெருமை மிக்க திருத்தலத்திலே அப்பரும் சம்பந்தரும் செய்த அரும்பணிகளை நினைவு செய்தவாறே இறைவனை வணங்கியின்புற்றார். பின்னர் அங்கிருந்து பலதலங்களையும் வணங்கியவாறே திருப்புகலூரை அடைந்தார். சுந்தரமூர்த்திநாயனார் பெரிதும் அபிமானித்துப் பாடிய திருப்புகலூரில் வழிபட்டுக் கொண்டிருந்த காலத்தில், அங்கே வாழ்ந்த பெரியண்ணாசாமிக்குருக்கள் என்னும் சிவாசாரியரிடம் தீட்சை பெற்று ஆசாரசீலராயிருந்தார்.

திருப்புகலூரை விட்டு நீங்கியபின் ஞானப்பிரகாசர் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு சிதம்பரத்தை அடைந்தார். அங்கே ஆடலே புரியும் அம்பலவாணரை அழுதழுது வணங்கிய பின் சிவகாமிஅம்மன் சந்நிதியை அடைந்தார்.

சிவகாமிஅம்மன் சந்நிதியில் அவர் சிந்தையில் ஓர் எண்ணம் உதிக்கவே, அவர் அங்கே ஆசார சீலராய்த் தினமும் சில மிளகுகளை மென்று நீர்பருகியவாறு நாற்பத்தைந்து நாள்கள் உபவாசமிருந்தார். இத்தகைய உபவாசத்தின் பயனாக அவருக்குத் தேவியின் திருவருள் கிடைப்பதாயிற்று. அடுத்துத்தாம் செய்யவேண்டிய பணிகள் எவை எவை என்பன வெளியாயிற்று.

தேவி திருவருளால் அவருக்கு வெளியான ஒருவழி, தாம் கௌடதேசம் என்னும் வங்காள தேசம் செல்ல வேண்டும் என்றும், அங்கே வேத வேதாங்க மீமாஞ்சை முதலியன தக்க குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடம் கேட்டறியும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதுமாம். மத்திய காலத்தில் வங்காளம் வெகுவாக மறுமலர்ச்சியடைந்து கலை கலாசாரம் அனைத்திலும் சிறந்து விளங்கியது.

## கௌட தேசம்:

முன்னர் திராவிடம், ஆரியா வர்த்தம் என்னும் பிரிவுகளோடு நிலவிய பாரதநாட்டின் வடகிழக்குப் பாகம் கௌடதேசம் என விளங்கியது. அது வங்காளம் எனவும் வழங்கியது. வேதாத்தியயனம் முதலியவற்றிற் சிறந்த அப்பிரதேசத்தில் முன்னர் இராசேந்திரசோழப் பேரரசன் காலத்தில் திராவிட நாகரிகமும் சிந்தனையும் கலந்திருந்தன. கங்கை கொண்ட சோழன் என வழங்கிய அவன், வடக்கத்திய பிராமணரைக் காவிரிக் கரையிலும், தென்னாட்டு அந்தணர்களைக் கங்கைக் கரையிலும் குடியமர்த்தியவன். இதனால் இரு துறைக் கலாசாரங்களும் நெருங்கி வளர்ந்தன. பின்னர் இராமானுஜர் வழிவந்த இராமானந்தர் வடக்கில் சீடர்கள் பலரைக்கண்டு வடநாட்டுப் பக்தி யியக்கத்தில் ஒரு திருப்பத்தையும் கண்டவர்.

வடநாட்டில் கிருஷ்ணபக்தி பரவலாகப்பழகிய போதிலும் அங்கே சைவத்துறையும் ஒளி வீசிவந்தது. ஒருகாலத்தில் வங்காளம், படித்தவர்கள் பிரதேசமாகப் பெயர் பெற்றிருந்தது. பெயர் பெற்ற வங்காளத்தைச் சேர்ந்த கற்கத்தா நகரம் உலகின் இரண்டாவது பெருநகரம் எனக்கருதப் பெற்றதும் உண்டு. பழைய காலத்துப் படிப்பாளிகளின், பண்டிதர்களின் நகரமும் அதுவேயாகும்.

## வங்காளத்தில் வடமொழி நூல்கள் பயிலல்:

வடநாடு சென்ற ஞானப்பிரகாசர் வங்காளத்தை அடைந்து, ஆங்கொரு அமைதியான சூழலில் தங்கியிருந்த போது, அயலில் பிராமண சந்நியாசி ஒருவர், மாணாக்கர் சிலருக்குத் திண்ணைப் பள்ளி நடத்தக்கண்டார். அந்தச்சூழல் அவரை வெகுவாக உருக்கி விட்டது.

பிராமணச் சிறுவர் அங்கே தர்க்கம், மீமாஞ்சை, வியாகரணம் முதலியவற்றைக் கேள்வி முறையிற் பயின்று வந்தார்கள். இத்தகைய சூழலை விட்டுப் பிரிய மனமில்லாத ஞானப்பிரகாசர், வகுப்பு நடைபெற்ற குடிலுக்குச் சிறிது தூரத்தில் நின்று, அங்கே நடைபெற்ற பாடங்களை உன்னிப்பாகக் கேட்டு மனனஞ்செய்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக உபாத்தியாயர் ஒரு நாள் தம் மாணாக்கர்களின் பெறுபேற்றைப் பரீட்சிக்கக் கருதி வரிசையாக வினாவி வந்த போது அவர்களிற் சிலர் உரியவாறு விடை கூறத் தவறியமை கண்டு வருந்தி, அயலில் தினந் தோறும் நின்று கவனமாகக் கேட்டு வந்தவரை நோக்கி, ''நீ யாரப்பா? நீ இவற்றுக்கு விடை கூறுவாயா?'' என்று கேட்டார். அது கேட்டு மகிழ்ந்த ஞானப்பிரகாசர் தாம் இன்னார் என்றுரைத்து, உபாத்தியாயர் வினாவியவற்றுக்குரிய விடைகளையும் வரிசைக் கிரமமாகச் சாங்கோபாங்கமாகக் கூறினார்.

## குருதேவரின் பற்றுள்ளமும் ஆசியும் :

ஞானப்பிரகாசரின் விவேகபூர்வமான விடைகளைக் கேட்டு மகிழ்ந்த உபாத்தியாயர், அவரை நோக்கி, '' நீயே பிராமணன்!'' என்று பாராட்டித் தமக்கு முன்னிலையில் வந்தமர்ந்து தொடர்ந்து படிக்குமாறு பணித்தார். தேவி திருவருளை நினைந்துருகிய ஞானப்பிரகாசர், ஓராண்டு காலத்தில் அருங்கலைகள் பலவற்றை மேலதிகமாக நல்ல மனம் படைத்த உத்தமரான அந்த உபாத்தியாயரிடம் கற்றுக் கொண்டார்.

இவ்வாறாக ஞானப்பிரகாசரின் பாண்டித்தியத்தை அறிந்த உபாத்தியாயர், அவரை வெகுவாகப் பாராட்டி, '' நீ உத்தமன். உய்தி தரக் கூடிய நூல்கள் எழுதக் கூடிய பாண்டித்தியம் உனக்கு உண்டாகிவிட்டது. நீ போகலாம். நீ வாழ்வாயாக! '' என்று வழியனுப்பினார்.

உபாத்தியாயரை வித்தியா குருவாக மதித்து வீழ்ந்து வணங்கி எழுந்த ஞானப்பிரகாசரை நோக்கியகுரு அவரிடம், ''நீ தென்னாட்டில் செய்ய வேண்டிய பணிகள் மிகவும் உண்டு'' என்று கூறி வாழ்த்தி வழியனுப்பினார். வித்தியா குருவின் ஆணையைச் சிரமேற்கொண்ட ஞானப்பிரகாசர் தமிழ்நாடு மீண்டு, பஞ்ச பூதத்தலங்களில் ஒன்றாய திருவண்ணாமலையை அடைந்தார்.

## திருவண்ணாமலை யாதீனத்தில் பணிகள் :

அண்ணாமலையான் அடிக்கமலங்களை வணங்கி வாழ்ந்திருந்த ஞானப்பிரகாசர் அங்கே விளங்கிய ஆதீனத்தை அடைந்து, மடாதிபதிகளை வணங்கி, அவரிடம் தாமுற்றதும் உற வேண்டியதும் உரைத்துத் தாம் செய்யக்கூடியன எவையெனக் கேட்டு நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய பக்குவத்தை உய்த்துணர்ந்த மடாதிபதிகள் இவருக்கு வேண்டிய சந்நியாச தீட்சையளித்துக் காவியும் கொடுத்து, அடுத்துப் படிக்க வேண்டிய சிவாகமங்களை மடத்திலிருந்தே படித்துணருமாறு பணித்தார்கள்.

ஞானப்பிரகாசர் திருவண்ணாமலையாதீனத்துத் தொடர்பால் தீட்சை வகைகளின் சிறப்பாலும், உபதேச பரம்பரையின் வாய்ப்பாலும், சந்நியாசப் பேறாலும் பெரிதுயர்ந்து, அம்மடத்தில்தானே தம்பிரான் சுவாமிகள் என்னும் பதவியும் பெற்றிருந்தார்.

இத்தகைய சூழ்நிலையில் ஞானங் கைவரப்பெற்ற ஞானப் பிரகாசத் தம்பிரான் சுவாமிகள், யாண்டும் கிடைத்தற் கரியன வாய சிவாகமங்களைக் கற்ற விவேக முறுக்கினால், ஆதீனத் தலைவர் கட்டளையைச் சிரமேற்கொண்டு, பல வடமொழி நூல்களை எழுதுவாராயினர்.

---

## பெரும் புண்ணியங்கள்

பசுக்களை வலஞ்செய்து வணங்கித் துதித்துப் புல்லுக் கொடுத்தலும், ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், கடவுளுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத்தானஞ் செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைக் கடவுள் சந்நிதிக்குத் தானஞ் செய்தலும், தேவாலய திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம்,

— நாவலர் பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசர் என்னும் திருநாமம்

தமிழுலகில் சைவநெறியில் ஞானப்பிரகாசர் என்னும் பெயர் பெற்ற பெரியவர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் காஞ்சி ஞானப்பிரகாசர், சிவபுரம் ஞானப்பிரகாசர், களந்தை ஞானப் பிரகாசர், மதுரை ஞானப்பிரகாசர், திருவொற்றியூர் ஞானப் பிரகாசர். கச்சி ஞானப்பிரகாசர், கமலை ஞானப்பிரகாசர், செட்டித்தெரு ஞானப்பிரகாசர், பனையூர் ஞானப்பிரகாசர், வேதாந்த ஞானப்பிரகாசர், மழுவெடுத்த ஞானப்பிரகாசர், சிதம்பரம் ஞானப்பிரகாசர், திருவண்ணாமலை ஞானப்பிரகாசர், சாலிவாடிபுரம் ஞானப்பிரகாசர் என்பவர்கள் ஒரு சிலராவர்.

இவர்களுள் சிதம்பரம் ஞானப்பிரகாசர், திருவண்ணாமலை ஞானப்பிரகாசர், சாலிவாடிபுரம் ஞானப்பிரகாசர் என வழங் கியவர் ஒருவரே எங்கள் ஞானப்பிரகாசர். இவர் யாழ்ப்பாணத் துத் திருநெல்வேலியின் ஒரு பெயரான சாலிவாடிபுரத்தவராத லின், திருவண்ணாமலை யாதீனத்தில் தீட்சையும் உபதேசமும் பெற்றவராதலின், சிதம்பரத்தில் தங்கியிருந்து பணி செய்தவராக லின் மூன்று ஊர்ப் பெயர்களையும் பெற்ற ஒருவராயினார் என்க.

ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகளைத் தமிழ்நாட்டபி மானிகளும் நம்மவர்களும் ஞானப்பிரகாச முனிவர் என்று வழங்கி வணங்குவர். அவர் அன்று திருவண்ணாமலையாகிய அக்கினித் தலத்திலும் சிதம்பரமாய ஆகாயத்தலத்திலும் செய்த சிவப் பணிகள் அதிகமானவை.

ஞானப்பிரகாசத்தம்பிரான்சுவாமிகள் அன்றுதிருவண்ணாமலை ஆதீனத்தில் நெருக்கமான தொடர்புகொண்டு தம்பிரான்சுவாமிக ளெனப் பட்டம் பெற்றமை, முன்னர் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் ஈழத்திலிருந்து, மதுரைச் சங்கத்துக்குச் சென்று கவியரங்கேறி எங்கள் நாட்டை அங்கே புகழ்பெறச் செய்த பூதன் தேவனார் என்னும் புலவர் பெருமானின் செயல் போன்ற தாகும். என்னை, இவர் அங்கு சென்று திருவண்ணாமலையில் ஈழத்துப் பெருமையை நிலைநாட்டியமையால், திருவண்ணாமலை யாதீனத்தார் எங்கள் முன்னோரை அறிந்திருந்தனர். அந்தவரன் முறையிலேதான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத் தில் அங்கிருந்து கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் என்னும் கனகசபாபதி யோகியர் இங்கே வந்து, இருபாலைச் சேனாதி ராயர் முதலானோருக்குக் குருவாய் விளங்கி, ஆறுமுகநாவலர் அவர்கள் வழியில் இங்கே சைவ மறுமலர்ச்சி உண்டாக்க வழி வகுத்தார். எமக்குத் திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணா மலை ஆதீனத் தொடர்பு தந்தவர் ஞானப்பிரகாசரேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகள் செய்த வடமொழி நூல்கள்

ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளுக்குச் சிவகாமி அம்பாளின் திருவருளும், வங்காளத்துப் பேராசிரியரின் குருவருளும், யோக பூமியாகிய திருவண்ணாமலை யாதீனத்தாரின் ஞானவூற்றும் உந்து சக்திகளாயிருப்ப, அவர் உலக நன்மை கருதி உருப்படியான உயர் ஞான நூல்களை எழுதுவாராயினர். அன்று அறிவாளிகள் பலரும் வடமொழியே அறிவுப்பாஷை எனக் கருதி வடமொழியிலேயே நூல்கள் எழுதினார்களாக, இவரும் அந்த மரபில் தாமும் அங்ஙனமாகவே எழுதினார் போலும். இவர் எழுதிய நூல்களுள் பிற்காலத்தவருக்கு ஏட்டுருவிற் கிடைத்தவை.

**பௌஷ்கராகம விருத்தி, சித்தாந்தசிகாமணி, பிரமாண தீபிகை, சிவஞான போதவிருத்தி, பிராசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோக சாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதி மான்மிய சங்கிரகம், ஓமாத்திரி கற்பம்.**

இவ்வாறான உயர் ஞான நூல்களை ஞானப்பிரகாசர் எழுதிய போது, உடனுக்குடன் ஆதீனத்துத் தம்பிரான்களும் வித்துவான்களும் கற்றுக்குட்டிகளும் ஏனையோரும் ஆர்வத்தோடு கருத்தூன்றி ஏட்டுருவிலேயே கற்று வந்தார்கள். அவர்களுட் சிலர் மறைவாகத் தமக்குள்ளே எழுந்த வித்துவக் காய்ச்சல் காரணமாக, ''இவருக்கு வடமொழிதான் கைவந்த மொழி, இவருக்குத் தாய்மொழியாய தமிழ் வராது போலும்'' எனப் பேசிக்கொண்டார்கள். அவர்கள் கூறிய குறிப்பை எப்படியோ அறிந்து கொண்ட ஞானப்பிரகாசர் தமிழிலும் எழுதுவேன் என்று கூறி எழுதத் தொடங்கினார்.

## சுவாமிகள் செய்த தமிழ் நூல்கள்

சுவாமிகள் தமக்குத் தமிழ் நன்றாகத் தெரியும், அன்றிச் செய்யுள் இயற்றவும் தெரியும் எனக் கூறி, வசனபாகமாகவும், செய்யுட்பாகமாகவும் சில நூல்கள் செய்துள்ளார். அவை ஒரு காலத்தில் கிடைப்பனவாயிருந்து, இன்று கிடைத்தற்கரியனவாய் விட்டன.

அவர் செய்த நூல்களுட் சிலவற்றை ஆறுமுகநாவலர் அவர்களின் தமையனார் மைந்தர் தம்பு கைலாசபிள்ளை என்பார் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் அச்சிட்டு வெளியிட்டதும் உண்டு. சில நூல்களின் விபரத்தைத் தம்பிரான் சுவாமிகளே தமது சிவஞானசித்தியார் உரை விளக்கத்தில் எடுத்துக் காட்டியும் உள்ளார். இவ்வாறாக அவர் செய்த தமிழ் நூல்களுள் ஒரு சில.

**திட்சாலட்சணம், தத்துவ வியாபார விவரணம், அவஸ்தா நிருபணம், மகாவாக்கிய சங்கிரணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரமும் யாழ்ப்பாணத்தாரும்

பேராசிரியர் சோம. லெ. செட்டியார் சிதம்பரம் பெருமைப்படல் வேண்டும் என்று கூறுவதற்கு முன்னரே சிதம்பரத்தின் பெருமையை யாழ்ப்பாணத்தார் நன்கறிந்திருந்தனர். சைவ உலகின் இருதயஸ்தானம் என்பதறிந்த நம் முன்னோர் ஆண்டுதோறும் அங்குச் சென்று ஆருத்திராதரிசனங் கண்டு வந்தனர். சிவபூமியாய இலங்கைக்கு ஊடாகச் செல்லும் நாடி சிதம்பரத்தை அடைகிறது என்பது மெய்ஞ்ஞானம்.

யாழ்ப்பாணத்தார் சிதம்பரத்திற்கொண்ட பேரபிமானமும் பெரும்பற்றும் காரணமாக இங்குள்ள நிலங்கள், வயல்கள், வீடுகள், கடைகள் முதலியவற்றைச் சிதம்பரத்துக்குத் தருமசாதனஞ் செய்துமுள்ளார்கள். செல்வர்கள் பலர் பல்வேறு பூசைகளுக்கான அறக் கட்டளைகளுக்கு முதலீடுசெய்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்துத் தவ மூதாட்டியாய புண்ணிய நாச்சன் என்பார் செய்த அறக்கட்டளை பெரிது. ஒரு காலத்தில் சுருட்டுத் தொழிலில் புகழ்பூத்திருந்த வை. சின்னத்தம்பியாரும் சகோதரர் ஆறுமுகத்தாபிள்ளையும் செய்த அறக்கட்டளையும் உண்டு. ஆறுமுகநாவலர் அவர்களின் பணியும், வரணியூரார், சங்கானையூரார் பெயராலமைந்த பெரு மடங்களும் செவ்வாய்க்கிழமை மடமும் யாழ்ப்பாணத்தார் செய்த தருமங்களாகும்.

இவற்றைவிட யாழ்ப்பாணத்தார் தாங்கள் சிதம்பரத்திற் கொண்ட பெரும்பற்றுக் காரணமாகத் தாங்கள் பெற்ற பிள்ளைச் செல்வங்களுக்கும் சிதம்பரத்தை முன்னிட்டுப் பெயர்கள் இட்டு அழைத்து மகிழ்ந்ததும் உண்டு. சிதம்பரம், சிற்சபேசன், சபாபதி, கனகசபை, பொன்னம்பலம், பேரம்பலம், அம்பலவாணர், சபேசன், சபாநாதன், தில்லையம்பலம், தில்லைநாதன் முதலிய சிவமணங்கமழும் பெயர்கள் சிதம்பரத்தைத் தங்கள் சூழலில் நினைவுபடுத்துவதற்கு வழங்கிய பெயர்களாகும்.

இவ்வாறாக அண்மைக்காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் அங்கே அண்ணாமலைப்பல்கலைக் கழகம் அமைவதற்கு முன்னோடியாக, விடிவெள்ளிபோல சிதம்பரச் சூழலில் கல்விக்கண் திறப்பதற்குச் சைவப்பிரகாச வித்தியாசாலையை அமைத்தார். அதன் பரிபாலனத்திற்காக விளைநிலங்களும் தோட்டங்களும் வாங்கி உதவினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையிவ்வாறாகக் காரைநகர் மக்கள் சிதம்பரத்தை மறக்க முடியாமல், அதனைப் பிரியமாட்டாமல், தங்கள் சூழலிலேயே சிதம்பரம்போன்ற அமைப்பில் சிவாலயம் எழுப்பி ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றி மகிழும் பக்குவம், கைலையின் நினைவாகத் தமிழ் நாட்டிலும் திருக்கோணமலையிலும் தென் கைலைகள் எழுந்த வகையினமைந்ததாகும்.

சிதம்பரத்தில் ஆடிக்கொண்டே நிற்கும் அதியற்புத நடராச மூர்த்தத்தின் ஆனந்ததாண்டவப் பெருமைக்கும் மகத்துவத்துக்கும் உலகப் புகழ் ஈட்டியவர், சேர். பொன். இராமநாதன் அவர்களின் தாய்மாமன் மைந்தனாகிய கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்களாவர். அவரின் சிவநடனம் என்னும் நூல் ஆங்கிலமறிந்தவர்களை வெகுவாகச் சிந்திக்கவைத்தது.

சிதம்பர மும்மணிக்கோவை, உண்மை விளக்கம், திருவாதவூரடிகள் புராணம் முதலியவற்றின் மூலமாகச் சிவநடனத்தின் சிறப்பைக் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அகிலத்துக்கே அறிய வைத்தவராவர். அதன் பெருமையைப் பீடிகையாகக்கொண்டே பெரிய விஞ்ஞானியும் மெய்ஞ்ஞானியுமாய அல்சஸ் ஹக்ஸ்லி என்பார் சனாதனதர்மம் என்னும் தமது பெறேனியல் பிலோசபியை எழுதியுள்ளார். ஆகாசலிங்கமுள்ள சிதம்பரத்தை அகக்கண்ணாற் கண்டு தொழுதுருகுதல் வேண்டும்.

---

## இளமையிற் கல்

அழுக்குப் படியாத சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும். அழுக்குப் படிந்த சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கமாட்டாது. சிறுபிராயத்திலே கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப் பதியும். புத்தி சமுசாரத்திலே விழுந்து வருத்தத்தை அடைந்துகொண்டிருக்கின்ற முதிர்ந்த பிராயத்திலே கற்றாலும் கல்வி நன்றாகப் புத்தியிலே பதியமாட்டாது. ஆதலினாலன்றோ ஔவையார் '' இளமையிற் கல் '' என்று அருளிச் செய்தார்.

— **நாவலர்பெருமான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த சாத்திரங்கள்

சைவசித்தாந்தம் என்றும், மெய்கண்டசாத்திரம் என்றும் தமிழில் வழங்கும் மெய்யியல் நூல்கள் பதினான்கு எனத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவை எவை எனக்கூறும் பாடல் ஒன்றும் இயற்றப் பெற்றுள்ளது.

> '' உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
> பிந்திருபா உண்மை பிரகாசம் – வந்தவருட்
> பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
> உண்மைநெறி சங்கற்பம் உற்று ''

இவை முறையே திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாஇருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாம்.

இவற்றுள் திருவுந்தியார் செய்தவர் திருவியலூர் உய்யவந்த தேவர், திருக்களிற்றுப் படியார் செய்தவர், திருக்கடவூர் உய்ய வந்ததேவர், சிவஞான போதம் செய்தவர் மெய்கண்ட தேவர், சிவஞான சித்தியார், இருபாஇருபஃது செய்தவர் அருணந்தி சிவாசாரியர். ஏனைய எட்டுநூல்களும் செய்தவர் உமாபதி சிவா சாரியர் ஆவார்.

---

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு எனத் தொகுத்து முதலில் பதிப்பித்தவர் மதுரைநாயகப்பிள்ளை என்பவராவர். அவரே முன்சொன்ன பாடலையும் வெளியிட்டுப் பதினான்கு என்னும் எண்ணிக்கையையும் குறிப்பிட்டவர். அவர் வெளியிட்ட காலம் 1866 ஆகும்.

ஆனால் உண்மையை ஆராய்ந்த அண்மைக்கால ஆராய்ச்சி யாளர், மும்மொழிப் புலவர் மு. அருணாசலம் அவர்கள் உள்ளிட்ட வர்கள் கண்டவகையில், சிற்றம்பலநாடிகள் செய்த துகளறுபோதம் வாகீசமுனிவர் செய்த ஞானாமிர்தம், சந்தானகுரவருள் மூன்றா மவராய மறைஞான சம்பந்தர் செய்த சதமணிக்கோவை, இன்னும் இவை போன்றசில நூல்கள் பதினான்குசாத்திரத் தொகுதியில் இடம்பெறவில்லை என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்சொன்ன மூன்று நூல்களுள் துகளறுபோதத்தின் அருமையை நன்கறிந்த யாழ்ப்பாணத்துத் திக்கம் செல்லையா என்னும் சைவப் பெரியார் அதற்கு ஆணித்தரமான உரைஎழுதி வெளியிட்டு முள்ளார். ஞானாமிர்தத்தை நன்காராய்ந்த தமிழ்நாட்டு ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் அதனைப் பாரிய உரையோடு வெளியிட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு ஆராயும்போது மெய் கண்ட சாத்திரங்கள் பதினேழுக்கும் அப்பால் உள்ளன என்று துணியலாம் போலும். தக்க பெரியவர்கள் ஆணித்தரமாக ஆராய்ந்து முடிபுகாணும்வரை நாம் அவசரப்படாமல் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு என்றே கூறி அமைதலே சாலநன்றாகும்.

இங்ஙனமாகச் சித்தாந்தசாத்திரங்கள் கூறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை, அவற்றின் தத்துவம் என்பன யாவும் திருமுறைகளில் நன்றாக ஊறிக்கிடக்கின்றன. திருமூலர் தந்தருளிய திருமந்திரம் முதல் சேக்கிழார் தந்தருளிய பெரிய புராணம் ஈறாகவுள்ள 18300 பாடல்களும் முப்பொருள் உண்மைகூற எழுந்தனவேயாம். இத்தகைய திராவிடசிந்தனைக்கு முதலில் நூல் செய்தவர் திருவியலூர் உய்யவந்ததேவர் ஆயினும், மெய்கண்டாரின் சிவஞானபோதம் இறுக்கமாயும் சுருக்கமாயும் அடக்கமாயும் ஒருகட்டுக்கோப்புள் அமைந்ததனாற் போலும் அதை முடிமணியாகக் கொள்கின்றார்கள். அதனைச் செய்தருளிய மெய்கண்டதேவரின் திருநாமத்தை முன்னிட்டுச் சித்தாந்த சாத்திரங்கள் மெய்கண்டசாத்திரங்கள் என்கிறார்கள். உண்மை யில் அவை மெய்ஞ்ஞானத்தைக் கூறுவனவாயுமுள்ளன என்பதும் சிந்திக்கவேண்டியதாகும்.

---

**புராண படனம்**

புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும், அவை களுக்குப் பொருள் சொல்லலும், கேட்டலும் சிறந்த புண்ணி யங்களாம்.

புராணம் வாசித்துப் பொருள் சொல்லற்கு உரிய இடங் களாவன. திருக்கோயில், திருமடம், புண்ணிய தீர்த்தக் கரை, சமயாசார முடையவருடைய கிருகம் முதலிய சுத்தஸ்தானங்களாம்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானசித்தியார் பரபக்க உரைகள்

சித்தாந்த சாத்திரங்களுள் மிகப்பெரியது சிவஞானசித்தியார். அது சுபக்கம், பரபக்கம் எனஇரு பெரும் பகுதிகளாயுள்ளது. பரபக்கத்தில் புறச்சமய வாதிகளின் பொருந்தாக் கூற்றுகள் கண்டிக்கப்பட்டுள்ளன. சைவசமயத்துக்கான ஆதார அடிப்படையான உண்மைகள் சுபக்கத்தில் உள்ளன. சுபக்கத்துக்கு உரை எழுதியோர் எல்லோரும் பரபக்கத்துக்கு எழுதவில்லை.

பரபக்கத்து உரையாசிரியர் கூட்டத்தை வேறாக ஆராய்தல் சுலபமாயிருக்கும். பரபக்கத்துக்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், திருவொற்றியூர் தத்துவப்பிரகாசர், வேலப்பபண்டாரம் என்னும் மூவரும் தனித்தனி உரை எழுதியுள்ளார்கள். வேலப்ப பண்டாரம் திருவருட்பயனுக்குச் சிந்தனையுரையும் எழுதியுள்ளார்.

சிவஞானசித்தியார் பரபக்கவுரைகளுள் தத்துவப் பிரகாசர் உரையே அச்சில் வெளிவந்துள்ளது. சிவஞானசித்தியார் பரபக்கத்துள் உலகாயதமும், பௌத்தப்பகுதிகளான சௌத்திராந்திகன் மதம், யோகாசாரன்மதம், மாத்தியமிகன்மதம், வைபாடிகன் மதங்களும்; சமணரில், நிகண்டவாதி ஆசீவகன்மதங்களும், பாட்டாச்சாரியன் மதம், மாயாவாதம், சத்தப்பிரமவாதம் பாற்கரிய வாதம், நிரீச்சுரசாங்கியம், பஞ்சராத்திரம் முதலாய பதின்மூன்று பரசமயவுண்மைகள் சித்தாந்த நெறிநின்று கண்டிக்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானசித்தியாரும் அறுவர் உரைகளும்

## சிவஞானசித்தியார்

சிவஞானசித்தியார் என்பது மெய்கண்டசாத்திரங்கள் எனவும், சித்தாந்தசாத்திரங்கள் எனவும் வழங்கும் பதினான்கு சாத்திரங்களுள் ஒன்று. இதுபரபக்கம் சுபக்கம் என இருபகுதிகளாய் உள்ள பெரியநூல். இதனைச் செய்தவர் அருணந்தி சிவாசாரியர் என்னும் சந்தானகுரவர். இவர் மெய்கண்டாரின் சீடர். இவருக்குச் சகலாகம பண்டிதர் என்னும்பட்டம் வழங்கியதும் உண்டு. இவர் முதலில் சதாசிவ சிவாசாரியர் எனவழங்கி, மெய்கண்டாரின் குடும்பத்தாருக்கே குலகுருவாயிருந்தவர். பின்னர் மெய்கண்டாரின் வழியில் உபதேசம் பெற்று, மெய்கண்டார் கண்டசிவஞான போதம் என்னும் சிறிய நூலைவிரிவுசெய்து சிவஞானசித்தியாரும் இருபா இருபஃது என்னும் நூலும் செய்தவர்.

மெய்கண்டாரின் சீடராகி, சந்தானபரம்பரையில் இரண்டாம் குருவாயிருந்த இவர், மறைஞானசம்பந்தர் என்பவருக்குக் குருவானவர். மறைஞானசம்பந்தரின் சீடரான உமாபதிசிவாசாரியர் மெய்கண்ட பரம்பரையில் நான்காமவர். அவர் சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலாக எட்டு நூல்கள் செய்தவர்.

அருணந்தி சிவாசாரியர் செய்த சிவஞானசித்தியார் விருத்தப் பாவால் வந்த இனிய தமிழ்நூல். பார்விரித்த நூல் எல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும் என்றளவில் சிவஞானசித்தியார் ஆகமப் பொருளை அமைவுடன் அடக்கிக்காட்டும் அரிய நூலாகும். இதைச் சித்தாந்த சாத்திரச் சமுத்திரம் எனவும் கூறுவர்.

சிவஞான சித்தியாரை **ஆகமவுணர்வின் பிழிவு** எனவும், **அநுபவவுணர்வின் சிகரம்** எனவும் சைவசித்தாந்திகள் கருதிப் போற்றுவர். சிவத்துக்கு மேல் தெய்வமில்லை, சிவஞான சித்தியாருக்குமேல் நூல் இல்லை என்பது பழமொழியாகும். இன்னும் ''பாதிவிருத்தத்தால் இப்பார்விருத்தமாக உண்மை சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவதெந்நாளோ'' என்று தாயுமானசுவாமிகள் போற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணந்தி சிவாசாரியர் காலத்தில் எங்கள் சிவபெருமானின் ஆகமங்களும் உபாகமங்களும் எடுக்கவும் படிக்கவும் இலகுவாக எங்குமிருந்தன. எனவேதான் அருணந்தி சிவாசாரியர் என்னும் தீட்சாநாமம் வழங்குமுன் அவர் சகலாகம பண்டிதர் என வழங்கினார் என்பர். அவர் சைவப் பிரசாரஞ் செய்வதற்குச் சென்றவிடங்களுக் கெல்லாம் தமது ஏட்டுக்குவியலை வண்டியில் ஏற்றிச் செல்வது வழக்கம் என்றொரு கர்ணபரம்பரைச் செய்தியும் உண்டு.

இவ்வாறாக மெய்கண்டசாத்திரங்கள் பதினான்கென அமைந்த காலவரையறை வேறாகவும், அவற்றுக்குப் பெரியவர்கள் உரைகள் எழுதிய காலவரையறையின் அமைவு வேறாகவும் உள்ளன. சாத்திரங்களுள் தலையாயது எனவிருந்த சிவஞானபோதம் இருப்ப, சாத்திரங்களுள் பெரியது பாரியது எனவிருந்த சிவஞானசித்தியர் இருப்ப, இவையிரண்டின் பின்வந்த சிவப்பிரகாசம் என்னும் நூலுக்கே முதலில் உரை எழுந்ததாகும்.

சிவப்பிரகாசத்துக்கு முதலில் உரையெழுதியவர்கள் மதுரை ஞானப்பிரகாசர் என்பாரும், சிவப்பிரகாசர் என்பாருமுளர். இவர்கள் தனித்தனியாக உரை எழுதியவர்களாவர். இவர்களின் காலம் பதினைந்தாம் நூற்றாண்டாகும்.

## சிவஞானசித்தியாரின் முதல் உரை

அடுத்துச்சிவஞானசித்தியாருக்கே உரைகள் எழுந்தனவாகும். சிவஞானசித்தியாருக்கு முதலில் உரைஎழுதியவர் சிதம்பரம் மறைஞான தேசிகர் என்பவர் ஆவர். இவர் சிவதருமோத்தரம் என்னும் நூலுக்கும், பதிபசுபாசப் பனுவல் என்னும் நூலுக்கும் உரை எழுதியவராவர். இவர் சைவாகமங்கள் பலவற்றை மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். இவர் காட்டியுள்ள ஆகமங்கள் இன்று காணக்கிடையாமற் போய்விட்டன. இவர் பதிபசுபாசப் பனுவல் செய்த கண்கட்டிமறை ஞானபண்டாரம் என்பாரின் சீடருமாவர். இவர் சீகாழியில் தோன்றியவர் என்பர்.

மறைஞான தேசிகர் தமது சிவஞானசித்தியார் உரையிற் பெரும்பாலும் வடமொழிநூற்பிரமாணங்களையே பெய்து போவர். சிறுபான்மை அளவைவிளக்கம், சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவவிளக்கம், திருக்குறள், திருமந்திரம், தேவாரம், திருவாசகம், தொல்காப்பியம் முதலிய நூல்களையும் எடுத்துக்காட்டுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஞானசித்தியாரின் இரண்டாம் உரை

சிவஞான சித்தியாருக்கு உரையெழுதியவர்களுள் இரண்டாமவர் சிவாக்கிரயோகிகள் என்பவராவர். இவர் ஸ்கந்த சந்தானம் சூரியனார் கோயில் ஆதீனத்துக் குருமுதல்வராயிருந்தவர். இவர் வடமொழியில் பேராற்றல் வாய்ந்தவராய்ப் பெருநூல்களைப் படித்தும் பெருநூல்கள் செய்தும் புகழ்பெற்றவர். வடமொழியில் 12000 கிரந்தங்கள் கொண்ட சிவாக்கிர பாடியம் என்னும் நூல் செய்தவர். தமிழில் சிவநெறிப்பிரகாசம் என்னும் அருமையான நூலைவிருத்தப்பாவில் செய்தவர். இந்நூலில் இவர் சிவதீட்சையின் மகத்துவத்தையும் பயனையும் அருமையாக விளக்கியுள்ளார்.

இத்தகைய பெரியாராயசிவாக்கிரயோகியர் சிவஞான சித்தியாருக்கு எழுதிய உரையில் சைவத்துக்கே சிறப்பானவையான ஆகமங்கள் பலவற்றை மேற்கோளாகப் பலவிடங்களிற் காட்டியுள்ளார். இவருடைய உரையில் வடமொழிப் பதங்கள் மிகுதியாக வருவனவாயினும் அவை பொருள்விளங்குமளவினவாய் உள்ளன. இவர் சைவசமயத்தில் எல்லோருக்கும் சந்நியாசம் பெறும் அதிகாரமும் உரிமையும் உண்டென்றெழுதியதால் அதுகாறும் சந்நியாசம் பிராமணர்க்கே ஏகபோகவுரிமையாயிருந்த விடாப்பிடி வெகுவாகத் தளர்வதாயிற்று. இதனால் இவர் பரந்தமனப்பான்மைகொண்டவர் என்பது போற்றுதற்குரியதாயிற்று.

சிவாக்கிரயோகியர் தமது சிவஞான சித்தியார் உரையில் சைவசித்தாந்தத்துக்கு முரணான சிலகருத்துக்களையும் புகுத்தியுள்ளார். இவைபாரம்பரியத்துக்கும் உண்மைக்கும் புறம்பானவை என்பார். இவர் பதியே உலகப்படைப்புக்கு முதற்காரணமும் நிமித்தகாரணமும் என்று எழுதியமை நுணுகியாய்வோருக்கே முரண்பாடாகத் தெரியவரும். இதில் இவர் முதற்காரணமும் நிமித்தகாரணமும் என்பது பிழை. முதற்காரணம் மாயை என்பதே சைவசித்தாந்தம்.

இருவினை யொப்பு என்பதிலும் இவர் கொண்ட கருத்து பிழையானதாகும் என்ப. சிவபுண்ணிய விளைவு காரணமாகப் பாவம், புண்ணியம் என்ற இரண்டினுஞ்சார்பற்றிருக்கும் உள்ளச் சமநிலையே இருவினை ஒப்புநிலை என்னும் சைவ சித்தாந்தம்.

பாவப்பலன்களில் அதிதீவிரமான ஒன்றும், புண்ணியப் பலன்களில் அதிதீவிரமான ஒன்றும் சமகாலத்தில் அநுபவத்துக்கு வரும் நிலை நேர்ந்து அந்நிலையில், சுந்தோபசுந்த நியாயப் பிரகாரம் இரண்டும் தம்முள் மோதியழியும் நிலையே இருவினையொப்புநிலை என்பர் சிவாக்கிரயோகி. இக்கருத்தைச் சிவஞானசுவாமி மறுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாக்கிரயோகிகள் வடமொழியறிவு மிக்கவராதலின் அவர் வடமொழிச் சர்வ ஞானோத்தரம், தேவிகா லோத்தரம், சுருதி சூக்தி மாலை என்னும் மூன்றுக்கும் தமிழுரை செய்தார் என்பர். இவர் செய்த சிவஞானசித்தியாருரையை இவர் தம் சீடர்கள் பெரிதும் போற்றிப் புகழ்ந்ததும் உண்டு.

**''திருவீழியுற்ற சிவயோகிசெப்பு சிவஞானசித்தியுரையே''**

என்றும்

**''திரமருவு சிவஞானசித்திதரு பொருளைத் தெளிந்திடவே**
**விரித்துரைத் தான் சிவாக்கிர தேசிகனே''**

என்றும் பலவாகப் பாடல்கள் உள்ளன.

சிவாக்கிர யோகியர் கந்தபரம்பரை எனவும் வாமதேவபரம்பரை எனவும் வழங்கிய சிவாசாரியபரம்பரையில் வந்த ஞானவான். இவர் பரம்பரையை ''அதிவர்ணாச்சிரம ஆசாரியவரிய சைவ சமயபரிபாலக சிவாக்கிரயோகீந்திர ஞானசிவாசாரிய சுவாமிகள்'' என வழங்குவார்கள்.

இவர்கள் பரம்பரை கந்தபரம்பரையென்பது குமாரக் கடவுளிடம் உபதேசம் பெற்றமையால் வந்தபெயராகும். குமாரக் கடவுள் சுத்தாத்துவிதம் போதிக்குமுகமாக **சர்வஞானோத்தரம்** என்னும் திவ்வியாகமும், பிரணவ பஞ்சாக்கர உண்மையையும் கந்தகாலோத்தரம் முதலாய ஆகமங்களையும் உபதேசித்தருளினவர். இந்தப்பரம்பரையின் முதற்குரவர் சாமதேவ முனிவர். இவர் வழிவந்தவரே நீலகண்ட சிவாசாரியர். இப்பரம்பரையில் வந்தவரே சிவாக்கிர யோகியர் என்பது வரலாறு.

## சிவஞானசித்தியாரின் மூன்றாம் உரை

சிவஞானசித்தியாருக்கு உரைஎழுதிய மூன்றாமவர் எங்கள் ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகளாவர். இவர் தமதுரை எழுவதற்கு முன் எழுதியவர்களைப் போற்றி வணங்கியுள்ளார். முன்னர் எழுதியவர்களின் உரைகள் அகலவுரைகளாகவே, தமதுரை சுருக்கமானதாயமையும் எனக்குறிப்பிட்டு, 'நவமுறு முரையுரைப்பாம்' என்பர்.

தமக்குமுன் உரைஎழுதிய மறைஞான தேசிகரைப்பாராட்டி அவருரையைத் திரு மறைஞானதேசிகருரை என்றும், அது தீவிரபுத்திமான்களுக்கே விளங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஞானப்பிரகாசமுனிவர் தமதுரையில், தாம் வடமொழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானபோத வியாக்கியானம், பிரமாணதீபிகை, சித்தாந்த சிகாமணி செய்தமையையும் குறிப்பிட்டுள்ளமை அவர் செய்த உபகரிப்புக்களுக்கு அகச்சான்றாக உள்ளது.

## சிவஞானசித்தியாரின் நான்காம் உரை

சிவஞான சித்தியாருக்கு உரைஎழுதியநான்காமவர், நிரம்ப வழகிய தேசிகர். இவர் பல புராணங்கள் செய்தவர், சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கும் உரைசெய்தவர். திருவருட் பயனுக்கு இவர் செய்தஉரையைச்சைவப்பெரியார் புலோலி சிவபாதசுந்தரம் அவர்கள் போற்றுவர்.

நிரம்ப அழகியதேசிகர் அபிடேகத்தர் எனவழங்கும் மரபில் வேதாரணியத்தில் பிறந்தவர். நிரம்பவழகியர் என்பது சிவபெருமானின் திருநாமம். இவர் கமலை ஞானப்பிரகாசர் என்பவரின் மாணாக்கர். இவர் திருப்பரங்குன்றத்தலபுராணம், சேது புராணம், திருவையாற்றுப் புராணம் பாடியவர். இன்னும் இவர் வேணுவனபுராணமும் செய்தார் என்று பேராசிரியர் மு. அருணாசலம் கருதுகின்றார்.

நிரம்பவழகியார் சித்தாந்த சாத்திரத்திற் பெரும்பற்றுள்ளம் கொண்டவர் என்பது அவர்பாடிய சேதுபுராணத்தில்வரும் பாடல் ஒன்றில் மெய்கண்டாருக்குச் செய்த வணக்கத்தாலறியலாம்.

> '' யாரும் வெல்லாத சிவஞானபோதம் சொன்ன
> மெய்கண்டான் சரணமுடிமீது கொள்வாம் ''

நிரம்பவழகியார் வடமொழி வல்லவராயினும் தமதுரையில் தமிழ்நூல்களையே பெரும்பாலும் எடுத்துக்காட்டுவார். திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் பரபக்கம், இருபா இருபஃது, திருமுறைகள், தத்துவவிளக்கம் சங்கற்பநிராகரணம் முதலிய நூல்களை இவர் எடுத்துக்காட்டுவர்.

## சிவஞானசித்தியாரின் ஐந்தாம் உரை

சிவஞானசித்தியாருக்கு உரையெழுதிய ஐந்தாமவர் மாதவச் சிவஞானயோகியர் என்னும் முனிவராவர். இவர் திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்தை அலங்கரித்த கல்விக் கடல். வடமொழிதென்மொழி கரைகண்டுணர்ந்தவர், தமிழில் செய்யுள்வடிவிலும் உரைநடைவடிவிலும் பல நூல்கள் செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சிவஞானபோதம் என்னும் முதல்நூலுக்குச் சிற்றுரையும் பாடியம் என்னும் பேருரையுஞ் செய்தவர். இவருடைய பேருரை சிவஞானபாடியம் எனப்போற்றப்பெறுவது. வடசொற் கலந்த நடையாயினும் இவர் தமிழ்நடையுறுதியானது.

திருவாவடு துறையாதீனத்தில் சிவஞான முனிவருக்குத் தனிச் சிறப்புநிலவுதல் பாரம்பரியமாயுள்ளது. சிவஞானமுனிவர் திருக் கயிலாய மரபுக்குத் தோத்திரப் பாடல்கள் இயற்றியதோடு, சிவஞானசித்தியாரை சிவாகமார்த்தங்களுக்கெல்லாம் உரையாணி என்றும் கூறுவர்.

திருவாவடுதுறையில் சிவஞானமுனிவரின் உரைக்குப் பெரு மதிப்புநிலவியது. எனவேதான் அங்கேபாடங்கேட்கப் போகின்ற மாணாக்கர்களுக்கு முதலில் சிவஞானமுனிவரின் உரையைப் பாடஞ்சொல்வார்கள். அதன் பின்னர் சுப்பிரமணியதேசிகரின் உரையைச் சொல்வார்கள். இருவர் உரைகளிலும் தாடனம் வந்த பின்னரே ஏனைய உரைகளைக் கூறுவார்கள். எங்கள் ஞானப் பிரகாசர் உரையைப் படிக்கநேரும்போது, அவர் சிவசமவாதம் சொன்னவர் என்று குற்றஞ்சுமத்தி, அவருரைக்கு மறுப்பெழுதிய சிவஞானமுனிவரின் கண்டனங்களையும் உடனுக்குடன் படிக்க வைப்பர். இந்தவரன் முறையிற் கற்று அங்கே பன்னிரண்டாண்டுகள் மகாவித்துவானாயிருந்து சைவத்தையும் மடத்தையும் வளர்த்த வரே எங்கள் வடகோவைச் சபாபதி நாவலர் அவர்களாவர். சபாபதி நாவலர் அவர்களுக்குச் சிவஞான முனிவர் உபாசனா மூர்த்தியாயமைந்தவர் என்ப.

## சிவஞானசித்தியாரின் ஆறாம் உரை

சிவஞானசித்தியாருக்கு உரை எழுதிய ஆறாமவர், மேலகரம் சுப்பிரமணியதேசிகர் என்பவராவர். இவர் திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறையில் தம்பிரானாகிச் சின்னப்பட்டத் தமர்ந்து, அம்பலவாண தேசிகருக்குப்பின் மகாசந்நிதான மானவர். அருங்கலை விநோதர் எனப் புலவர்களாற் பாராட்டப் பெற்ற இவர் இளமையில் தாண்டவராய சுவாமிகள் என்பாரிடம் கல்வி பயின்றவர்.

தாண்டவராயசுவாமிகள் எங்கள் நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம் அன்றுபெருஞ் சைவப்பிரசாரகராய்ச் சைவத்தொண்டு தமிழ்த்தொண்டு செய்தமையை நேரிலறிந்து சின்னப்பட்டத் திருந்த சுப்பிரமணியதேசிகர் மூலம் ஆதீனத்துக்கு அழைப்பித்த வர். சுப்பிரமணிய தேசிகரின் அழைப்பை ஏற்று இளவலாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் அங்குசென்று தம் நாவன்மையைக் காட்டக் கேட்ட மகாசந்நிதானம் அம்பலவாண தேசிகபரமாசாரிய சுவாமிகள் ஆறுமுகத்துக்குப் பட்டுப்பீதாம்பரம் போர்த்து, பொன் கொண்டிழைத்த உருத்திராக்கம் அணிவித்து நாவலர் என்னும் பட்டமும் நல்கினார்.

## அறுவர் உரைப்பதிப்பு

இவ்வாறாகச் சிவஞானசித்தியார் சுபக்கத்தின் அறுவர் உரைகளை ஒருசேரப்பதித்தவர்கள் தமிழ்நாட்டில் சிந்தாதிரிப் பேட்டை சிவஞானபோதயந்திரசாலை யாராவர். அவர்கள் பதித்தகாலம் சர்வதாரி வருடம் வைகாசிமாதமாகும். அவர்கள் தங்கள்பதிப்பில் வேறு தகவல்கள் தரவில்லை.

ஆனால் வரலாற்றாசிரியர் மும்மொழிப் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள் தரும் விளக்கம் இவ்வுரைகளை முதலிற் பதித்தவர் சண்முகசுந்தர முதலியார் என்றும் அந்நூல் வெளி வந்தகாலம் 1880 என்றும் கூறும். அன்றி, அறுவருரைப்பதிப்பில், ஞானப்பிரகாசர் உரைப்பிரதிகளைக் கொடுத்துதவியவர்கள் வித்துவான் சுந்தரம்பிள்ளை, அரசினர் கல்லூரி ஆசான் புரசை பொன்னம்பல முதலியார், சைவக்கிரியா தீட்சதர் சென்னை ஐயாசாமி தேசிகர் என்பவர்களாவர் என்பர். இப்பதிப்பு சிந்தாதிரிப்பேட்டை சிவஞானபோதயந்திர சாலையிலேயே வெளிவந்ததென்பர். இவ்வாறாக ஞானப்பிரகாசரின் உரைப் பிரதிகளை எத்தனையோ மேலிடத்தார்கள் பேணிப்பாதுகாத்து வந்தார்கள் என்பஃதயும் அறிந்து கொள்ளலாம்.

---

### தருமம்

கல்வியறிவொழுக்கங்களாலும், ஈசுரபத்தியினாலும் சிறந்து விளங்கும் போதகர்களைக்கொண்டு, தேவாலயங்களிலும், புண்ணிய தீர்த்தக்கரைகளிலும், மடங்களிலும் சனங்களுக்குச் சமயத்தைப் போதிப்பித்தல் வேண்டும். இதுவே எல்லாத் தருமங்களிலும் மிகமேலாகிய தருமம். இத்தருமம் இல்லாவிடத்து மற்றைத் தருமங்கள் பயன் படாவாம்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவரின் சிவஞான சித்தியார் உரை

சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு உரையெழுதிய மூன்றாமவர் எங்கள் ஞானப்பிரகாச முனிவராவர். இவருக்கு முன்னர் உரையெழுதிய இருவர் உரைகளையும், இவர் உரையையும் இவருக்குப்பின் உரையெழுதிய மூவர் உரைகளையும் சேர்த்து அறுவர் உரை என முதலிற் பரிசோதித்து அச்சேற்றியவர், கொன்றை மாநகரம் சண்முகசுந்தர முதலியார் அவர்களாவர். அவர் அச்சேற்றிய காலம் 1880 ஆகும்.

சண்முகசுந்தர முதலியார் தமக்கு ஞானப்பிரகாசரின் உரையைக் கொடுத்துதவியவர்கள் மூவர் பெருமக்கள் என்று கூறியுள்ளார். அம்மூவரும் வித்துவான் சுந்தரம்பிள்ளை, அரசர் கல்லூரி ஆசிரியர் புரசை பொன்னம்பல முதலியார், சைவக்கிரியா தீட்சிதர் சென்னை ஐயாசாமி தேசிகர் என்பவராவர். இப்பெரியார்கள் ஞானப்பிரகாச முனிவரின் வரலாற்றையும் கர்ண பரம்பரையாகக் கேட்ட வண்ணம் கூறியிருந்தார்கள் என்று அறியக்கிடக்கிறது. ஞானப்பிரகாச முனிவரின் உரையைத் தனியாக மூலத்தொடு முதலில் பதிப்பித்தவர் ஆறுமுகநாவலர் அவர்களின் மாணாக்கராய இணுவில் நடராஜ ஐயர் அவர்களாவர். ஐயரவர்கள் மூலத்தையும் உரையையும் நன்கு பரிசோதித்துக் கொடுப்ப, அவற்றை அருமையாக அச்சேற்றியவர், தமிழ் நாட்டு சி. பெருமாள் நாடார் என்பவராவர். நூல் அச்சேறிய இடம் திருப்பற்றூர் சின்னைய நாடார் அச்சியந்திரசாலையாகும். அச்சேறிய காலம் 1882 ஆம் ஆண்டுக்குச் சமமாய சர்வசித்து ஆண்டாகும்.

நடராஜ ஐயரவர்கள் ஞானப்பிரகாச முனிவரின் வரலாற்றையும் சுருக்கமாக எழுதியுள்ளார். வேறு முன்னுரையோ முகவுரையோ சிறப்புப்பாயிரமோ காணுமாறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# சிவஞானசித்தியார்

சுவபக்கத்துக்குத்

திருக்கைலாசபரம்பரைத்

திருவண்ணாமலையாதீனத்து

## ஞானப்பிரகாசமுனிவர்

இயற்றியருளிய

# வியாக்கியானம்

யாழ்ப்பாணம் இணுவில்

## நடராஜ ஐயரால்

பரிசோதித்து,

## சி. பெருமாள் நாடாரால்

திருப்பற்றூர்

சின்னைய நாடார் யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

சர்வஜித்து வருடம் மகர மாதம்

( Registered Copyright )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாச முனிவர் தமக்குமுன் உரையெழுதிய பெரியார்கள் இருவரையும் நன்கு மதித்துப் போற்றியுள்ளார். அவர்கள் இருவரின் உரைகள் இருப்பத் தாம் ஏன் உரையெழுதினார் என்றும் கூறுவர்.

" சிவமுற நமக்கு முந்தித் தந்திவத்திரனைச் சிந்தித்
துவமையில் சிவனொப்பில்லா வுமைகுரு குலங்கண் மற்றென்
னிவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக் கேற்ப
நவமுறு முரையுரைப்பா முன்னுரை நலங்கொளார்க்கே "

திருமறைஞான தேசிகர் ஸ்ரீசிவக்கொழுந்தாசாரியரென்னுமிவர்கள் சிவஞான சித்திக்குச் செய்தவுரைகள் விரிந்தபடியினாலே எழுவாய் பயனிலை பொருட்புணர்ச்சி பொள்ளெனத் தோன்றாவாயினும் தீவிர தீவிரதர புத்திமான்கள் தங்கள் தங்கள் சம்பிரதாயத்துக்கு மாறிச் சில விரோதித்தன் மாத்திரம் நீக்கி, நீர் நீக்கிய பால் கொளும் அன்னம் போலப் பொருள் கொள்வார்களாதலானும் மற்றையோருரைத்த உரைகள் தூரம் போய்ச் சுட்கதர்க்கமாய் முடியு மாதலானும் மந்த மதிகட்கு மயக்கம் போக்கும் பொருட்டுச் சுருக்கமாக ஓருரை சொல்வாம் என்பர்.

சிவவணக்கம் கூறிய பாடலுக்கு விளக்கங் கூறுபவர், பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன், பரவிந்து, பரநாதம், பராசத்தி, பரசிவம் என்கின்ற நவதத்துவங்கள் சிவனிடம் உன்முகமாகத் திரும்பும் வகையை விளக்குவர்.

இங்ஙனமே சிவசக்தி வணக்கத்திலும் இலயம் போகம். அதிகாரம் முதலான வற்றை விரித்து விளக்குவர். தேவி போக சக்தியாய், யோக சக்தியாய், வீரசக்தியாய் நிலவுவதைக் குறிப்பர்.

தேகம் என்பது பரதேகம், சூக்கும தேகம், தூலதேகம் என மூவகை என்பர். சத்தியோ நிர்வாண தீட்சையிலே தேசிகனுக்கே ஞானம் வேண்டுவது, சாதகனுக்கு ஞானம் வேண்டுவதில்லை என்றும் தேசிகனுக்கு ஞானம் பிரதானம், சாதகனுக்குத் தீட்சை பிரதானம் என்றும் விளக்குவர். சிவனாரது கமலபாதம் என்பதை விளக்கும் போது, தாமரைபோல் விரிந்த சக்தியென்னும் சிவத்துவலட்சணத்தை என்பர்.

அளவை பற்றிக் கூறும் போது அது ஆறுவகை யென்றும் அது பிரமாணங்கள் என வழங்கும் என்றும்; அவை காண்டல் = பிரத்தியட்சம், கருதல் = அநுமானம், உரை = ஆகமம், அபாவம் = அனுபலப்தி, பொருள் = அர்த்தாபத்தி, ஒப்பு = உவமானம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அளவை மேலும் ஒழிபு = பாரிசேஷியம், உண்மை = சம்பவம், ஐதிகம் = உலோகவாதம், இயல்பு = சுவபாவம் எனவும் உள்ளன என விளக்குவர். இவற்றை விட இன்னும் அளவைகள் உண்டென்றும் அவையாவும் சாங்கிய தத்துவத்தில் உள்ளபடி சைவத்திலும் மூன்றனுள் அடங்கும் என்றும் கூறுவர். அவை மூன்றும் காண்டல், கருதல், உரை என்பர்.

இனிச் சைவ சமயத்தின் சிறப்பியல்புகளைச் சிவஞானசித்தியார் சொன்னவழியில் விளக்கும் போது, காரியோற்பத்தியில் காரணம் மூன்றும் முறையாயிருக்கும் என்பர். இன்னும் ஓரிடத்தில் '' சிவத்துவம் என்கின்ற சிவகுணவிளக்கமே சிவானந்தமென்று சித்தாந்தம் சித்தித்திருக்கவும், சிவகுணமே' சிவானந்தமென்று சிலர் சொல்லுவார்கள்; அது மாறுபடுமென்பது பிரமாணதீபிகை, சித்தாந்த சிகாமணி, சிவஞான போத வியாக்கியானம் இவைகளிலே காண்பித்துக் கண்டித்தனம்'' என்று தாம் செய்த தமிழ் நூல்களின் வரிசையின் பெயர்களையும் அகச்சான்றாக நாமறியத் தந்துள்ளார்.

இன்னும் சைவ சித்தாந்தம் பசுவர்க்கம் கூறும் போது அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்றும், இவர்களுள் விஞ்ஞானகலர் ஒருமலத்தார் என்றும் கூறும். இவ்வாறாக, ஒருமலத்தாரும் மலம் நீங்கியவழி, மந்திரர்கள், மந்திர மகேசுவரர்கள், அணு சதாசிவர்கள் என்னும் பெயர் பெறுவார்கள் என்று யாரோ விளக்கியதை இவர் மறுத்து எழுதுவர்.

'' இது முன் பின் மலையும் '' என்றும், '' ஒருமலத்தார் விஞ்ஞானகலர் என்று சொல்லியிருக்க, மலம் நீங்கி அதிகார மலமாத்திரர்களாய் அபரபதிகளாய்க் கடந்து போனவர் எப்படி விஞ்ஞானகலராவார்கள்? ஆகார்கள்'' என்பர். இன்னும் மூவகை அணுக்களாவார் ,விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ஆகார் என்பர்.

பிரபஞ்சம் தோற்று முறை கூறும் போது, சிவசங்கற்பத்தால் மாயையின் விகாரமாய்ச் சிவனுக்கு விகாரமின்றி அது தோற்றும் என்பர். சிவன் கிருத்திய கிருத்தனானாலும் விகாரியல்லன் என்பர்.

இனி, பஞ்சகிருத்தியம் என்னும் ஐந்தொழில் விளக்கம் கூறும் போது, ''சிருஷ்டியாவது சாத்துவிக குணாதிக்கத்தால் கர்த்திரு சங்கற்பத்தால் முதற் காரணத்திற் காரியப் பொருள் வெளியாதல். திதியாவது ராசத குணாதிக்கத்தால் தோற்றிய அந்தந்தப்பொருள் அந்தந்தத் தொழிலிலமைந்து முதற் காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாகநிற்றல். சங்காரமாவது தாமத குணாதிக்கத்தால் தனது தனது தொழில்களை விட்டு முதற் காரணத்தில் முழுகிமறைதல். திரோபாவமாவது மிகுதியும் நிந்திதமாகிய போக்கியப் பொரு ளினுமிது நன்றென்று நழுவாதிருத்தல். அனுக்கிரகமாவது பாச வீடுசிவத்துவ விளக்கமெனை அறிக'' என்பர்.

இன்னும் சிருஷ்டி விளக்கத்தின் போது பிரதம மகாசிருஷ்டி, அந்தமகா சிருஷ்டி, மத்திய மகா சிருஷ்டி என்பன கூறி, முறையே பரசிவன், அனந்தேசுரர், ஸ்ரீ கண்டருத்திரர் சிறப்புக்களைக் கூறுவர். மகாப்பிரளயத்தில் பரசிவமொன்றுமே பதிகளுக்குட் பரிசேஷிக்கும் என்பதையும் விளக்குவர். இங்கெல்லாம் பவுஸ்கர வசனங்களைச் சான்றாகக் காட்டுவர்.

சிவநாம சதாசிவரூபங்கள் என்பனவற்றை விளக்கும் போது வாதுளாகமத்திலிருந்து பத்தொன்பது அடிகளை மேற் கோளா கக் காட்டுவர். திருவுருச்சிவனை என்பதற்கு ஸ்ரீ கண்டசரீரியா யிருக்கும் சிவன் என்பர். போகியாயிருந்து என்பதை தேவி தேவனாயிருந்து என்பர். யோகியாய் என்பதை தட்சிணா மூர்த்தியாயிருந்து என்பர். தீட்சாவான்களுக்கே நிராலம்ப, சாலம்ப சிவத்தியான விளக்கஞ் செய்வர் என்பர். இறைவனுக்கு உருவமும் அருவமும் எப்படியானவையெனில் தரிக்கப்படுவது உரு என்றும், தரிப்பது அரு என்றும் விளக்குவர். ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்பன பஞ்ச சத்திகள் என்பர். ஆரணி, சனனி, ரோதயித்திரி உள்ளுருவுடைத் தாயிருக்கும் என்பர். இவையே திரிசத்தியுமாம் என்பர்.

பன்னிரு சூத்திரங்களின் அமைப்பையும் வரிசைக்கிரமத்தை யும் இவர் தொகுத்துச் சொன்னதும் சொலப்போவது என்னும் முறையில் தொகுத்துள்ளமை, திருக்குறளுக்குப் பரிமேலழகர் அத்தியாய வரிசையுரைத்தமைபோலுள்ளது.

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்து நீங்காதிருக்கின்றான் என்பதை விளக்க மிருகேந்திரத்தில் ஆதாரம் காட்டுவர்.

வினைகளின் விளக்கத்தின் போது, ஆகாமியமே சஞ்சிதம், பிராரத்தமாய் வரும் என்பர். சிவனே ஊட்டுவிப்பவனும் பலன் கொடுப்பவனு மென்பர். அவரவர் கொண்டதெய்வமே அவரவர் செய்யுங் கருமங்கட்கு முன்னிலையாய் நின்று பயன் கொடுக்கும். கன்மம் தானாய்ப்பலன் கொடாது என்பதை விளக்குவர். பரம சிவனே முழுமுதல் என்றவர் பின்னர் அவரவர் தெய்வம் என்ப தற்கு ஏவுதற் கருத்தா, இயற்றுதற் கருத்தா முறையை விளக்கு வர். சிவபூசையே செய்ய வேண்டியது என்பதை வற்புறுத்துவர். வேதாகம வாக்கியங்கள் பரம்பரையினாலும் சாட்சாத்தாகவும் சிவப்பணி செய்தலை விதிவாக்கியமாகக் கூறும் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்டகம் என்பதை விளக்கும் போது, புரி என்பது சூக்கும தேகம், அஷ்டகம் என்பது எட்டுக்கொத்து. அவை பூதக் கொத்து, தன்மாத்திரைக் கொத்து, கன்மேந்திரியக் கொத்து, ஞானேந்திரியக் கொத்து, அந்தக் கரணக்கொத்து, குணக்கொத்து, பிரகிருதிக்கொத்து, கலாதிக்கொத்து என்றும், இவைகளை தன்மாத்திரை அந்தக் கரணங்களாகிய எட்டினுள் அடக்கி முப்பது தத்துவம் என்றும் கூறுவர்.

சைவ புராணிக மதானுசாரியர் கோட்பாடுகளை மதித்து, சாங்கிய மத தத்துவங்கள் சில எமக்குப் பொருந்தா என்பர். அதாவது பிரகிருதி, அசுத்த மாயை, சுத்தமாயை நித்தியம் என்று சாங்கியம் கூறியது எமக்குப் பொருந்தாது என்பர்.

மறுசமயங்களின் முத்தித்தானங்களை வகுத்துக் கூறும் பாடலுக்கு விளக்கந்தரும் போது, உலோகாயத மத முதன் விவர்த்த வேதாந்த மீறாக முத்திப் போலிப்புறச் சமயமென்பர்.

மெய்தருஞ் சைவ மாதி இரு மூன்றும் என்பதற்கு, சிவமே தெய்வம் என்று கொள்ளலாற் சத்திய மாகும் சைவம், பாசு பதம், மாவிரதம், வாமம், காளாமுகம், வைரவம் என்கின்ற சட் சமயங்கள் என்பர்.

எமது கர்த்தாவினது சைவசித்தாந்த மார்க்கத்துக்குப் பெருமை கூறும் சிசிதிய விசுவசாதாக்கிய வசனம் ஒன்றை எடுத்துக் காட்டுவர்.

நவந்தருபேதம் உரைத்தபாடலில் சத்தி பேதம் ஏழு என்பதும் சிவபேதம் ஒன்பது என்பதும் வழக்காயிருப்ப, இவை எவ்வாறு பொருந்து மெனில், ''சொல்லு வோங் கேள்'' என்று விளித்து விளக்குவர்.

பரசிவம் பராசத்தி பரநாதம் பரவிந்து இவை நான்கும் தனித்தனி சிவபேதம் சத்திபேதம் என்பர். இன்னும் சிவபேதம் நான்கோடு சதாசிவமுதற் பிரமாவீறாகும் சிவபேதம் ஐந்தும் சேர சிவபேதம் ஒன்பதாகும். இவ்வாறே சத்திபேதம் நான்கோடு மனோன்மணி முதல் சரஸ்வதியீறாகும் சத்திபேதம் ஐந்தையும் சேர்க்கச் சத்தி பேதம் ஒன்பதாகும் என்பர். இவ்வாறு கூறுபவர் ஆசாரியர் சொன்னதில் தோஷ மில்லை என்று வற்புறுத்துவர். இது ஞானவான்களுக்கு விளங்கு மென்பர். மானுடசரீ ரமெடுத்தவர் சிவபூசை செய்தல் வேண்டும் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாச முனிவர் சிவஞான சித்தியாரில் பல ஏடுகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்தவர் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. உதாரணமாக, ''கணத்திடைத் தோன்றிமாயும் காயம்'' என்பது ''கணத்திடைத் தோன்றி நின்று கழியும்'' எனவும் உள்ளது எனக் காட்டுவர்.

இனிப்பாடல்களுக்கு விளக்கம் தருவதற்கு முன் அப்பாடல்கள் என்ன சொன்னவை என்பதை முதலில் விளக்குந்திறனும் முனிவர் உரையில் உச்சமாயுள்ளது. ஒருபாடலை முகஞ் செய்த போது, ''பாச ஞானத்தை நீங்கி நின்ற இடம் பசுஞானம் என்றும், பசுஞானத்தை நீங்கி நின்ற இடம் பதிஞானம் என்றும் பகர்கின்றார்'' என்பர்.

இன்னும் அருணந்திசிவாசாரியர் மறுத்துக் கூறும் இடங்களை இவர் நிராகரிக்கிறார், பராகரிக்கின்றார் என்றெல்லாம் நல்ல பதப்பிரயோகஞ் செய்து விளக்குவர். இவ்வாறே மறுத்துரைக்கின்றார், மறுத்துணர்த்துகின்றார் என்றும் விளக்குவர். இவ்வாறே ஆசிரியர் பேசுகிறார், சொல்லுகிறார், உரைக்கின்றார் இசைக்கின்றார், சாற்றுகின்றார், உணர்த்துகின்றார், போதிக்கின்றார், செப்புகின்றார், பாஷிக்கின்றார், வற்புறுத்துகின்றார், படிக்கின்றார், நிகழ்த்துகின்றார் என்றெல்லாம் விளக்குவர்.

இவ்வாறாகவும் இன்னும் நுணுக்கமாகவும் உரையெழுதிய ஞானப்பிரகாச முனிவரின் வித்தகத்தை ஓரளவுக்கு அறிவதற்கு அவர் எழுதிய விளக்கத்தை ஒரு பாடலில் மாதிரிக்காக அறியலாம்.

குருவினது பெருமை கூறுகிறார் :

பரம்பிரம மிவனென்றும் பரசிவன்றானென்றும்
பரஞானமிவனென்றும் பராபரன்றானென்று
மரன்றருஞ் சீர்நிலை யெல்லா மிவனேயென்று
மருட் குருவை வழிபடவே யவனிவன்றானாயே
யிரங்கிய வாரண மாமை மீனண்டஞ் சினையை
யியல்பினொடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவை தாமாக்குவ போற் சிவமேயாக்கும்
பரிசித்துஞ் நதித்தும் பார்த்துந்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ-ள்) பரம்— சுத்தசிவன்றானென்றும், பிரமம்— சுத்தசிவ மத்திய நிர்த்த சிவ மிவன்றானென்றும், பரசிவன்றானென்றும் —இருபரசிவனெனு மிலய சிவன்றானென்றும், பராபரன்றா னென்றும் — அனாகத சிவனென்னும் போகசிவன்றானென்றும் பரஞானமிவனென்றும் — ஞானக்கிரியா பிரவிர்த்தி மானாகிய சதாசிவனென்னும் அதிகார சிவன்றானென்றும், அரன்றருசீர் நிலையெல்லாம்—மகேசுரன், உருத்திரன், மால், பிரமன் முதற்சிவ பேதமனைத்தும் இவன்றானென்றும், (ஆரோபிதசிவாத்து விதத் தினாலே) அருட்குருவை வழிபடவே—அந்தச் சிவன் இந்தக்குரு தேகத்திலாவேசித்து இந்தக்குருவாயே கிருபா சமுத்திரனாகிய தேசிகனைப் பாவனைபண்ண, அவனிவன்றானாயே அந்தச் சிவன் இந்தக்குருதேகத்திலே ஆவேசித்து இந்தக் குருவாய், இரங்கி வாரணமுதற் பதப் பொருள் வெளிப்பொருள். இம்முத் திருட்டாந்த தாட்டாந்திகப் பொருளுணர்ந்துரைக்குமிடத் துயிர்க் கியற்கையாய் மலத்தின் மறைந்த சிவத்துவஞ் சிவனால் விளங்குமெனும் பொருள் விளங்கிற்று.

இறுதியாக உரை முடிவில் அரும் பதப் பொருள் கூறிய அமைவு போற்றத்தக்கது. அவற்றுள் ஒரு சில விளக்கங்களை அறியலாம்.

சுரோதா— கேட்கிறவன். சுவத்தி—மங்கலம். சைதன்னியம் —அறிவு. தியாச்சியம்— தள்ளத்தக்கது. துல்லபம்— அரிது. ஆலம்பம்— பற்றுக்கோடு. நேதி— இப்படியன்று. பிரபோதம்— நல்லஞானம். அலேகம்— எழுதாதது. கிருத்து— செய்தல். அதிஷ் டானம் — இடமாயிருத்தல். அதிதி— முன்னாளிற்காணாதவன் அத்தியந்தம் — முழுதும், ஆன்மிகம் — உள்ளது. அபாவம்—முன் னில்லாமை. அந்தர் — உள். கோடி — நுனி. ஐதிகம் — கேள்வி. சர்வதா — எப்போதும். சமவாயசம்பந்தம் — பிரிபடாசசம்பந்தம். பிரஞ்ஞை — அறிவு. பிராப்தம் — அடையப்பட்ட, விபாகம் — பிரிவின்மை. ஆரியன் — சிவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவர் தமதுரையில் மேற்கோள் காட்டிய நூல்கள்

ஞானப்பிரகாச முனிவர் காலத்தில் சைவாகமங்கள் பெரும்பாலானவை கிடைக்கக் கூடியனவாயிருந்தன. சைவசித்தாந்திகளுக்குச் சிறப்பு நூல்களாய ஆகமங்களே பிரமாண நூல்களுமாகும். முனிவர் அவற்றைச் சிவ வசனங்கள் என்று போற்றி, ஆங்காங்கே ஆதாரங்காட்டுவர். இவருரையில் பதினெட்டு ஆகமங்களின் சாரம் அறியக்கூடியதாயுள்ளது.

சந்தான குரவர்களுள் ஒருவராய உமாபதி சிவாசாரியர் விருத்தியுரை செய்தருளிய பௌட்கராகமத்தை எங்கள் முனிவர் பொன்னே போல் போற்றிப் பெருமளவில் மேற்கோள் காட்டுவர். இன்னும் உமாபதியார் செய்தருளிய சிவப்பிரகாசம், கோயிற் புராணம் முதலிய நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவர். இன்னும் தத்துவக்கட்டளை சிவதருமோத்தரம் முதலிய நூல்களிலும் மேற்கோள் காட்டுவர். ஞானாமிர்தம் என்னும் நூலிலிருந்தும் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய ஞான நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவர்.

முனிவரின் தமிழிலக்கண அறிவும் போற்றுதற்குரியது. தொல்காப்பிய விதிகளையும் இவர் ஆங்காங்கே காட்டியுள்ளார்.

---

### பெரியோரை வழிபடல்

**பெரியோர் உன் வீட்டுக்கு வந்தாராயின், நீ அவரை விரைந்து எதிர் கொண்டு, கும்பிட்டு, அழைத்துக் கொண்டு வந்து ஆசனத்திலே இருத்தி, அவரை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, எழும்பி அவர் ''இரு'' என்ற பின் இருக்கக் கடவாய். அவர் போம் பொழுது எழும்பி, அவர் பின்னே சிறிது தூரம் போய், அவரைக் கும்பிட்டு, விடை பெற்றுக் கொண்டு திரும்பக் கடவாய்.**

— நாவலர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவரின் உரைச்சிறப்பை நயந்தவர்கள்

ஞானப்பிரகாச முனிவரின் சிவஞான சித்தியார் உரைச் சிறப்பை நயந்தவர்கள் பதினேழாம் நூற்றாண்டிலும், பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டி லும் பலரிருந்தார்கள். முனிவரின் சம காலத்தவர் இவருரை யைக் கருத்தூன்றிக் கற்றுக் கண்டனஞ் செய்துமுள்ளார்கள். சிவஞானத்தம்பிரான் என்பார் செய்த கண்டனம் ஒன்றுக்கு முனிவரின் மாணாக்கன் ஒருவர் வச்சிரதண்டம் என்னும் மறுப் பெழுதியதும் உண்டு.

சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரை எழுதிய சிவஞான முனிவரும் இவருரையை நுணுக்கமாகப் படித்து, இதில் சிவ சமவாதம் கூறப்பட்டிருப்பதாகக் கண்டித்தும் உள்ளார். அவருடைய பொழிப்புரையைப் பதவுரையாக விரித்தெழுதிய திருவாவடுதுறை யாதீன கர்த்தர் மேலகரம் சுப்பிரமணிய தேசிக பரமாசாரியரும் முனிவருரையைக் கற்றிருந்தார். அன்றி, திருவாவடுதுறையில் கல்வி கற்போர் கட்டாயமாகக் கற்க வேண்டிய உரை என வற்புறுத் தியும் இருந்தார். அது ஒரு மரபு.

எங்கள் நாட்டுப் பெரும் புலவரும் சைவப் பேரறிஞருமாய நீர்வேலி சிவசங்கர பண்டிதர் அவர்கள் ஞானப்பிரகாச முனிவரின் உரையை நன்கு பயின்றதோடு, அதனைச் செவ்வனே பரிசோதித்து **ஞானப்பிரகாசியம்** என்னும் பெயரில் வெளியிடவும் ஆயத்தஞ் செய்திருந்தார்.

இன்னும் ஆறுமுகநாவலர் அவர்கள், வட்டுக்கோட்டை அம்பலவாணர் அவர்கள், குப்பிழான் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள், மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை அவர்கள், வேலணைக் கந்தப்பிள்ளை அவர்கள், அவ்வூர் சைவசூக்கு மார்த்த போதினி பத்திராதிபர் கனகசபாபதிப்பிள்ளை, கௌரவ சேர். பொன். இராமநாதன் அவர்கள் இவ்வுரையைப் பாராட்டிப் படித்து வந்தார்கள்.

இவ்வாறாகத் தமிழ் நாட்டில் திருமயிலை ஐம்புலிங்கம் பிள்ளை அவர்களும், எங்கள் புலோலி சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களும் இவ்வுரையை நன்றாக ஆராய்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தார்கள். ஐம்புலிங்கம்பிள்ளை அவர்கள் 1953 ஆம் ஆண்டில் ஞானப்பிரகாச முனிவரைப்பற்றி ஒரு சிறு வரலாற்று நூலும் எழுதியிருந்தார். அதற்குச் சிவபாதசுந்தரம் அவர்கள் முகவுரை எழுதியுள்ளார். ஞானப்பிரகாச முனிவரைப் பூரண சிவானுபூதிமான் என்று சங்கரபண்டிதர் அவர்கள் போற்றிய வழியில், சிவபாதசுந்தரம் அவர்கள் யாழ்ப்பாணந் தந்த சிவனடியார் என்று போற்றினர். சேர். பொன். இராமநாதன் அவர்கள் சிவஞானசித்தியாரை ஞானப்பிரகாசர் உரையோடு படியுங்கள் என்று தமக்கு வேண்டியவர்களிடம் கூறி வந்தவர்.

ஏழாலையில் நால்வர் குரவர்கள் மடத்துச் சூழலில் சைவம் பரிபாலித்து வந்த சித்தவைத்திய நிபுணர் ஐயம்பிள்ளை பொன்னையா என்னும் பெரியார் சிவஞான சித்தியாரில் ஞானப்பிரகாசர் உரை நயத்தில் நன்றாகத் தோய்ந்தவர்.

நீராவியடியில் வாழ்ந்து, கச்சேரி உத்தியோகம் பார்த்த விஞ்ஞானப் பட்டதாரி விசுவநாதன் என்பாரும், அவருடைய மாணாக்கர் முருகேசு என்பவரும் சிவஞான சித்தியார் உரையை நயந்தவர்கள்.

கொழும்பில் சட்டத்தரணியாயிருந்த திருவிளங்கம் என்னும் பெரியார், அறுவர் உரைகளை நன்கறிந்து, தாமே ஒருரை எழுதி வெளியிட்டுச் சிறப்புப் பெற்றவர்.

தமிழ் நாட்டில் தூத்துக்குடி முத்தையாபிள்ளை என்பார் சிவஞான சித்தியாருக்குப் பாரிய அளவில் பேருரை எழுதிப் பெருமதிப்புப் பெற்றவர்.

---

**பாவ புண்ணியங்கள்**

நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையேம் ஆதலால் முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி அறிதலும் பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளின் பாராட்டு

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள், ஞானப்பிரகாச முனிவரின் வடமொழி நூல்களைப் பெரிதும் மதித்துப் பாராட்டித் தமது நூல்களில் இவரின் நூல்களை ஏற்ற இடங்களில் மேற்கோள்களாக எடுத்துக் காட்டியுமுள்ளார்.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ஆதீனத்தின் பெருமைக் கேற்பப் பல நூல்களும் உரைகளும் செய்தவர். சங்கப்புலவரைப் போலவும் வேறெந்தப் புலவர் போலவும் எவ்விதமான பாவினமும் உடனடியாக இயற்றவல்லவர். பழைய பல நூல்களில் இடைச் செருகல்கள் என்று இன்றைய ஆராய்ச்சியாளர் கண்டு, வெள்ளி பாடல் என வழங்குவதற்கு வெள்ளியம்பலவாணத் தம்பிரானே மூல கர்த்தாவாவர் என்றும் கூறலாம்.

முன்னொரு சமயம் களந்தை ஞானப்பிரகாசர் என்று பெயர் பெற்றிருந்த ஒருவரிடம் கல்விபயின்ற மறைஞான சம்பந்தர் என்பார் முத்திநிலை என்றொரு நூல் எழுதியிருந்தார். அந்நூலில் அவர் முத்தி என்பது ஆன்மாவுக்குள்ளே மறை பொருளாக இருந்து ஒரு காலத்தில் வெளிப்படுவது என்று எழுதியிருந்தார். முத்தி பற்றிப் பிழையாக இவர் எழுதினார் என்று கண்டித்து நூல் எழுதியவர் தருமபுரவாதீனத்துக் குருஞானசம்பந்தராவர். குருஞானசம்பந்தர் எழுதிய நூலின் பெயர் முத்தி நிச்சயம்.

மறைஞானசம்பந்தர் தமது முத்திநிலை என்னும் நூலில் "ஆன்மானந்தவாதம்" என்னும் கொள்கையை நிறுவமுயன்றார். எனவேதான் குருஞானசம்பந்தர் முத்தி நிச்சயம் எழுதி மறுத்தார். இவர் எழுதிய முத்தி நிச்சயத்தில் ஆன்மாவுக்கு இயற்கையாக ஆனந்தம் கிடையாது. அது இறைவனோடு சேரும் போதுதான் ஆனந்தம் உண்டாகிறது. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய்ச் சிவத்தை அனுபவிக்கும் போதே ஆனந்தம் உண்டாகிறது. அது ஆன்மாவுக்குள்ளிருப்பதன்று. ஆன்மாவுக்குள் ஆனந்தம் இருப்பதென்பது ஆகமங்களுக்கு முரணானது; சித்தாந்த சைவத்துக்கு மாறானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நூலுக்கே வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சிற்றுரையும் பேருரையும் எழுதினார். பேருரை எழுதிய பெரியவர் தமக்கு ஆதாரமாகக் காட்டிய நூல்களுள் பிரசாத தீபிகை என்பதும் ஒன்று. இந்தப் பிரசாத தீபிகை என்பது எங்கள் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் எழுதிய வடமொழி நூல்களுள் ஒன்று. இந்நூலிலிருந்து மேற்கோள்கள் காட்டிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள், முத்திநிலையைப் பிழையாக எழுதியவர்களின் மலைவு தீர்த்துள்ளார். இதுவேயு மன்றி, ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் வடமொழியிற் செய்த சிவயோகசாரம் என்னும் நூலை ஒருவர் சிவகோசாரம் எனத் தமிழில் மொழி பெயர்த்துமுள்ளார்.

எங்கள் தம்பிரான் சுவாமிகள் தமது **பிரமாண தீபிகை** என்னும் நூலில், வேதாகமங்களை எங்கள் சைவசமயத்தின் பிரமாண நூல்கள் என்று எழுதுவர். இவ்வாறு இவர் எழுதியமை இவருக்கு முன்னர் வாழ்ந்தவர்களுக்கும் உடன்பாடானதாகும். "மந்திர மாய்ச் சாத்திரமாய் மறை நான்காய் நீயிருந்த தந்திரத்தை நானறியத் தகுமோதான் பூரணமே" என்பது பட்டினத்தடிகள் வாக்கு. "படிக்கும் நூல்கள் சிவாகமம்" என்பது அருணந்தி சிவாசாரியரின் வாக்கு. இன்னும் உமாபதி சிவாசாரியர், சிவாக்கிரகயோகியர், அரதத்த சிவாசாரியர் முதலானோரும் இக்கூற்றையே முன் மொழிந்துள்ளனர். இவ்வாறே பின்வந்த ஆறுமுகநாவலர், அம்பலவாண நாவலர், சபாபதி நாவலர், சங்கரபண்டிதர், செந்திநாதையர், சொக்கலிங்க ஐயா முதலானோரும் ஆதரித்துள்ளனர்.

ஞானப்பிரகாச முனிவரின் உபகரிப்புகளுக்கு வெள்ளியம்பல வாணத்தம்பிரான் சுவாமிகள் பாராட்டுத் தெரிவித்தமை போல, இன்னும் ஒரு பெரியார், சிவஞானத் தம்பிரான் என்பார் கண்டனம் எழுதியதும் உண்டு. அக்கண்டனத்தைக் கேட்ட எங்கள் தம்பிரான் சுவாமிகளின் சீடர்களுள் ஒருவர் கண்டனத் துக்கு மறுப்புரையாக வச்சிரதண்டம் என்னும் சிறுநூல் எழுதியதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்கள் போற்றிய பெரியார்

ஞானப்பிரகாச முனிவரை மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை அவர்கள் முனிவரின் சிதம்பரத்துப் பணிகளால் நன்கறிந்தவர் இவர். அவர் குளந் தொட்டு மடங்கட்டிய சிதம் பரத்திலே ஆறுமுகநாவலர் அவர்கள் தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தலைமை யாசிரியராயிருந்தவர். இவர் தாம் பாடிய ஈழமண்டலசதகம் என்னும் நூலில் ஞானப்பிரகாச முனிவரின் வரலாற்றைச் சுருக்கமாகப் பயபக்தியோடு தந்துள்ளார்.

"சீர்மேவி யாழ்ப்பாண திருநெல்வே லியிலியாஞ்
செய்தவ மெனாவுதித்தான்
சிந்தும் பழிக்குவெந் துயருழந் தஞ்சிநந்
தேயமக லுஞ்சிந்தையான்
ஏர்மேவு யௌவனத் தெரிகுளிக் குங்கற்பி
னேந்திழையை யுங்கதறவிட்
டெய்திச் சிதம்பரத் திறையிறைவி தாள்புக்கொ
ரேழேழு நாளுபவசித்
தூர் மேவு கௌடத்தெ முமையம்மை யருளுந்த
வுற்றாரியக் கடல் கடந்
தும்பர்குரு வின் மகா பண்டிதனு மாய்ச்சனன
முற்றபய னுறவுமையருட்
சார்மேவு சைவத் தனித்துறவி யாயினான்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுரதல வாசனே.

ஆயசிவ யோகிபின் றில்லைமா நகரடைந்
தம்மையப் பரையடிதொழு
தானந்த வெள்ளத் தமிழ்ந்தியக் கினிதிக்
கடைந்தயர் மடாலயத்துட்
போயரிய நிட்டையி லிருக்குநா ளிற்புதையல்
புவியிற் புலப்படுதலும்
புனிதனிஃ தாட்கொல்லி யென்றஞ்சி யாப்பிகொடோர்
புரையுட் புதைத்தகறலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயகோ முட்டியொரு வன்முன் புதைத்தது
துறந்துபோ னான்மறந்தே
துனைவினோ டோடிவந் தனையதங் கின்மையிற்
றுயருழந் தலறினான்சேர்
தாயகம தாகுமுன் சரணகம லந்தருதி
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

அழுகுரல் செவிக்கொடங் கையன்வெய் தினினெய்தி
யாற்றியவ லமதறைகென
வாதியந் தஞ்சொல்லு மவனைவா வென்றழைத்
தாப்பியி தகற்றுகெனுமப்
பொழுதவ னகற்றியப் புதையல்கண் டகமகிழ்வு
பொங்கியம் முனிபொன்னடி
போற்றிமு வுலகினின் போலுமுண் டோஞானி
புதையலினி நின்னதேயான்
விழுமிய செல் வத்தினேன் கைக்கொளிக் கிழியென
விரத்திகோ டன்மறுப்ப
விமலநின் பெயராலொர் குளமிங் கமைத்தியென
விட்டது விரைந்தேகினான்
றழுதழுத் தழுதுதொழு தாசர்தந் தாசநஞ்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

இத்திரவி யங்கொடிம் முனிவர்மு னியற்றியிடு
ஞானப்பிர காசகுளமே
யாமுன் னிசைத்தருள மினையதிங் கில்லையேல்
யாதுசெய்வா ரீண்டு ளோர்
சுத்தசிவ காமியொரு வற்சரத் தொருதினஞ்
சூழ்கரை தவத்தினமர்வாள்
சோதியுந் தேவியுந் தெப்போற் சவங்கொள்வர்
சுற்றிலுந் திருமடமுறும்
நீத்தநிய மத்தொழி னிரப்புமூர்த் திக்கிதரு
நீடுமந் தணரனைவரு
நிகரின் மாகேசுரரு மிவர்கள்பன் னியருமிந்
நீர்நிலையி னின்றுமகலார்
சத்திசிவ காமிகோ யிலுமமைப் பித்ததிவர்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனமே அல்வாய் ஊரைச் சேர்ந்த வே. கணபதிப்பிள்ளை என்பவரும், தாம் பாடிய ஈழமண்டல சதகம் என்னும் நூலில், ஞானப்பிரகாசர் தோன்றிய திருநெல்வேலி ஊரை ஒரு செய்யுளிலும், முனிவர் பெருமையை ஒரு செய்யுளிலும் பாடியுள்ளார்.

**பார்காத்த சோழ வளநாட்டிற்**
**பாய்புகழ்ப் பற்றியெனு**
**மூர்காத்த பாண்டி மழவனென்**
**றோதுமுயர் பருவக்**
**கார்காத்த வேளாண் குடியினன்**
**காட்டு கலையின்வழு**
**வார்காத்த வன்றிரு நெல்வேலி**
**யீழநன் மண்டலமே.**

**தானென் றுயிரை நினைக்கில் லாத**
**தவிர்த்த கொடுங்**
**கோன்மன் றனக்கம்ம கொல்வேன்கொல்**
**கோவென்று கூர்நடனக்**
**கூனொன்று சேவடியான் றில்லை போய்க்**
**குளங் கோட்டுபுண்ய**
**வானென்ற ஞானப் பிரகாச**
**னீழநன் மண்டலமே.**

இவ்வாறே அண்மைக் காலத்தில் ஈழத்துச்சிதம்பர புராணம் பாடிய நவாலியூர் இளமுருகனாரும் ஞானப்பிரகாசரைப் பல செய்யுள்களிற் போற்றிப்பாடுவர். அவர் புரிந்த பணிகளையும், அவர் பசுவுக்காக நாட்டைவிட்டுப் போன நற்செயலையும் பாடுவர். அவற்றுள் ஒரு பாடலை இங்கே படித்தறியலாம்:

**"கையர்கள் இந்நிலம் ஆண்ட காலத்துத்**
**தெய்வநல் லாக்களைச் செருக்க வேண்டினர்**
**ஐயகோ வறிவொளி முனிவ னஞ்சியே**
**மெய்ந்நெறித் தமிழகம் மேவி வாழ்ந்தனன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவர் சிவசமவாதம் சொன்னவர்தாமோ?

சிவஞானசித்தியாரின் எட்டாஞ் சூத்திரத்துப் பாடல்களை விளக்கும் முனிவர் அங்கே குருவதிகரணனாயிருக்கும் சிவன் தத்துவசோதனைபண்ணும் முறையைவிளக்கி, சிவசமாதி சித்தாந்தத்தன்றிச் செயற்படாது என்பதைவிளக்கி, லோகாயதன் முதலானோர் முத்தி, முத்திப் போலி என்பதைவிளக்கி, சித்தாந்த முத்தித் திறனை விளக்குவர், அங்கே லோகாயதன் கண்ட முத்தி, பூர்வ மீமாம்சன் கண்ட முத்தி, புத்தருள் நிர்வாணவாதி கண்ட முத்தி, அருகன் கண்ட முத்தி, தார்க்கிகன் கண்ட முத்தி, சாங்கியன் கண்ட முத்தி என்பன யாவற்றையும் விளக்குவர்.

இவ்வாறெல்லாம் விளங்கிய பின், தன் மெய்வடிவாஞ் சிவத்தை என்பதற்கு, தனது இந்த வடிவு போசாகார சிவமூர்த்தி சாரூப சிவாகாரத்தை என்றும், செம்மையே பெறுகை என்பதற்கு, பர முத்தியாகப் பரிப்பது முத்தியென்றுஞ் சிவசமவாதி செப்புவன் என்றும் விளக்குவர்.

இன்னும் சிவனடியைச் சேருமுத்தி என்பதற்கு, சிவசத்திக் கொத்து விரிக்குஞ் சாட்குண்ணிய சிற்சத்தி நாம சிவத்துவாபி வியத்தியாமுத்தி, யாமிங்குச் செப்புவதே என்பர். இனித் தமது விளக்கத்தைக் குறிப்பிட்டு,

"சில ஆதுநிக சைவாசாரியர் யார் சொல்லும் இந்த முத்தியை சாரூபமுத்தி சாற்றுஞ் சிவசமவாதி முத்தியாய்த் திருப்பி நமது சித்தாந்த சித்தசிவ சாதிர்ச்சிய சிவசாத்திியைக்கிய சிவ சுத்தாத்துவைத முத்தித் துவேஷிகளாய் வேதாந்த விசேஷ விசிஷ்டாத்துவைத கோடி கொழுவிச் சில சிவ வியத்துவைத விசிஷ்டாத்துவைதப் போலி முத்தி விளம்பி விப்பிரலம்பராய் விட்டார்கள்; வாதி கடையும் பரமுத்திக் கிரமப் பகுப்பு வகுப்பாம்"

இவ்வாறு தம்மைச் சிவசமவாதஞ் சொன்னவர் என்று சொல்வார்கள் என்று முனிவர் அன்றே கூறியுள்ளார். சிவசமவாதம் சொல்பவரும் அகச்சமயத்தவரே என்று பெரியவர்கள் விளக்குவர்.

சிவசமவாதஞ் சொன்னார் என்று பின்வந்த சிவஞான முனிவர் கண்டிப்பதற்குக் காரணம் அவர்காலத்து ஆதீனங்களிடையே நிலவிய வித்துவக் காய்ச்சல் காரணமாயிருக்கலாம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் கருதியதும் உண்டு. ஞானப்பிரகாச முனிவர் திருவண்ணாமலையாதீனத்தவர், சிவஞான முனிவர் திருவாவடுதுறையாதீனத்தவர் என்பது வெளிப்படையாகும்.

இனி வடமொழி தென்மொழி நிலைகள் கண்டுயர்ந்த சிவஞான முனிவர் தமது சிவஞான போதவுரையாலும் பாடியத்தாலும் பிறகண்டனங்களாலும் சீட பரம்பரையாலும் உயர்ந்தவர். அவர் சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரையே பெய்தவர். ஞானப்பிரகாசரோ பெருமழை பொழிந்தவர். இரண்டிலும் நனைந்தவர்கள் உண்மையை அறிவர்.

இவ்வாறாக சிவஞான முனிவர் ஞானப்பிரகாசர் சிவசமவாதம் சொன்னார் என்பதை வற்புறுத்திச் சிவசமவாதவுரை மறுப்பு என்றொரு நீண்ட கட்டுரையையும் நூலளவில் நீளுமாறு நூறுபக்கங்களில் எழுதிக் கண்டித்துள்ளார். அவருடைய கண்டனம் நாகரிகமில்லாதது என்று இன்றைய அறிஞர்கள் கண்டு அருவருக்கிறார்கள்.

சிவஞான முனிவர் மிகப்பெரியவராயிருந்தும் முன்னர் மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகியர், ஞானப்பிரகாசர், நிரம்பவழகியர் முதலானோர் சொன்ன அறுவகை அகச்சமயத்தவர்களின் கூட்டத்தைச் சிதைத்துத் தம்மனம் போனவாக்கில் எழுதியவர். ஆறும்மாறா வீறுடையனவாய இருமுச் சமயங்களைச் சிவபெருமான் தாயென வளர்த்தவர் என்று திருமுறைகளும் புராணங்களும் சொன்னவற்றையும் பொருட்படுத்தாது அறுவகையினரைப் புதுவதாக நிரைப்படுத்தியவர்.

சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், பைரவம் என்பன அகச்சமயங்கள் என்று நான்கு பெரியவர்களும் தங்கள் பேருரைகளில் எழுதியிருப்பவும் பின்வந்த சிவஞான முனிவர் பெருமான் ''பாடாணவாத முதலிய அகச்சமயத்தார்க்கு'' என்று பொழிப்புரை எழுதிய விருந்து விந்தையாகவே விளங்குகிறது.

இனி ஞானப்பிரகாசர் உரையை நாகரிகமின்றி ''சுத்த சித்தாந்த முத்தியாபாசமாகப் புதுவதாகவொன்று செய்த ஞானப்பிரகாச முனிவர்'' என்பவர் தம்பொழிப்புரை, ஞானப்பிரகாசர் உரையின் பின்வந்தது என்பதைக் கருதாது ''புதுவதாக'' என்றமை ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவருக்குச் சிறப்பு நூல்களாகவிருந்த சிவாகமங்கள் பலவற்றை வடக்கே படித்துவந்த ஞானப்பிரகாசர் அறிந்த அளவில் சிவாகமங்களைச் சிவஞான முனிவர் அறியவும் இல்லை. எடுத்தாளவுமில்லை. ஞானப்பிரகாசர் அறிந்த அளவில் சிவஞான முனிவர் வடமொழி நூல்களை அறியவில்லை என்பதும் வெளிப்படை.

இனி சிவபூமியாகிய ஈழத்திலே சரியை அறிந்து, திருமறைக் காட்டில் கிரியை அறிந்து, திருவண்ணாமலையில் யோகம் அறிந்து, சிதம்பரத்திலே ஞானம் அறிந்தவர் ஞானப்பிரகாசர்.

அவரைச் சிவஞான முனிவர் எடை போட்டறிகிறார். '' தமிழ் வியாகரணம் இருந்த மூலையுங் கண்டறியாது, தமிழ்க் காவியங்களையுங் கேட்டறியாது, தமிழ்ப் பதங்களையேனும் கேட்டறியாது, தமிழ் நூலுக்குரை செய்து மென்று நீர் ஆரம்பித்துக் கொண்டது சிறுமியர் சிறுவீடு கட்டி விளையாடுதலையொக்கும். ஆதலின், நும்முறையின் கணுள்ள சொற்குற்றங்களையொழித்துப், பொருட் குற்றங்களுட் சிற்சில எடுத்துக் கூறுவான் புகுந்தேம்'' என்பர்.

தொடர்ந்து கண்டிக்கும் போது '' இவ்வாறு சாஸ்திர முழுவதுஞ் சம்பந்தமின்றி மூலமொரு பக்கமும் உரையொரு பக்கமுமாகப் போலிப் பொருள் பயப்ப உரையெழுதுதற்கும் நும்மைப் போல யாரும் வல்லராகார். இவ்வாறே நீர் பவுட்கரத்துக்கும் வியாக்கியானஞ் செய்து மென்று பெயரிட்டு, விளையாட்டு மக்கள் நகையாடுந் திறத்தாற் போலிப் பொருள் சொல்வது போலத், தொடக்கத்திற்றானே பிரகிருதானுசாரமின்றிப் பதப் பிரயோசனங் கற்பிக்கத் தெரிந்தவர் போலக் காட்டி, மகாமேருப் பிரசம்சை பண்ணினீர்.

'' நுங் குழறுபடைகளெல்லா நும்மனோர்க்கே ஏற்பனவாம். நும்மைப் போல வியர்த்த வியாக்கியானஞ் செய்தல் அபசாரமென் றொழிக.'' '' சிவவாக்கியங்களை மனம்போனபடி யெல்லாம் பேதித்து அர்த்தஞ் செய்தலின் சிவகோபாஸ்பதர்களாய், இவ்வாறு பரமசிவத்துரோகிகளாயிருக்கு நும்மனோருடன் சம்பாஷணஞ் செய்தல் நரகபதன வேதுவாகலின் நும்மைக் காணில், தூரவொதுங்கிப் போதலே செயற்பாலதன்றி, முகம்பார்த்துரையாடுதறக்க தன்று.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தமிழ் வியாகரணத்தினாக தமிழ்க்காவியத்தினாக பரிசய மில்லையாயினும், தமிழ் வார்த்தைகளை யேனும் பயின்று வல்லீராயின், இங்ஙனம் பிரயோகிக்கலாம், இங்ஙனம் பிரயோகிக் கலாகாது என்பது தெரியகிற்பீர். " இனிஞானப்பிரகாசர் தமது பிரமாண தீபிகை, சித்தாந்த சிகாமணி, சிவஞான போதவியாக்கி யானம் முதலிய நூல்களிலே காட்டியவற்றைச் சிவஞான முனிவர் தாம் தம் சிவஞானபோத மாபாடியத்தில் கண்டித்து, அந்தநூல்கள் யாவும் ஓடி ஒதுங்கு நீரவன்றிச் சிறுவரையு நின்று ஆற்ற மாட்டா என்று உணர்க என்பர்.

இவ்வாறாகவும் இன்னும் இவை போல்வனவற்றாலும் பெரிய வரான சிவஞான முனிவர் மறுத்துரைத்த போது கூறிய தேவையற்ற வாசகங்கள் ஒரு புறமாக, அவருக்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்தவரும் அவரை உபாசனாமூர்த்தியாகக் கொண்ட வரும் ஆய ஒருவர் ஞானப்பிரகாசரைக் கண்டபடி பேய்பிசாசு என்று வைதும் இருக்கின்றார். அவர்களின் வாசகங்களை வாழ்த்தாகவும் பாராட்டாகவும் கொண்டு அவர்களுக்கு மறுப் பெழுதும் ஆற்றல் நமக்கில்லையென்பதைக் கூறி, இனி வருங் காலத்தில் யாரேனும் நம்மவர், இருவர் தம் முரண்பாட்டையும் நன்றாக அறிந்து சிவஞான முனிவரின் தேவையற்ற கண்டனங் களுக்கு மறுப்பெழுதுவார்களாக.

---

**மடம்**

**கருவி நூல்களையும் வேதாகமங்களையும் நன்றாகக் கற் றறிந்தவரும், சிவகருணை பத்தி வைராக்கியம் ஞானம் என்னும் நான்கும் உடையவருமாகிய ஆசாரியரே மடாதிபதிகளாதற்கு யோக்கியர். மடாதிபதிகள் மடத்தில் இருந்து, தம்முடைய நித்திய கரும முதலியவற்றைத் தவறாமற் செய்து கொண்டு, வேதாகமத் திருமுறைகளைப் பூசை செய்து, அவ்வேதாகமங்களைத் தாம் படிக்கவும், தம்மை அடைந்த நன்மாணாக்கர்களுக்குப் படிப் பிக்கவும், அம்மாணாக்கர்களுக்கும் பரிசாரகர்களுக்கும் மற்றைச் சனங்களுக்கும் காலந்தோறும் சமய நெறியைப் போதிக்கவும் வேண்டும்.**

— நாவலர் பெருமான்

# ஞானப் பிரகாசமுனிவரின் தொண்டுகள்

ஞானப்பிரகாசமுனிவர் சிதம்பரவாசியாய் சிதம்பரேசுவரரையும் சிவகாமித் தாயாரையும் தினமும் வணங்கியிருந்த காலத்தில், அயலில் ஒரு பொற்குவியலைக் கண்டார். அதனை எடுத்தல் சிவசம்மதமாகுமோ எனக்கருதியவர், அதனை ஆங்கொரு எருக்கும்பத்தில் புதைத்துவிட்டுத் தம்வழியே சென்றார். சில நாள்களில் செட்டியார் ஒருவர் அவ்விடத்தில் தன் பொன் முடிப்புத் தவறிவிட்டதாகக்கூறி அழுதார். அவருடைய பரிதாபகரமான நிலையைக் கேட்டறிந்த முனிவர் உடனே அவரிடம் சென்று அவரின் பொன், எருக்கும்பத்தில் இருப்பதைக் காட்டிக்கொடுத்தார்.

போனபொருள் மீண்டுவந்ததைக் கண்டு மகிழ்ந்த செட்டியார், முனிவரின் பக்குவத்தையும் பரோபகார சிந்தனையையும் வியந்து, அந்தப் பொருள் சிவப்பணிக்கே உரியதாகும் எனக்கூறி, முனிவரிடமே கொடுத்துப்போயினார்.

ஆம் பொருள் நமதேயாயின் அறம் பிறர்க்காவதுண்டோ என்று கூறிச் சென்ற செட்டியாரின் பெருந்தன்மையைப் பாராட்டிய முனிவர் சிதம்பரத்திலே திருப்பணி செய்வதற்குத் தொடங்கினார்.

சிதம்பரச் சூழலிலே அக்காலத்திலே தசதீர்த்தங்கள் என்னும் பத்துக் குளங்கள், கேணிகள், நீர்நிலைகள் இருந்தன. அவை சிவகங்கை, சூர்யதீர்த்தம், புலிமடு, வியாக்கிரபாதர் தீர்த்தம் என்னும் இளமையினார் தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகசேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, திருப்பாற்கடல் பரமானந்தகூபம் என்பனவாம்.

இங்ஙனமாக இவை ஆங்காங்கே இருந்தபோதிலும் முனிவர் அடியார்களுக்கு வசதியாகத் தாமும் ஒரு குளம் தொடுவதற்கு விரும்பி ஒரு குளம் தொட்டு வனப்பமையக் கட்டுவித்தார். இன்னும் அதனருகில் தம்பெயர் நிலவு மாறு ஒரு மடமும் அமைத்தார். இவை அமைத்தகாலம் ஏறக்குறைய 1630 ஆம் ஆண்டாகலாம் என்பர்.

இவற்றின் அமைவையும் பெருமையையும் வரலாற்றுப் பேராசிரியராய சோம. லெ. என்னும் செட்டியார் எழுதியுள்ளார். இன்னும் கூடலூர் கனகசபை என்பார் காய்தல் உள்ளத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவருப்பான விளக்கங்கூறி எழுதியுள்ளார். எவ்வாறேனும் கனகசபை அவர்கள் முனிவரின் இருபணிகளையும் மறைக்காமல் எழுதியுள்ளமை போதுமான ஆதாரமாகும்.

கனகசபை என்பாரின் கூற்று ஒருவகையில் பொறாமைப் பார்வையில் எழுந்ததாகும். ஈழத்தவர்களின் உபகரிப்புக்கள் தமிழ்நாட்டில் மிகுந்தகாலத்திலேயே அவர் எழுதினார் எனலாம். அவர் காலத்துக்கு முன்னரே சிதம்பரேசுவரர் ஆருத்திரா தரிசனம் கொடுத்தருளியபின் தீர்த்தமாடும் நீர்நிலை ஞானப்பிர காசர் தீர்த்தமாகவே இருந்தது. முனிவரின் மடமும் தீர்த்தமும் ஞானப்பிரகாசர் குடியிருப்பு என்னும் பெயரில் பலர் நிலையாக வாழ்வதற்கு ஆதாரமாயுள்ளன. இவற்றை ஆறுமுகநாவலர் அவர்களின் சீடன், வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர் பரிபாலித்து வந்தார்கள்.

---

**சத்திரம்**

கல்வியறிவும் நற்குண நற்செய்கைகளும் ஈசுரபத்தி அடியார் பத்திகளும் உடையவர்களைச் சத்திரத்துக்கு அதிகாரிகளாக நியோகித்தால், சத்திரம் நன்றாக நடக்கும். பேராசையும் வன் கண்மையும் பொறாமையும் துரபிமானமும் உடையவர்களைச் சத்திரத்துக்கு அதிகாரிகளாக நியோகித்தால், சத்திரம் நன்றாக நடவாது. ஆதலினாலே, சத்திரங் கட்டுவித்தவர் சத்திரத்துக்கு யோக்கியர்களையே அதிகாரிகளாக நியோகித்து, சத்திர தருமங் களைச் சிரத்தையோடு விதிப்படி நடத்துவிக்கவும், காலந்தோறும் தாம்பிறிது வேடந் தரித்துக் கொண்டு சென்று அச்சத்திர தரு மங்களை ஆராய்ச்சி செய்யவும் வேண்டும்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் நாட்டுப் பேராசிரியர் பாராட்டு

திறமான புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும் என்றாற் போல ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளின் வடமொழி நூல்களைப் பிரான்ஸ் நாட்டுப் பெரியார்கள் பாராட்டியுள்ளார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த புதுச்சேரியில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற பிரான்ஸ் நாட்டுக் கலைப்பீடத்தைச் சேர்ந்த தாராமைக்கேல் என்னும் பேராசிரியர் தமது வடமொழிப் புலமை கொண்டு சைவ நூல்களை ஆராய்ந்த வேளையில், ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் வடமொழியிற் செய்த நூல்களை நுணுகியாராய்ந்து, சூத்திரங்களின் இறுக்கம், கருத்தாழம் முதலியவற்றில் வெகுவாக ஈடுபட்டு வியந்தார்.

வியந்தவர் பிரஞ்சு மொழியிலே சிவயோகரத்தினதி ஞானப்பிரகாச (Sivayoga Ratna De Gnanapirakasa) என்னும் தலைப்பில் ஒரு ஆராய்ச்சி நூல் எழுதினார். இந்நூலைப் புதுச்சேரி பிறெஞ்ச் இன்ஸ்ரிரூட் ஒவ் இன்டோலஜி என்னும் நிறுவனத்தார் வெளியிட்டுள்ளார். இத்தகைய நூலுக்குச் சிதம்பரத் திருத்தலம் பெருமைப்பட வேண்டும் என்று பேராசிரியர் சோம. லெ. செட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

---

**செல்வம்**

தந்தை வழியாகவேனும், தாய் வழியாகவேனும், தாயினுடைய தந்தை முதலானவர்களின் வழியாகவேனும் வந்த பொருள் தாயம் எனப்படும். வித்தை கற்பித்தல், வேளாண்மை, வணிகம், சிற்பம், சேவை முதலிய தொழில்களாலும் யாசனத்தாலும் அடையப்பட்ட பொருள் உடைமை எனப்படும். இவ்வுடைமைப் பொருளைத் தமதிச்சைப்படி தானமுதலாவைகளாகச் செய்யலாம். பெண்ணின் பொருட்டுத் தந்தை முதலானவர்களாலே கொடுக்கப்பட்ட பொருள் சீதனம் எனப்படும். சீதனப் பொருளைக் கணவனேனும் தந்தையேனும் உடன் பிறந்தாரேனும் கொள்ளுதற்கும் கொடுத்தற்கும் உரியரல்லர்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்தப் பெரியார் தூத்துக்குடி சிவகுருநாதன் அவர்களின் மதிப்பு

தமிழ் நாட்டில் அண்மைக் காலத்தில் பல்லாண்டுகள் சைவப் பிரசாரஞ் செய்ததோடு, சிவஞான சித்தியாரை ஆராய்ந்து நூல் எழுதியவர் தூத்துக்குடி சிவகுருநாதன் அவர்களாவர். அவர் யாழ்ப்பாணத்தாரின் சைவப் பணிகளை நடுநின்ற நன்நெஞ்சோடு ஆராய்ந்தும் பாராட்டியும் உள்ளார்.

ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, சபாபதிநாவலர் முதலானோரைப் பற்றி உள்ளபடி ஒழிப்பு மறைப்பு இல்லாமல் எழுதியவர். சிவஞான சித்தியார் பற்றி எழுதிய போது, ''சுமார் முந்நூறு பொருள்களைத் தன்னகத்தே கொண்டதும், தருக்கம் இலக்கணம் என்னும் கண்ணிரண்டும் கொண்டு ஆராய்ந்து முடிபு காணப்பட்டதுமான ஒப்பற்ற ஆராய்ச்சி நூல் சிவஞான சித்தியாராகலின்'' என்பர்.

இவரின் சிவஞானசித்தியார் ஆராய்ச்சியைப் பாராட்டியவர் ஒருவர், ''சிவஞான சித்தியார் உரைக்குச் சிவகுருநாதன் சிறந்த ஆசிரியர்'' எனப் புகழ்வர்.

---

இத்தகைய புகழ்பெற்ற ஆராய்ச்சியாளரும் அனுபூதிமானுமாய சிவகுருநாதர் தாம் பல்கால் பயின்ற சிவஞான சித்தியார் அறுவர் உரைகளைப் பற்றி ஆங்காங்கே கூறியுமுள்ளார்.

திருமுறைகளிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் பெருமளவு ஈடுபாடுடைய ஈழநாட்டவரைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளின் உரையைத் தனியாக இணுவில் ஸ்ரீ நடராச ஐயர் அவர்கள் அச்சிட்டவர் என்றும், சிவஞான முனிவரின் உரையை நல்லூர் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் அச்சிட்டார்கள் என்றும் கூறுவர். இன்னும் சிவஞான சித்தியாருக்குத் தனியாக, கொழும்பு வழக்கறிஞர் திருவிளங்கம் அவர்கள் உரை எழுதியுள்ளார் என்றும் குறிப்பிடுவர்.

இன்னும் வதிரி சி. தாமோதரம்பிள்ளை என்னும் சைவப் பெரியார் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்களுடைய சித்தியார் உரையை அச்சேற்றியவர் என்றும் குறிப்பிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, தாமறிந்த சித்தியார் உரைகளைப் பற்றிக் கூறும் போது, சிவகுருநாதபிள்ளை அவர்கள், மறைஞான தேசிகர் உரையில் அளவையியல் கருத்துக்கள் மிகுதியாகவுள்ளன என்றும், சிவாக்கிரயோகியர் உரை வட சொற்கள் மிகுதியாகவும் வடமொழி ஆகமங்கள் முதலாய அரும்பெரும் பழைய நூல்களே பெரும்பாலும் மேற்கோளாகக் காட்டப்பெற்றன என்றும், நிரம்பவழகியர் உரை தனித்த சிறப்பொன்றும் இல்லாததென்றும், ஞானப்பிரகாசர் உரை நுண்ணிய கருத்துக்கள் தன்னகத்துக் கொண்டு திகழ்வது எனினும், சிவசமவாதத்தைத் தழுவியது என்றும் குறிப்பிடுவர்.

இனி, சிவஞான முனிவரின் உரை பொழிப்புரையாயினும் வடமொழி தென்மொழிகளிற் சிறந்து விளங்கும் பிரமாண நூன் மேற்கோள்களால் திகழ்வது என்றும், சொற் சுருக்கமும் பொருள் விளக்கமும் உள்ளது என்றும் குறிப்பிடுவர். சுப்பிரமணிய தேசிகர் உரை சிவஞான யோகிகளின் பொழிப்புரையைப் பத வுரையாக்கித் திகழ்வது என்றும் கூறுவர்.

---

## நல்லொழுக்கம்

தனக்கு மந்திரங்களையேனும் சாத்திரங்களையேனும் உபதேசிக்கும் குருவை அன்போடு வழிபடல் வேண்டும். குருவுக்கு வழிபாடு செய்யாது பெறும் வித்தை சித்தி பெறாது. கிரியை, ஞானம் என்னும் இரண்டினுள்ளும் ஞானம் சிறந்தது போல, கிரியாகுரு ஞானகுரு என்னும் இருவருள்ளும் ஞானகுருச் சிறந்தவன். அதிகமாகவேனும் அற்பமாகவேனும் ஆன்மா உய்யும் வழிக்கு உரியதை அறிவித்தவனையும் குருவென்றே நினைத்தல் வேண்டும். சமயச் சடங்கு செய்விப்பவரும் ஆசாரியரேயாவர்; அவரிடத்தும் வழிபாடு செய்தல் வேண்டும்.

— நாவலர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மொழிப் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்களின் பாராட்டு

இன்றைய தமிழ் நாட்டில் இணையற்ற வரலாற்றாசிரியரும், தமிழிலக்கிய வரலாற்றை நூற்றாண்டு வரிசையில் பெருமளவில் எழுதி வருபவரும் மும்மொழிப் புலமையுள்ளவரும், தலைசிறந்த சைவசித்தாந்தியும், சித்தாந்தப் பத்திரிகையின் ஆசிரியரும் காந்திய அபிமானியும், பதிப்பாசிரியருமான மு. அருணாசலம் அவர்கள் காய்தல், உவத்தல் இல்லாமல் எழுதுபவர். அவர் ஞானப்பிரகாச முனிவரைப் பற்றி எழுதியும், இவர் செய்த உரையை மதித்துப் பாராட்டியும், இவரைக் கண்டித்த சிவஞான முனிவரைக் கூசாது கண்டித்து எழுதியும் உள்ளார். பெரியவரான சிவஞான முனிவர் தம்படிப்புக்கு மாசுபடும் வகையில் இவ்வாறு கண்டித்திருத்தலாகாது என்று எழுதிய அருணாசலம் அவர்கள், ஞானப்பிரகாச முனிவரின் கடல்போல் பரந்த வடமொழியறிவும், தர்க்க நூலறிவும் சிவஞான முனிவருக்கு வித்துவக் காய்ச்சலை உண்டாக்கியிருக்கலாம் என்பர். இனி அருணாசலம் அவர்களின் பாராட்டையும் கருத்துரையையும் அவர் வசனக் கட்டுக் கோப்பிலேயே நாமறிதல் நன்றாகும்.

"ஞானப்பிரகாசர் ஆகமங்களிலும் வடமொழி நூல்களிலும் அஷ்டப் பிரகரண சம்பிரதாயங்களிலும் பத்ததி ஆராய்ச்சியிலும் மிகவும் வல்லவர். தமது உரையில் அகோரசிவாசாரியர், சோமசம்பு சிவாசாரியர் ஆகிய இருவர் பத்ததிகளையும், சர்வாகமப் பிரமாண்யம், இரத்தினத் திரயம், மோட்ச காரிகை போன்ற பிரகரண நூல்களையும் பதினெட்டு ஆகமநூல்களையும், இராமாயணம், பிரமாண்ட புராணம், ஞானசித்தி சதுர்வேத தாத்பர்யம் போன்ற பிறவடமொழி நூல்களையும், பதஞ்சலி, ராமகண்டகுரு முதலியோரையும் மிகவும் அதிகமாக எடுத்துக்காட்டுகிறார். ஆகமங்களைச் சிவவசனம் என்பர். எமது கர்த்தாவினது சைவ சித்தாந்த மார்க்கம் என்பர். சிவசைவாசாரியர், சைவபுராணிக மதானுசாரியர் என்பன சில தொடர்கள்."

அன்னிய சாதியும் தன்சாதியும் என்ற அளவைப் பாடல் உரையில் இவர் தன்னியல்பு, பொதுஇயல்பு என்ற இரண்டையும் விரித்துக் கூறுகிறார். பதார்த்தங்களைப் பற்றிக் கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது; பதி, பசு, பாசம் என்ற மூன்றாகப் பிரித்து, பதிபதார்த்தத்தை, அநாதிமுத்தசிவன், ஆதிமுத்தசிவன், அபரமுத்திசிவன் என்ற மூன்றாகவும்; பசுபதார்த்தத்தை விஞ்ஞானகலன், பிரளயாகலன், சகலன் என்ற மூன்றாகவும்; பாசபதார்த்தத்தை ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்றாகவும் பாகுபடுத்தி, இரண்டு இயல்புகளையும் பொருத்தி உரை எழுதுகிறார்.

ஒவ்வொரு பாடலுக்கும் அதன் கருத்தைத் தொடக்கத்தில் உரைக்கிறார். முறுகுதல், தர்ப்பித்தல், செபித்தல், குறுகுறுப்பேவல், ஊகித்தல், செபித்தல், கேட்டுக் கிரகித்துச் சிந்தித்துத் தெளிந்து தியானித்தல், சமாதித்தல், சாட்சாத்கரித்தல் என்பன நித்திய கன்மம். விருத்தர் எழுபது வயதுக்கு மேற்பட்டவர். பல இடங்களில் இவர் உரை எளிதான உரையாடல் போல அமைந்துள்ளது. ''அறியாமை அறிவகற்றி'' என்ற பாடலுக்கு மிகவும் விரிவான கட்டுரை போன்ற உரை எழுதியுள்ளார்.

முத்தி வகைகளைக் கூறுமிடத்து 35 வகைவாதிகளுக்கு இது மோட்சம் என்கிறார். சில இடங்களில் பாடல்களின் வரிசையை மாற்றி உரைக்கிறார், தீட்சை வகைகளைப் பின்னும் பெருக்கி உரைக்கிறார். ஓரிடத்தில் கருத்துக்களை விரிவாகச் சொல்லிவிட்டு இனி அப்பால் நடப்போம் என்கிறார். பத்தாம் சூத்திரவுரையில் ''முன் பின் சில இடங்களிலேயும் மிகுந்து கூறியது கூறலைக் குறித்தும் திரிபதார்த்தஞ் சூக்கும ஸ்வரூப பரீக்ஷை பண்ணாது லோகச் சொற் சுட்டு மட்டுக் கட்டு விட்டு முட்டத் தொட்டுப் பரீக்ஷை பண்ணுதலானும் உரை விரித்துரையாதது உணர்ந்து கொள்க'' என்கிறார். பல இடங்களில் பொருள்வெளி என்று எழுதிக் கொண்டு போவர். சில இடங்களில் ஓரே பாடலில் சில தொடர்களுக்கு மட்டும் உரை எழுதிவிட்டு மற்றது வெளிப்பொருள் என்று எழுதுவார். ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி, ஸ்ரீமத் மாணிக்கவாசகர், ஸ்ரீமத் அருணகிரிநாதர் என்னுமிவர்கள் தேவாரத்தும் திருவாசகத்தும் அலங்காரத்தும், ''வழித்தலைப்படுவானுன்னை முயல்கின்றேன். உன்னைப் போல் என்னைப் பாவிக்க மாட்டேன்.'' என்றும், ''ஆனந்தவார் கழலே ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்'' என்றும், ''என்னை உன்னில் ஒன்றாய் விதித்து'' என்றும் இப்பாவனையைத் தானே படித்தார்கள் என்று ஆறாஞ் சூத்திர இறுதியில் இவர் எழுதியுள்ளார்.

இவரும் சிவாக்கிரயோகியர் போலச் சில இடங்களில் ஆகமம் பிரமாணங்களை விரிவாக எடுத்துக் காட்டுகிறார். அன்றியும், வடமொழித் தொடர்களைத் தமிழ் எழுத்தாலேயே எழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது இவருடைய இயல்பு. தமிழ் நூல்களில் இவர் மேற்கோள் காட்டுபவை தொல்காப்பியம், நன்னூல், திருமந்திரம், தேவாரம், திருவாசகம், ஞானாமிர்தம், கோயிற் புராணம், சிவப்பிரகாசம், திருவாதவூரடிகள் புராணம், சிவதருமோத்தரம், தத்துவக் கட்டளை என்பன. இவர் சிவதருமோத்தரம், தத்துவக் கட்டளை ஆகிய இரு நூல்களையும் குறிப்பிட்டிருத்தல் சிறப்பாகும். சிவதருமோத்தரம் என்னும் நூலை இவர் எடுத்துக்காட்டுதலால், இவர் அந் நூலாசிரியர் காலத்துக்குப் பின்வந்தவர் எனலாம். மறைஞானசம்பந்தர் காலம் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

''சிவஞான சுவாமிகள் எவ்வளவு பெரியவராயிருப்பினும், அவர் கூற்று பொருந்தும் என்று சொல்வதற்கில்லை. பெரும் பண்டிதர்கள் தங்கள் புலமையால் எதையும் சாதிப்பார்கள் என்பதற்கு அவரே சான்றாவார். கம்பராமாயணத்தின் நாந்திச் செய்யுளாகிய 'நாடிய பொருள் கைகூடும்' என்ற பாடல் முற்றும் பிழை என்று அவர் காட்டி, முற்றும் சரி என்று பிறகு நிறுவியது அவருடைய புலமையை மட்டுமே காட்டும்; உண்மையாகாது. அது போன்றதே ஞானப்பிரகாசருரை மறுப்பும், ஞானப்பிரகாசரைக் கடும் சொற்களால் வைதும் இருக்கிறார். ''

---

**வேதசிவாகமங்களே முத்திநெறியை அறிவிப்பன**

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
 ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னில்
 இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினா னிவையெல்லா மோரிடத்தே காண
 நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினா னிவையெல்லா மருமறையா கமத்தே
 யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்

— சிவஞானசித்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவகைச் சமயம்

அருணந்திசிவாசாரியர் தமது சிவஞானசித்தியாரில் மங்கல வாழ்த்துப்பாடும் போது சிவபெருமானைத் துதிக்கு முகமாகப் பாடிய பாடல் படிக்க வேண்டிய தொன்றாகும்.

"அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது வுடைத்தாய் வேதா
கமங்களின் குறியிறந்தங்
கறிவினில் அருளான் மன்னி
அம்மையோ டப்பனாகிச்
செறிவொழி யாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம்"

அடுத்துப் பின்னர் மறுசமயங்களின் முத்தித் தானங்களை வகுத்துரைத்த போது பாடிய பாடலையும் அறிதல் நன்றாம்.

"மொய்தரு பூதமாதி மோகினி அந்தமாகப்
பொய்தரு சமயமெல்லாம் புக்குநின் றிடும்புகன்ற
மெய்தரு சைவமாதி இருமூன்றும் வித்தையாதி
எய்துதத் துவம்களேயும் ஒன்றுமின் றெம்மிறைக்கே."

இங்கே அறுவகைச் சமயம் என்றும், சைவமாதி இரு மூன்றும் என்றும் கூறிய ஆறு சமயங்களையே ஆன்றோர் **அகச்சமயங்கள்** என்று வகுத்தார்கள்.

அகச்சமயங்கள் என்று வகுத்தவர்கள் அக்காலத்தில் அகப் புறச் சமயம், புறச் சமயம், புறப்புறச் சமயம் என்றும் வேறு சமயங்களை அவற்றின் கோட்பாடு கொண்டு வகுத்தார்கள்.

வேதங்களையும், ஆகமங்களையும் ஏற்றுக் கொண்டவை அகச்சமயங்கள். வேதங்களை ஏற்று ஆகமங்களைப் பிறழ்வாக ஏற்றவை அகப்புறச் சமயங்கள். வேதங்களை ஏற்று ஆகமங் களை ஏற்காதவை புறச்சமயங்கள். வேதங்களையும் ஆகமங்களை யும் முற்றாக ஏற்காதவை புறப்புறச் சமயங்கள்.

சிவபெருமான் சமயமாறனையும் தாயென வளர்த்தார் என்றும், ஆறும் மாறா வீறுடையன என்றும், அறுவகைச் சமயத் தோர்க்கும் வீடு பேறாய் நின்ற இறைவன் என்றும், இருமுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்கள் என்றும், அறிவினரால் மிக்க அறுவகைச் சமயத்தவர்க்கு அங்கே யாரருள் புரிந்தார் என்றும் திருமுறைகள் தந்த செல்வர்கள் போற்றுவர்.

சிவபெருமானை வேதப் பொருள் என்றும், வேதநாயகன் என்றும், வேதங்கள் ஐயா என வழைப்ப நிற்பவன் என்றும் திருவாசகம் பாடும். இன்னும் அவனே ஆகமமாகி நின்றருள்பவன் என்றும், அவன் "மன்னுமாமலை மகேந்திரமதனில்" ஆகமம் சொன்னவன் என்றும், "கேவேடராகிக் கெளிறது படுத்தும், மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்" என்றும் மணிவாசகம் பாடும். பெரிய விருப்பத்தைத் தருகின்ற ஆகமம் சைவ சமயத் தவருக்கு உயிர்நாடி. சைவர் ஆகமாந்திகள்.

இனி, சைவத்தை முதலாக வைத்து எண்ணப்பெற்ற அகச் சமயத்தவர்கள் யாவர் என்பதே ஆராய்வதற்குரியதாகும். அவ் வாறு சமயங்களும் ஒன்றோடு ஒன்று சென்றுறு நிலையில் வீறுடையவையாகும்.

அகச்சமயங்கள் ஆறனையும் விளக்கிய ஞானப்பிரகாச முனிவர், அவை சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்பர். இன்னும் இச்சமயத்தவர் தொழ நின்ற இறைவன் அவரவர் கோட்பாட்டுக்கும் பக்குவத்துக்கும் அமைவாகக் கோலங் கொண்டருளுவன் என்பர். அவ்வாற ருளுகை அவரவர் பொருளாயமையும் என்க.

சைவத்தில் தாண்டவ பூஷணன் என்னும் மூர்த்தியாயும், பாசுபதத்திற்குத் திருநீறும் சடை முடியும் தரித்த மூர்த்தியாயும், மாவிரதத்திற்கு என்பு மாலை தரித்த மூர்த்தியாயும், காளா முகத்திற்கு, படிகம் புத்திரதீப மணிகள் தரித்த மூர்த்தியாயும், வாமத்திற்கு அக்கினியும் பூணூலும் தரித்த மூர்த்தியாயும், வைர வத்திற்கு தமருகமும் சிலம்பும் தரித்த மூர்த்தியாயும் தோன்றி யருள்புரிவன். இவ்வாறு சமயத்து அருந்தவத்தருக்கு அரும்பொரு ளாயுள்ள ஓரியல்பு முக்கண்ணுள்ள தோற்றமாகும் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவரின் சிவப்பேறு

ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் முற்றுந் துறந்த முனிவராய்ப் பெருஞானியாய்ச் சிதம்பரத்தில் தங்கியிருந்து கடுந்தவஞ் செய்து, ஒரு பங்குனி மாதத்துப் பூச நாளில் சிவப் பேறெய்தினார் என்ப.

தமிழ் நாட்டில் திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் என்றும், சிதம்பரம் ஞானப்பிரகாசர் என்றும் பெருமதிப்புடன் தம் பெயர் நிலவுமாறு பணிபுரிந்த பெரியார்; சாலிவாடிபுர ஞானப்பிர காசர் எனவும் வழங்கியவர். சாலிவாடிபுரம் என்பது எங்கள் திருநெல்வேலியேயாம். சாலி – நெல் ; வாடி – வேலி.

ஞானப்பிரகாச முனிவர் சிவபூமியாகிய இலங்கையிலே தோன்றிப் பாரம்பரிய பழக்கத்தில் கைவந்த சரியை வழியில் நின்று, திருப்புகலூரில் பெரிய அண்ணாசாமி என்னும் ஆசாரிய சுவாமிகளிடம் உயர் தீட்சைபெற்றுக் கிரியை வழிநின்று, யோக பூமியாகிய திருவண்ணாமலையிலே யோகநெறி நின்று, அடுத்து நான்காம்நெறியாய ஞானவழிக்குரிய ஆகாயத் தலமாய சிதம் பரத்திலே திருப்பணிகள் செய்தவாறே ஞான நூல்களை ஆராய்ந்தும் எழுதியும் ஞான நிட்டை கூடிச் சிவசமாதி யெய்தினார் என்பதே அறிய வேண்டியதாகும்.

### தியானம்

ஆதியுமந்தமும், இறப்பும் பிறப்பும், இரவும் பகலும், சுகமுந் துக்கமும் எங்களுக்கில்லையென்னும் திருமந்திரத்தை எவனொ ருவன் மறவாமல் தியானஞ் செய்கிறானோ அவனுக்கு ஒரு குறை யும் வராது.

— சிவயோக சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசரின் காலம்

யாழ்ப்பாணத்தில் பறங்கியர் ஆட்சி நிலவிய காலம் 1621 — 1658 ஆகும். எனவே 1623ஆம் ஆண்டளவில் நாட்டை விட்டுப் போன ஞானப்பிரகாசர் வயது முப்பதாயிருக்கலாம் எனக் கருதினால், அவர் 1590ஆம் ஆண்டினை அடுத்துத் தோன்றியிருத்தல் கூடும். ஞானப்பிரகாச சுவாமிகள் சிதம்பரத்தில் மடமும் குளமும் அமைத்த காலம் 1650 எனக் கூறுவர். அன்றி, தருமபுர வாதீனத்துப் பெரியவருள் ஒருவரான வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் காலம் 1660 ஐ அடுத்தகாலம் என்பர்.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள், தருமபுரவாதீனத்து முத்தி நிச்சயம் என்னும் நூலுக்குப் பேருரையும் ஞானாவரண விளக்கம் என்னும் நூலுக்கு மாபாடியமும் எழுதிய காலம் 1660 அளவிலாகவே, அவர் கையாண்ட மேற்கோள்கள் உள்ள நூல்கள் எழுதிய ஞானப்பிரகாச சுவாமிகள் காலம் 1660ஆம் ஆண்டுக்கு முன்னராயிருத்தல் வேண்டும். எனவே ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழ் நாட்டில் பணி செய்த காலம் 1625 — 1650 எனக் கொள்ளலாம். அன்றி, பறங்கியர் என வழங்கிய போத்துக்கேயர் எங்கள் பிரதேசத்தில் அதிகாரம் பெற்றிருந்த காலம் 1621 — 1658 என்பதும் கருத வேண்டியதாகும். இக் கால கட்டத்திலேயே அம்மகான் பசுக் கொலைக்கஞ்சிப் பாரத நாடு சென்றவராவர்.

## ஞானப்பிரகாச முனிவரின் சமகாலப் பெரியவர்கள் :

ஞானப்பிரகாசர் பறங்கிக்காரருக்குப் பசுக் கொடாமல் நாட்டை விட்டுப் போன முறையில், அது கொடாமல் நீங்கிய வேறு சிலரும் இருந்தார்கள். பறங்கியரின் அரசாங்க அலுவலகத்தில் உத்தியோகமேற்ற சண்முகநாயக முதலியார் என்பார், தமது உத்தியோகத்தை விடுத்துப் பறங்கியர் தொடர்பையும் விட்டுத் தூர விலகியிருந்தார் என்பர்.

இவ்வாறே அளவெட்டி ஊரினரான வைத்தியநாதர் என்பாரும் எல்லாவற்றையும் துறந்து முனியாகிச் சிதம்பரம் சென்றுறைந்து, வியாக்கிரபாத புராணம் பாடினார் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் வரணியைச் சேர்ந்த தில்லைநாதர் என்பாரும் ஞானப்பிரகாச முனிவரைப் பின் தொடர்ந்து அவருக்குச் சீடரா கித் தீட்சை முதலியவற்றாற் சிறந்து, சித்துக்கள் பெற்று வேதாரணியப் பகுதியில் வாழ்ந்தார் என்பர். ஒருசமயம் தஞ்சா வூர் மன்னரின் மகளுக்குக் குடலில் உண்டான நோய் மாற்ற முடியாத நிலையில் இருப்பது கண்டவர்கள் இவரை அணுகி உதவி செய்யுமாறு விண்ணப்பித்ததும், இவர் தமது சந்தியா வந்தனஞ் செய்த வேளையில் தமது அநுட்டான தீர்த்தத்தில் மந்திர மோதிக் கொடுப்ப, அவள் நோய் தீர்ந்ததென்பர். இத னால் மகிழ்ந்த மன்னன் இவருக்கு வேதாரணியத்தில் வீடு வளவும், கோயிலதிகாரமும், உப்பளத்திலும் துறைமுக ஆயத் திலும் வருமானத்திற் பங்குரிமையும் பிறவும் கொடுத்தான். இவற்றைக் கொண்டு தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் வேதா ரணியத்தில் வேண்டிய பணிகள் செய்து, அங்கே யாழ்ப்பாணத் தாரின் செல்வாக்கைத் தேடிவைத்தார் என்பர். ஈழமண்டல சதகமுடையாரும் இதனை வற்புறுத்திப்பாடுவர்.

திடமா மனத்தன் சிவயோகி
யாந்தில்லை நாத னெனப்
படமா லிகந்த பெரியோன்
வரணிப் பதித் தம்பிரான்
விடமார் களத்தனெ மாரூர்த்
தியாகன் விழாக்கிரத
வடமா குவடு தொடுத்தான் முன்
னீழநன் மண்டலமே.

---

## பாவபுண்ணியங்கள்

''புண்ணியம் ஆம், பாவம் போம்'' என்பது ஔவையார் வாக்கு. புண்ணியம் செய்யத்தக்கது; பாவம் விலக்கத்தக்கது என்பது கருத்து. ஒளியாகிய கடவுளின் உபகாரங்களினால், புண்ணியம் இது, பாவம் இது என்று நாம் அறிய வல்லவர்களாயி ருக்கின்றோம். புண்ணியம் ஆராயப்பட வேண்டியது. 'போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்' என்பது பெரியோர்கள் வாக்கு. புண்ணியத்தை ஆராய ஆராய அதில் நமக்கு ஒரு பற்று உண்டாகும். அது நல்லதே.

— இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவரின் சீடர் பரம்பரை

பழைய காலத்து முற்றுந் துறந்த முனிவர் போல் ஞான நெறி கைவந்த ஞானப்பிரகாச முனிவருக்குத் தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் சீடர்கள் சிலர் இருந்தார்கள். தமிழ் நாட்டில் இவர் உரையைக் கண்டித்த சிவஞானத் தம்பிரானுக்கு மறுப் பாக வச்சிரதண்டம் எழுதியவரும் சீடருள் ஒருவராவர். வட மராட்சியில் வரணிப் பதித் தம்பிரான் என வழங்கிய தில்லை நாதத்தம்பிரான் என்பாரும் ஞானப்பிரகாச முனிவரின் சீடரே யாவர். அவரும் பசுக் கொலைக்கு அஞ்சியே பாரதநாடு சென்று றைந்தவர். அங்கே துறவு வாழ்வு மேற்கொண்டு தீட்சை வகை களில் உயர்ந்து சிவபூசா துரந்தரராய் இருந்தவர்.

அக்காலத்துத் தஞ்சாவூர் மன்னனின் பிள்ளைக்குத் தீராத நோய் ஒன்று குடலை வெகுவாக முறுக்கி வருத்தியது. எவ்வித வைத்தியத்தாலும் நீங்காத நோயைத் தில்லைநாதத் தம்பிரான் தமது சிவபூசைத் தீர்த்தங் கொண்டு நீக்கித் திருநீறளித்துக் குணப்படுத்தி விட்டார். இதனால் மகிழ்ந்த மன்னன், தனது பரி பாலனத்திலிருந்த திருமறைக்காட்டு உப்பளத்திலும், துறை முகத்து வருமானத்திலும் தம்பிரான் சுவாமிகளுக்கு ஓரளவு வருவாய் அளித்ததோடு போதிய நிலமுங் கொடுத்தார் என்பர். இதனால் திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தில் யாழ்ப்பாணத்தார் குடியிருப்புகள் உண்டாவதற்குக் காரணமா யிற்று. திருமறைக்காட்டிலும் வரணியிலும் சைவாதீனங்கள் நெருக்கமான உறவு கொள்வனவாயின.

பெருஞானியாய தாயுமானசுவாமிகள் தந்தையார் கேடிலி யப்பபிள்ளை என்பார், வரணி அல்லது கரணவாய் ஊரின் தொடர்பு உள்ளவர் என்று நடேசபிள்ளை அவர்கள் ஆராய்ந்து அடிக்கடி கூறிவந்ததும் உண்டு. திருமறைக்காடு ஆதீனத்துக் கர்த்தராய் ஒரு காலத்தில் பெரும்புகழ் பெற்ற திருஞானசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்த தேசிகர் என்பாரும் வரணியூர்த் தொடர்புள்ளவர் என அறியக்கிடக்கிறது. ஞானப்பிரகாச முனிவரின் குடும்பத்தினரின் வழித்தோன்றலாய் வந்தவரொருவர் திருநெல்வேலி வேதவனத் தார் என்பவர். இப் பெயர் வழங்குவதற்குக் காரணம் வேதா ரணியமே என்போம்.

இவ்வாறாக வேதவனத்தார் என்பாரின் மகள் சிவகாமி. சிவகாமி என்பாரை நல்லூர் பரமானந்தர் கந்தப்பிள்ளை மணந்து பெற்ற மைந்தனே ஆறுமுகநாவலர் அவர்களாவர். சைவம் வளர்க்கும் சிந்தனை ஆறுமுகநாவலரவர்களுக்குக் கருவிலு ருவாய போதே உண்டான தென்பது தேற்றம்.

---

## நாவலர் பெருமானின் பேச்சு

இக்காலத்திலே பல மேடைப் பேச்சாளர்களைப் பார்க்கிறோம். ஏன், உபதேச குருமூர்த்திகளாக இருக்கவேண்டியவர்கள்கூட உபநியாசகர்கள் ஆகிறார்கள். பேச்சுக்களோ தண்ணீரிற் கலந்த பாலாக உள்ளது. நாம் அன்னப்பறவையாக இருந்தால், மலை கெல்லி எலியைப் பிடிப்பது போல, பெருமுயற்சி செய்து சில கருத்துக்களை உணரலாம். அன்றியும் எத்தனை ஏச்சுக்களும் ஏத்துதலும் தூற்றுதலும் உள்ளன. இவற்றிற்கும் பேச்சின் தலைப்பிற்கும் ஒரு தொடர்பும் இராது. * இவர்கள் பேச்சோ எடுத்த பொருளுக்கு ஏற்றதாக, தரம் குறையாததாக - போற்று தலும் புகழ்ச்சியும் கொண்டு ஆட்களை ஏய்க்காததாக - உண் மைக்கு உறைவிடமாக இருக்கும் என்றும், இடையே மக்களை நகைக்க வைக்க வேண்டும் என்பதற்காகக் கோமாளித் தனமும் குறும்பும் கலந்து பேசமாட்டார்கள். நாம் பேசுவது சிவத்தையும் - சிவனடியாரையுமே. இதில் நகைச்சுவைக்கு இடம் எங்கே என்பார்கள் என்றும், அன்றியும், ''ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல்'' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்காக இருக்கும் என்றும், இராம நாதபுரம் பொன்னுச்சாமித்தேவர் அவர்கள் பாராட்டுவார்கள் என்று சிவசாமிச் சேர்வைக்காரர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

* இவர்கள் — நாவலர் பெருமான்

மகா வித்துவான்
**ச. தண்டபாணி தேசிகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் — திருநெல்வேலி

# ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்

# ஞாபகார்த்தச் சபை—1994

*தலைவர்*

**திரு. ஆ. மகாலிங்கம்**

*உப தலைவர்கள்*

**கலாநிதி சி.க. சிற்றம்பலம்**
**திரு. மா. வேதநாதன்**

*செயலாளர்*

**திரு. த. சி. சிவநேசன்**

*உப செயலாளர்*

**திரு. க. பரமநாதன்**

*பொருளாளர்*

**திரு. சி. சதாசிவம்**

*நிர்வாகசபை உறுப்பினர்கள்*

**திரு. வே. தம்பியையா**
(முன்னைநாள் செயலாளர்)
**ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்**
**திரு.ச. தங்கமாமயிலோன்**
**செல்வி சி. அருளம்பலம்**
**ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org